[illegible] 1928-29

மலர் 17 இதழ் 3

JC
Rasmani, MMVO.
N26.17.3.
186767

Regd. No. M. 916.

# THE VEDANTA DIPIKA

# வேதாந்த தீபிகை.

அக்ஷயவருஷ,
1926—1927.
ஸம்புடம் 17.

மார்கழிமீ.
DECEMBER.
ஸஞ்சிகை 3



பத்ராதிபர்.
ஸ்ரீ. வாஸுதேவா
சார்ய

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 MAY 1927
MADRAS

## விஷய ஸூசிகை


1. நமது லௌகிக ஸாஹ்நத்துக்கள்:—
வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர். 77
2. கண்ணன் கழலிணைப் பதிகம்:— சடகோப தாஸர். 85
3. பிரம்ம மீமாம்ஸா ப்ரமேய ஸங்கிரஹம்:— ஸ்ரீ. உ. வேதாந்த
சிரோமணி தோட்டாலம் வேணுகோபாலாசாரியர். 93
4. புஸ்தக விமர்சம்:— வ்யாஸ ஸித்தாந்த மார்த்தாண்டம் 100
5. கடிதங்கள்:— 103
6. பத்ராதிபரின் குறிப்புகள்:— 1(9
7. வேதார்த்த ஸங்க்ரஹம்:—
ஸ்ரீ. உப. ஸ்ரீ. வாஸுதேவாசார்யர். 9
8. ஸ்தோத்ர ரத்நம்:— 9


K. R. Press, Madras.
வருஷச் சந்தா ரூ. 3—0—0.] [ஸஞ்சிகை 1-க்கு அணா 6

பாதி விலை! ஒரு மாதம் வரை பாதி விலை!!




அசல் விலை ரூ. 14.
பாதி விலை ரூ. 7.

22-காரட். ரோல்டு கோல்டு கை கெடியாரம். 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயிருக்கும், இக்கெடியாரங்களில் எம்மாதிரிஷேப் ஆனபோதிலும் ஒவ்வொரு கடியாரமும் ஒரு பட்டுப் பட்டையுடன் அனுப்பிவைக்கப்படும்.

☞ ஸ்வான் ஹவுஸ், தபால்பெட்டி, நெ. 508,
பி. டி. மதராஸ்.

# இனும்! இனும்!!







இச்சமயம் தவறாதீர்கள்!! சிலநாளைக்கு மாத்திரம்!!

உலகமெங்கும் ப்ரஸித்திபெற்ற தாராலீவர் ஊக்கட் லீவர் கடியாரம் விலை ரூ. 5-0-0 உள்ளது. உள் டையலின்மேல் ஐந்துவருஷம் உத்திரவாதம். காலத்திற்கு சரியான மணியை காட்டக்கூடியது. இக்கடியாரத்தை ஆர்டர் செய்கிறவர்களுக்கு ஒரு "C" டைம்பீஸ் இனுமாகக்கொடுக்கப்படும். இச்சமயம் தவறுதீர்கள். சில நாளைக்கு மாத்திரம். கடியாரம் ஒன்றுக்கு விலை ரூ. 5-0-0 முந்துங்கள்.

விலாசம்:— காப்டன் வாச் கம்பெனி,

தபால்பெட்டி 265 மதராஸ்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 MAY 1927
MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர். வங்கீபுரம், ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 17.] அக்ஷய வருஷ, மார்கழி ௴ [ஸஞ்சிகை 3.

[illegible]
[illegible]

[ஸ்ரீபாகவதம் 1-9-28.

## நமது லௌகிக ஸுஹ்ருத்துக்கள்.

[வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.]

இங்க்லீஷ் பாஷையை அப்யஸித்து, அதனால் ஏற்படும் யோக்யதையைக் கொண்டு ஜீவநம்செய்துவரும் நமது ஸுஹ்ருத்துக்களை நாம் லௌகிகரென்று வ்யவஹரிக்கின்றோம். அவர்கள், தமது பால்யம் முழுவதையும் பாஷாந்தராப்யாஸத்திற் செலுத்தி அந்த அப்யாஸம் பூர்ணமானவுடன் ஜீவநத்தில் ப்ரவ்ருத்தித்துவிட்டபடியால், நமது சாஸ்த்ர பரிசயத்திற்கும் நமது வைதிக வித்வான்களுடைய ஸம்ஸர்க்கத்திற்கும் அவர்களுக்கு அவகாசமே லபியாமல் போனதுடன், வேறு சாஸ்த்ரங்களுடைய பரிசயமும் அதன் ஸம்ஸ்கார விசேஷங்களும் பலமாக ஏற்பட்டிருக்கின்றன. பரிசயம் ஸம்பவிக்கும் இடத்தில் அபிமாநம் ஏற்படுவது ஸ்வபாவமாதலால், அபரிசிதங்களான நமது சாஸ்த்ரங்களில் ஒருவித அபிமாநக்குறைவும், பால்யம் முதல் பரிசிதமான சாஸ்த்ராந்தரங்களில் அபிமாந விசேஷமும் அவர்களுக்கு இதன் பலமாக ஸம்பவிக்கக்கூடும். இதனுடன், அவர்களுக்கு வித்யாப்யாஸகாலத்தில் பாஷாந்தரத்தை ப்ரவசநம் செய்யும் உபாத்யாயர்களும் நமது சாஸ்த்ரங்களில் விச்வாஸக்குறைவுள்ளவர்களாக நேர்ந்திருந்தால், அவிச்வாஸம் ஸாக்ஷாத்தாக போதிக்கப்படாவிட்டாலும்,



186767.

அப்படிப்பட்ட உபாத்யாயர்களுடைய ஸம்பர்க்கமே அந்த விச்வாஸக் குறைவை அபிவ்ருத்தமாகச்செய்யப் போதுமான காரணமாகும். தவிரவும், அப்யஸிக்கப்படும் க்ரந்தங்களும் கேவலம் த்ருஷ்ட விஷயங்களை ப்ரதிபாதிக்குமவையாய் ஸம்பவித்துவிட்டால், வேறு வினையும் வேண்டுமோ ? இம்மாதிரியான காரண ஸமூஹங்கள் நமது லௌகிக ஸுஹ்ருத்துக்கள் விஷயத்தில் வ்யாபரித்திருக்கின்றன என்பதை நாம் அறிவோம். ஆகையால், அவர்களுடைய புத்தி மாறுட்டத்தை அடைந்திருந்தால், அதைப் பற்றி நாம் ஆச்சர்யப்படவில்லை. காரணங்கள் ஸந்நிஹிதங்களாக இருந்தால், கார்யம் ஸம்பவியாமலும் இருக்குமோ ?

நமது ஸுஹ்ருத்துக்களின் கொள்கைகளை ஆராய்ச்சி செய்தால் அவை பின்வருமாறு காணப்படும். 'சாஸ்த்ரங்களில் பெரும்பாகம், நமக்கு ப்ரத்யக்ஷமல்லாத விஷயங்களைப்பற்றி விசாரித்து, அவைகளைப்பற்றி யுக்திக்குப்பொருந்தாத நிர்ணயங்களைச் செய்துகொண்டு அவைகளை வஸ்து ஸ்திதிபோல பேசுகின்றது; ஆகையால் அவை நம்முடைய நம்பிக்கைக்குப் பாத்ரமாகமாட்டா. சாஸ்த்ர கர்த்தாக்கள் ஜ்ஞானத்தில் சிறந்தவர்களாக இருந்திருக்கக்கூடும்; பெரியோர்களாகவும் இருந்திருக்கலாம்; அப்படிக்கு இருந்த போதிலும், அவர்களும் நம்மைப்போன்ற மனிதர்களானபடியால், அவர்கள் சொல்வது தவறுதலான நிர்ணயமாக இருப்பதும் ஸஹஜமே. சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டுள்ள விஷயங்களை ஸாக்ஷாத்தாக அர்த்தவிசாரம் செய்ய நமக்குப் பாஷாஜ்ஞானமும் அவகாசமும் இல்லாமல் இருந்தபோதிலும், பாச்சாத்யர்களால் செய்யப்பட்டுள்ள பாஷாந்தர மொழிபெயர்ப்பைப் படிக்கும்பொழுது, அந்தச் சாஸ்த்ரங்கள் நிஸ்ஸாரங்களென்றும், சிற்சில இடங்களில் சில அம்சங்கள் குணவத்தாகத் தென்பட்டபோதிலும் அவை பூர்வாபர விரோதங்களால் பாதிதங்களாக இருக்கின்றனவென்றும் தோன்றுகின்றது. வேதங்களில் அக்நி இந்த்ரன் முதலிய தேவதைகளைக்குறித்து, ஆயுஸ் ஆரோக்யம் தநதாந்ய ஸம்ருத்தி முதலியவைகள் ப்ரார்த்திக்கப்படுகிறபடியால், அவை, நாகரிகமற்ற ஆதிகாலத்து ஜநங்களின் நடவடிக்கைகளைப்பற்றிப் பேசுகின்றனவென்றே நாம் நினைக்கவேண்டும். ஆகையால், வேதங்களுக்கு வைதிகர்கள் கொடுக்கும், கௌரவம் கேவலம் மௌட்யத்தின் பரீவாஹமென்றே நாம் நினைக்கிறோம். தத்வ விசாரம் செய்யும் உபநிஷத் பாகங்களும் இக்காலத்திய மில், ஹாமில்டன், ஹிகல், காண்ட் முதலியவர்களாற் செய்யப்படும் தத்வவிசாரம் போன்றவைகளே; அவரவர்களுடைய புத்திக்கும் யுக்திக்கும் தக்கபடி அவரவர்கள் நிர்ணயம் செய்திருக்கிறார்கள்; இவர்களைக்காட்டிலும் புத்திமத்தரர் ஒருவர் ஜநிக்கக்கூடுமாகையால் அப்படி ஒருவர் வருங்காலத்தில் இவர்களாற் செய்யப்பட்டுள்ள நிர்ணயங்களெல்லாம் மாறிவிடும் என்று நாம் அபிப்ராயப்படுகிறோமே தவிர, அவை ஆத்யந்திகமான தத்வநிர்ணயங்களென்றாவது ப்ரமத்திற்கு ஆஸ்பதமற்றவை என்றாவது நாம் நினைக்கவில்லை. புராணங்களிடத்தில் எங்களுக்கு அதிகமான கௌரவபுத்தி இல்லை. அவைகளில் காணப்படும் உபாக்யானங்களெல்லாம் பாலர்களுடைய கதை போலவே தோன்றுகின்றன. அவைகளிற் சொல்லப்பட்டுள்ள தேசசரித்ர பாகமும் பூகோளவிவரணமும் இப்பொழுது நாம் ப்ரத்யக்ஷமாக அறிந்திருப்பதற்கு விருத்தமாக இருப்பதால், அதிமாத்ரம் வெறுக்கத் தகுந்தவைகள். ஸ்ம்ருதிகளைப்பற்றியும் எவ்வித உத்க்ருஷ்ட ஜ்ஞானமும் எங்களுக்கு இல்லை. நிரர்த்தகங்களான அநேக கர்மங்களை அவைகள் விதிக்கின்றன என்பதும், அவைகளுட் சொல்லப்பட்டுள்ள கர்மகலாபங்களைச் செய்வது ஜகத்தின் அபிவ்ருத்தியை உத்தேசித்துப் பரிச்ரமப்படும் ஜநங்களுக்கு ஸாத்யமில்லையென்பதும், அப்படிச்செய்ய ஒருவன் ஆரம்பித்தாலும் அதனால் ஸ்வல்ப நன்மைகூட கிடைக்க ஹேதுவில்லையென்பதும், ஒருகால் எப்பொழுதாவது முற்காலங்களில் அவை ஜகத்தின் ச்ரேயஸ்ஸுக்குக் காரணங்களாக இருந்தாலும் இக்காலத்துக்கு அவை ஒரு ப்ரகாரத்திலும் ஒத்துவரமாட்டா என்பதும் எங்களுடைய அபிப்ராயம். அப்ரத்யக்ஷங்களான தேவதைகள் சிலர் இருக்கிறார்கள் என்றும், அந்தத் தேவதைகளுக்கு நாம் த்ருப்தியைச் செய்யவேண்டுமென்றும் அவை சொல்வதெல்லாம் ப்ராந்தர்கள் சொல்லும் வார்த்தையாகின்றது. ஜாதி ப்ரயுக்தமாக தர்மவிபாகத்தை அவை விதிக்கிறபடியால் அவை பக்ஷபாதிகளே. ஆசாரங்களைப்பற்றி சொல்லுமவைகளுள், எவை நாம் ப்ரத்யக்ஷமாக அப்யஸித்திருக்கும் ஆரோக்ய சாஸ்த்ரத்திற்கு ஒத்திருக்கின்றனவோ, அவைகளை மாத்திரம் அங்கீகரித்து மற்றவைகளை த்யஜித்துவிடவேண்டும்' என்பதுதான்.

இப்படி வேதம் முதலியவைகளில் அவர்களுக்கு ப்ராமாணிக புத்தி இல்லையாதலால், வைதிக வித்வான்களால் அவர்கள் அநாதரிக்கப்படுகிறார்கள். அவர்களும் வைதிகர்களை மூடர்களென்று நினைக்கிறார்களே தவிர, கௌரவிப்பதைக் காணோம். இம்மாதிரியான ஸம்ஸர்க்கத்தில் வளர்ந்துவரும் நமது சிறுவர்களிடமும் இந்த எண்ணம் பரவிவருகின்றது. இக்காலத்திய நமது வைதிகர்களும் ஒருவித ஆக்ரஹத்துடன் வர்த்தித்து வருகிறார்களே தவிர, யுக்திக்கு இணங்கிப் போகவேண்டும் என்னும் நியமத்திற்குக் கட்டுப்பட்டவர்களாகக் காணப்படவில்லை. பூமி வர்த்துலாகாரமன்று, ஸமமாகப் பலகை போன்றதே என்றும், ஸூர்யன் பூமியைச்சுற்றி வருகிறானே தவிர பூமி எவ்வித ப்ரமணத்தையும் உடையது அன்று என்றும், இன்னும் இம்

மாதிரியான ப்ரத்யக்ஷத்திற்கு அத்யந்தம் விருத்தமான வாதத்தை ஆக்ரஹத்துடன் செய்ய முயலும் வித்வான்கள் இன்னமும் இருக்கிறார்கள். சாஸ்த்ரமர்யாதைக்கு மிகவும் கட்டுப்பட்டு நடக்கும் சில மிகப்பெரிய வைதிக வித்வான்கள், லௌகிகர்கள் சொல்லும் வாதத்தைப் பொறுமையுடன் கேட்பதே,

> ‘ ந கேவலம் யோ மஹதோ(அ)பபாஷதே ச்ருணோதி தஸ்மாதபி யஸ்ஸ பாபபாக் ’

என்கிறபடி, பெரியதொரு பாபமாகும் என்று நினைக்கிறார்கள். இப்படி இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் வெறுப்பது நம்முடைய ச்ரேயஸ்ஸின் பொருட்டு ஆகுமோ ?

நமது லௌகிக ஸுஹ்ருத்துக்கள், கீழ் விவரித்திருக்கிறபடியெல்லாம் நமது சாஸ்த்ரங்களின்மீது தோஷங்களை ஆரோபித்தபோதிலும், அவர்களுடைய மநோபாவம் துஷ்டமன்று என்பதை நாம் அறிவோம். முதிர்ந்த வயதில் சாஸ்த்ரங்களின் அர்த்தவிசாரம் செய்ய ஆரம்பிக்கிறபடியால், சாஸ்த்ரம் சொல்வதைக் குருட்டுத்தனமாக நம்ப அவர்கள் ஸந்நத்தர்களாக இல்லை. தவிரவும், பாஷாந்தராப்யாஸம் அவர்களுடைய புத்திக்கு ஒருவித ஸம்ஸ்காரத்தை ஜநிப்பித்திருக்கின்றது. ஆகையால், ந்யாய விசார புரஸ்ஸரமாக நமது சாஸ்த்ரங்களின் கொள்கைகளை நாம் உபபாதநம் செய்யும் பக்ஷத்தில், அவர்கள் ந்யாயத்தை ஆதரித்து குணத்தை க்ரஹிப்பார்களென்றே நாம் நம்புகிறோம்.

நமது சாஸ்த்ரம் மூன்றுவித ப்ரமாணங்களை அங்கீகரிக்கின்றது. அவையாவன:— ப்ரத்யக்ஷம், அநுமாநம், சப்தம். நமது இந்த்ரியங்களைக்கொண்டு நாம் விஷயக்ரஹணம் செய்யும்பொழுது ப்ரத்யக்ஷம் ப்ரமாணமாகின்றது. ப்ரத்யக்ஷத்தால், ஒரு வஸ்துவின் ஸித்தி ஏற்பட்டால், அதை வேறு எவ்வித ப்ரமாணமும் பாதிக்கமாட்டாது. அக்நி உஷ்ணமன்று என்று சப்த ப்ரமாணம் சொன்னால், அது நமக்கு அப்ரமாணமே ஆகும். ஆகையால், ப்ரத்யக்ஷ ப்ரமாணம் பலீயஸ். ஆனால், ப்ரத்யக்ஷத்திற்கு எட்டாத சில வஸ்துக்கள் உண்டு. அவை ஆத்மா முதலியவை. அப்படிப்பட்ட வஸ்து ஒன்றுமில்லை என்று சொல்பவர்களுடன் நமக்கு வாதமே இல்லை. அப்படிச் சொல்பவர்கள் இப்பொழுது ஸ்வல்ப ஸங்க்யை உள்ளவர்களே. அம்மாதிரியான அப்ரத்யக்ஷ விஷயங்களில், சப்தமே (அத[illegible]மே) ப்ரமாணமாகும் என்பது நமது கொள்கை.

சென்னை-600 005.



> “ ஆஜ்ஞா தவைஷா பவதீ விதிதா த்ரயீ ஸா
> தாம் விப்ரணேயிஜஹ்ருஷாதீம் ஶ்ரியேஸ்மை ”

(வேதம் என்பது ஸாக்ஷாத் பகவானுடைய ஆஜ்ஞை; அதீந்த்ரிய விஷயங்களில் அந்த வேதத்தையே ப்ரமாணமாகப் பெரியோர்கள் அங்கீகரித்திருக்கிறார்கள்) என்று ஸ்ரீகூரேசன் அநுக்ரஹித்திருக்கிறார். உண்மையாகவே அதீந்த்ரிய விஷயங்களில் நாம் யுக்தி விசாரம்செய்ய அமையாது. யுக்தி விசாரம்செய்ய ஆரம்பித்தால், அது எல்லையின்றிக்கே போய்க்கொண்டிருக்கும். எப்படியானால், நமக்கு அப்ரத்யக்ஷங்களாயுள்ள ஸ்தலவிசேஷங்களின் இருப்பை அவைகளை ஸாக்ஷாத்கரித்த ஆப்தர்களின் வாக்யத்தைக்கொண்டு நாம் நம்புகிறோமோ, அம்மாதிரி, நம்மால் ஸாக்ஷாத்கரிக்கப்படாமல் இருக்கும் ஆத்ம வஸ்துவின் ஸத்தையை அதை ஸாக்ஷாத்கரித்திருக்கும் மஹர்ஷிகளின் வாக்யத்தைக்கொண்டு நாம் நம்பவேண்டும். அதுதான் விவேகிகளின் க்ருத்யமாகும். அப்படி அதீந்த்ரியங்களாயுள்ளவைகளைத் தவிர்த்த மற்றை விஷயங்களில் நாம் யுக்திவிசாரம் செய்வதே விவேகிகளான நமக்கு லக்ஷணம். அப்படிப்பட்ட விசாரத்தை நமது வைதிக வித்வான்கள் ஏராளமாகச் செய்திருக்கிறார்கள். நமது ஆசார்யர்கள் கேவலம் அந்தர்கள்போல ஸகலத்தையும் ஒத்துக்கொண்டு, தமக்கு ஈச்வரனால் கொடுக்கப்பட்டுள்ள புத்தியை நிராகரித்துவிடவில்லை என்பது பின்வரும் விசாரங்களுட் பலவற்றில் விளங்கும். இதை நமது லௌகிக ஸுஹ்ருத்துக்கள் நன்றாக உணரவேண்டும்.

சப்தப்ரமாணமென்று சொல்லப்படும் நமது சாஸ்த்ரங்கள், முக்கியமாக ச்ருதிகளும் அவைகளுக்கு உபப்ருஹ்மணங்களாயுள்ள ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களுமே. இவைகளுள் ச்ருதி அல்லது வேதம் என்பது பலவத்தமமானது. அதாவது - வேதத்திற்கும் மற்றை சாஸ்த்ரங்களுக்கும் விரோதம் நேர்ந்தால் வேதத்தையே ப்ரபலமானதாக நாம் அங்கீகரிக்க வேண்டும். அந்த வேதம் அநாதிகாலமாக இருக்கின்றது என்பதும், அதிற்சொல்லப்பட்டுள்ளவை யெல்லாம் ப்ரமாணம் என்பதும் நமது ஸித்தாந்தம். இந்தக்கொள்கையை நிலைநிறுத்தும் பொருட்டு வேதத்தை அபௌருஷேயம் (அதாவது - ஒருவராலும் செய்யப்படாதது) என்று நமது பெரியோர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். இந்த நிர்ணயத்திற்கு இணங்குவது நமக்குக் கொஞ்சம் ச்ரமஸாத்யமே. இதைப்பற்றிய ஸம்வாதம் பஹுகாலமாக இருந்துகொண்டு வருகின்றது. ஜைமினி மஹர்ஷியாற் செய்யப்பட்டுள்ள பூர்வமீமாம்ஸையில் வேதப்ராமாண்யம் விசாரிக்கப்பட்டிருக்கின்றது. அவ்விடத்தில், வேதத்தை அங்கீகரியாத

சார்வாகன் முதலியவர்களுடைய பூர்வபக்ஷம் எடுத்து உரைக்கப்பட்டிருப்பதையும், அந்தப் பூர்வபக்ஷத்தையும் வைதிகர்கள் நிரஸநம் செய்திருப்பதையும் எல்லாரும் பார்க்கலாம். வைதிகர்களின் ஸித்தாந்தமாவது - 'வேதம் ஒரு புருஷனிடமிருந்தும் ஏற்பட்டது அன்று, பரப்ரஹ்மம் எப்படி அநாதியோ அப்படியே இதுவும் அநாதி; அந்த ப்ரஹ்மம் போலவே எவ்விதத்திலும் இதுவும் நிர்துஷ்டம். ஆகையால், இதில் காணப்படும் ஒவ்வொருவிஷயமும் உண்மையே' என்பதுதான். இந்த ஸித்தாந்தத்தை வ்யாஸர் முதல் நமது வேதாந்த ப்ரவர்த்தகர்களான ஆசார்யர்களெல்லாரும் ஒத்துக்கொண்டே வேதாந்தத்தை ப்ரவர்த்திப்பித்திருக்கிறார்கள். சார்வாகன் முதலான அவைதிகர்கள் இந்த ஸித்தாந்தத்திற்கு என்ன ஆக்ஷேபம் செய்திருக்கிறார்கள் என்றும், என்ன ஹேதுக்களைக்கொண்டு நமது வைதிகர்கள் இந்த ஸித்தாந்தத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள் என்றும் விஸ்தாரமாகப் பராமர்சிக்க இது அவஸரமாகாது. ஆனாலும், ஸங்க்ரஹமாக அதைப் பின்வருமாறு ப்ரஸ்தாவிக்கலாம். 'அநாதிகாலமாக வேதத்திற் சொல்லப்பட்டுள்ள க்ரியைகளையும் தர்மங்களையும் கணக்கற்ற ஜநங்கள் அநுஷ்டித்து வந்திருக்கிறார்கள்; கேவலம் ஒரு புருஷன் அந்தவேதத்தின் கர்த்தாவாக இருக்கும் பக்ஷத்தில் அம்மாதிரியான அநுஷ்டாநமும் விச்வாஸமும் ஏற்பட்டிருக்கமாட்டா; அவ்வளவு விச்வாஸத்திற்குப் பாத்ரமாகும் வேதத்திற்கு ஒரு கர்த்தா இருந்திருந்தால் அந்தக்கர்த்தாவை ஒருவராவது ஜ்ஞாபகத்தில் வைத்திருப்பர், சுத்தமாக எல்லாரும் மறந்திருக்கமாட்டார். வேதகர்த்தா யாரென்று ஒருவருடைய ஜ்ஞாபகத்திலும் இல்லாமல் இருப்பதும், வேதத்தை அநுஸரித்து பஹுகாலமாக வந்துகொண்டிருக்கும் ஜநங்களுடைய விச்வாஸமும் வேதம் புருஷகர்த்ருகமன்று என்பதற்குப் போதுமான காரணங்கள்' என்பது ஸித்தாந்திகளின் முக்கியமானவாதம். பூர்வபக்ஷிகளோவென்றால், 'காடகம் வைச்வாமித்ரம் போன்ற சில வேதபாகங்களின் பெயர்களே, வேதத்திற்குக் கர்த்தாக்கள் இருந்திருக்க வேண்டும் என்பதை ஸூசிப்பிக்கின்றன. அந்தப் பெயர்கள் வேதத்திற்கு உத்பத்தி என்று ஒன்று உண்டு என்பதை (அநித்ய ஸம்யோகத்தை)க் காண்பிக்கின்றனவன்றோ? என்று வாதிக்கிறார்கள். இந்த அநித்ய ஸம்யோக வாதத்திற்கு ஸித்தாந்திகள் பலவிதமாக ஸமாதாநம் சொல்லிவிட்டு வேதத்தின் அபௌருஷேயத்தன்மையை ஸ்தாபித்து, பிறகு 'வேதத்திற்சொல்லியிருக்கிறபடி ப்ரஹ்மம் ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டித்தது' என்னும் ச்ருதிவாக்யத்தின் பலத்தைக்கொண்டே எதிரிகளின் ஆக்ஷேபமெல்லாவற்றிற்கும் ஸமாதாநம் சொல்லுகிறார்கள்.

ஆனால், நிஷ்பக்ஷபாதமாக அந்த வாதத்தை ஒருவன் பராமர்சித்துப் பார்த்தால், பூர்வபக்ஷிகளின் வாதம் எவ்வளவு ஸங்கதமாகவும் பலவத்தாகவும் தோன்றுகிறதோ அவ்வளவு ஸங்கதமாகவும் பலத்தோடு கூடினதாகவும் ஸித்தாந்திகளின் வாதம் இருக்கின்றது என்று சொல்வதற்குக் கொஞ்சம் அசசப்படுவன் என்றே சொல்லக்கூடும். ப்ரஹ்ம ஸூத்ரக்காரரான வ்யாஸர், அந்த ஸூத்ரங்களின் வ்யாக்யாநத்தைச் செய்தவர்களான போதாயனர் டங்கர் குஹதேவர் முதலிய மஹான்கள், அதற்குப் பிற்காலத்திய ஸ்ரீவைஷ்ணவாசார்யர்கள், த்வைத அத்வைத மதாசார்யர்கள் எல்லாரும் வேறுவிதமாக அபிப்ராயப்பட்டிருக்கையில், இவ்விதம் நாம் அபிப்ராயப்படுவது பெரியதொரு அபசாரமே. ஆனாலும், உண்மையைச் சொல்வதும் ஒரு தர்மமாகுமன்றோ? வாதத்தின் ஸ்வாரஸ்யபரமே இது. வேதத்தை அபௌருஷேயமென்றும் அநாதியென்றும் ஒத்துக்கொள்வதால் நமது ஸித்தாந்தத்திற்கு எந்தத் தாத்பர்யத்தை வைதிகர்கள் தேடுகிறார்களோ, அந்தத் தாத்பர்யமே, வேதம் நம்முடைய ஜ்ஞாபகத்திற்கு எட்டாத அளவு பராசீந காலம் தொடங்கி இருந்துவருகின்றது என்பதை மாத்ரம் ஒத்துக்கொண்டால்கூட லபித்து விடுகிறபடியால், ஒருகால் 'அநாதி' என்னும் சப்தம் அந்த அர்த்தம் கொண்டதுதானோ என்று நாம் நினைக்கிறோம்.

வேதத்திற் சொல்லப்பட்டுள்ள க்ரியைகளைப்பற்றி, அவை நிரர்த்தகங்களென்று நமது லௌகிகர்கள் நினைப்பதற்குக் காரணமில்லை. எந்த மதத்திலும், மநஸ்ஸின் அபிஸந்தியினுடைய தாத்பர்யத்தை உத்தேசித்துச் சிற்சில பாஹ்ய வ்யாபாரங்கள், ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மநஸ்ஸால் நினைப்பதும் வாயால் பேசுவதும் தேஹத்தாற் செய்வதும் மூன்றும் ஒன்றுடன் மற்றொன்று த்ருடமாகக் கட்டப்பட்டிருக்கின்றனவன்றோ? ஒன்றைவிலக்கி ஒன்றைமாத்திரம் ப்ரவர்த்திப்பித்தால் அதற்கு நல்ல உறுதி ஏற்படாது என்பதை எல்லாரும் அறியலாம். மநஸ்ஸுக்கு உறுதி அவச்யம் அபேக்ஷிதமாதலால், அதை ஸம்பாதித்துக்கொள்வதற்காகவே நமது மதத்திற் சிற் சிலக்ரியைகளை மஹர்ஷிகள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். மஹர்ஷிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள க்ரியைகளை த்யஜித்துப் புதிதான வேறு சில பாஹ்ய வ்யாபாரங்களை நாமாக ஏற்படுத்துவதில் எவ்வித லாபமுமில்லையாதலால், ருஷிப்ரோக்தங்களான க்ரியைகளை அதற்குத் தகுந்த மநோபாவத்துடன் நாம் அநுஷ்டித்துவர முயல்வதே நமது தர்மமாகும்.

'வேதத்தில் கணக்கற்ற யஜ்ஞம் முதலிய க்ரியைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையெல்லாவற்றையும் நாம் அநுஷ்டிப்பது ஸாத்யமன்றே' என்று ஒரு ஆக்ஷேபம் உண்டு. 'வேதம் என்பது பெரியதொரு நீர் நிறைந்த தடாகம்போன்றது, யாருக்கு எவ்வளவு நீர் அபேக்ஷிதமோ, அவன் அவ்வளவு நீரைப்பாநம் செய்யலாம்.'

"யாவாநர்த்த உதபாநே ஸர்வத: ஸம்ப்லுதோதகே,
தாவாந் ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத:"

என்று ஸ்ரீகீதாசார்யனே அநுக்ரஹித்திருக்கிறார். வெவ்வேறான ஜந்மாந்தர வாஸனைகளுடன் நாம் இந்த லோகத்தில் ஜநித்திருக்கிறோம். அந்தந்த வாஸனைக்குத் தகுந்த வ்யாபாரத்தில் நமது இந்த்ரியங்கள் நம்மை ஆகர்ஷிக்கின்றன. அப்படி ஆகர்ஷிக்கும் இந்த்ரியங்களை நாம் பலாத்கரித்து நிக்ரஹிப்பது வ்யர்த்தமேயாகுமாகையால், அந்தந்த நோக்கத்துக்குத் தகுந்தபடி ஸஜாதீயமான ஒரு சாஸ்த்ரீய வ்யாபாரத்தில் அவைகளை ப்ரவ்ருத்திப்பித்து, அது வழியாக நாம் இந்த்ரிய நியமநம் செய்ய முயலவேண்டும். அப்படிப்பட்ட ஸஜாதீய சாஸ்த்ரீய வ்யாபாரங்களை அவரவர்கள் அதிகாரத்திற்குத் தகுந்தபடி வேதம் போதிப்பிக்கின்றது. ஸகல ப்ரஜைகளிடமும் வத்ஸலமாயிருக்கும் வேதம், ஒருவரையும் அநாதரியாமல் அவரவர்க்குத் தகுந்த சாஸ்த்ரீய க்ரியைகளைக் காண்பிக்கவேண்டுமன்றோ? ப்ராணி ஹிம்ஸையில் ஒருவனுக்கு ஜந்மாந்தரவாஸநா ப்ரயுக்தமாக ப்ரவ்ருத்தி இருந்தால், அவனுக்குப் பசுவிசஸந ஸம்பந்தமான யஜ்ஞத்தையும், அப்படிப்பட்ட ஹிம்ஸையிலிருந்து பயப்படும் வாஸநை உள்ளவர்களுக்கு 'ஜபய ஜ்ஞோஸ்மி' என்கிறபடி மாநஸிகமான ஜபயஜ்ஞத்தையும், இம்மாதிரி மற்றை க்ரியைகளையும் அவரவர்களுக்குத்தக்கபடி வேதம் விதிக்கின்றது என்று நாம் அறியவேண்டும். நாம் எல்லாரும் ப்ராணி பசுவைக்கொண்டு யாகம் செய்யவேண்டுமென்பது பசுயஜ்ஞத்தை விதிக்கும் வேதத்தின் கருத்து அன்று. தவிரவும், நமது ஸ்ரீவைஷ்ணவ சாஸ்த்ரங்கள், பஞ்ச மஹாயஜ்ஞங்களென்று ப்ரதிதிநம் ஸுலபமாகச் செய்யக்கூடிய சில உத்தமமான க்ரியைகளை விதித்து, மிக்க ப்ரயாஸத்தை அபேக்ஷிக்கும் பசுயஜ்ஞாதிகளை அநாவச்யங்களாக த்யஜிக்கின்றன. காம்ய கர்மங்களும் அந்தந்தக் காமங்களை விரும்பும் அதிகாரிகளுக்கு மாத்திரம் உத்திஷ்டங்கள். இவ்விதம் அதிகாரி விசாரம் செய்து, வேதத்தில் விதிக்கப்பட்டுள்ள க்ரியைகளை விபஜித்துவிட்டால், நம்மால் அவசியம் அநுஷ்டிக்கப்பட வேண்டுமவையான நித்யகர்மங்கள் ஸ்வல்பங்களேயாகும். அவைகளுள் ஸந்த்யாவந்தநம், ச்ராத்தம், தர்ப்பணம், பகவதாராதநம் பஞ்சமஹாயஜ்ஞம் முதலியன அடங்கியுள்ளவை. இவைகளை யதோக்தமான அபிஸந்தி சுத்தியுடன் செய்துகொண்டு, எப்பொழுதாவது எதற்காவது நிர்பந்தவசத்தால் லோபம் ஸம்பவித்தால் அதைப்பற்றி ஹார்தமாக அநுதபித்து நாம் வர்த்தித்துவந்தால், ஸ்ரீசரண்யன் நம்மை அநுக்ரஹிப்பன் என்று உபதேசிக்கும் வேதத்தை அப்ராமாணமென்றாவது அபரிக்ராஹ்யமென்றாவது நாம் எப்படிசொல்லக்கூடும்? இப்படியெல்லாம் வேத விஷயங்களைவிசாரிக்கும் ஸ்ரீகீதாசார்யனே யுக்தி விசாரத்தைச் செய்திருக்கும் காலத்தில், நமது வஸித்தாந்தம் யுக்தி விசாரத்திற்கு இடம்கொடுக்கவில்லையென்று சொல்வதும் ந்யாய்யமாகாது. இது ஸம்பந்தங்களான மற்றை விஷயங்களை அடுத்த ஸஞ்சிகையில் விசாரிப்போம்.

ஸ்ரீ:

# கண்ணன் கழலிணைப் பதிகம்.

[சடகோப தாஸர்.]

(தொடர்ச்சி.)

மேலும் 'நாரங்களைத் (சேதநாசேதநங்களடங்கிய ப்ரபஞ்சத்தை)த் தனக்கிருப்பிடமாக உடையவன்' என்று நாராயண சப்தத்துக்குப் பொருளாகும்போது, இப்படி நமது ரக்ஷணத்துக்காக நாம் நாடவேண்டிய பிரபு, தானே தன் சொத்தாக நம்மைக் காப்பாற்றக் கடமைப்பட்டவன் என்று தெரியவருகிறது.

ஆகவே, திருநாம ஸங்கீர்த்தநத்தால் தெளிவு பெற்றவனுக்கு 'எவ்வளவு கொடும்பாவங்களைச் செய்தவனும் தன்னை வெகு எளிதாய் மீட்டுக்கொள்ள நிர்ப்பயமாயும் ஸந்தேஹமொன்றுமில்லாமலும் பற்றக்கூடிய வெகு அநுகூலமான உபாயமொன்றுண்டு; அவ்வுபாயம்தான் நம்மை எப்போது பெறுவோமென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் நம் உடையவன்; அவனே ரக்ஷிக்க முன்வரும்போது அதற்கு எவரும் இடையூறு செய்ய வல்லரல்லர்' என்னும் சாஸ்த்ரார்த்தம் விசதமாகும். இதை மேலும் மேலும் எண்ணும்போது (அதாவது-நியமத்தோடு ஜபிக்கும்போது அல்லது நாமத்தை உருப்போடும்போது) இவ்வர்த்தம் மனதில் நிலை பெற்று எம்பெருமானிடத்தில் பக்தியென்னும் ப்ரீதி கரைபுரண்டோடி முடிவில் அவனைக் கண்ணுற்காணும் தசையும் ஸம்பவிக்கும்; நிகரற்ற பெரும்பதமும் அவனருளாற் கிட்டும் என்பது ஸித்தம். நாமஸங்கீர்த்தநமும் ஜபமும், இப்படி மனத்தின் பக்குவத்தைப்பெற உதவாவிட்டால், அவை வீண் சுமைகளேயாகும். இங்கு எண்ணும் என்பதற்கு 'அர்த்தத்தையறிந்து சொல்லும்' என்பது பொருள்.

இப்படிச் சரணம் புகுவதற்குத் துறையான எளிவும் (ஸௌலப்யமும்) காப்பதற்கிடான மேன்மையும் (பரத்வமும்) **கண்ணன்**, **நாரணன்** என்னும் பதங்களால் முறையே சொல்லப்பட்டன. இதெல்லாம் திண்ணம், நிச்சயம் என்று சாஸ்த்ரங்கள் முறையிடுகின்றனவன்றோ!

நாராயண சப்தத்தின் அர்த்தத்தை மனத்தில் நன்றாய்த் தரித்து அதன்படி ஸர்வேச்வரனைப் பாவிக்கும் பக்தி ப்ரகாரம் அடுத்த பாட்டில் சொல்லப்படுகிறது.

2. **நாரணனெம்மான், பாரணங்காளன்**
   **வாரணந்தொலைத்த, காரணன்தானே.**

அவனை இப்படி நினைத்துத் தியானிக்கவேண்டும். அதாவது— எல்லோருக்கும் புகலிடமாயிருக்கும் அப்பராபரன் எனக்கும் என்னைப்போன்றயாவருக்கும் ஈசன் (எனவே 'காக்குமியல்பினன்' என்றதாயிற்று;) அகில ஜகத்துக்கும் மாதாவாகிய பூமிப் பிராட்டியின் வல்லபன் (தாயின் பரிவு

க்கு வசப்பட்டு மக்களாகிய சேதநர் தோஷத்தைப் பொறுப்பவன்); யானைவேடம் பூண்டு ஆச்ரிதர்களை ஹிம்ஸித்த குவலயாபீட அஸுரனை யொழித்தவன் (ஆச்ரிதர்க்குப் பகவத்ப்ராப்தி விரோதிகளைப் போக்குகிறவன்); அவனே ஸர்வ ஜகத்துக்கும் காரணனாயிருப்பவன் (ஆக்கியவனே ரக்ஷிப்பதற்கும் கடமைப்பட்டவனாகிறா னல்லவா?) என்று. இதனால் 'காரணம் து த்யேய:' (காரணவஸ்துவைத் தியானிக்கவேண்டும்) என்று வேதத்தில் சொன்னது ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது. இதில் 'வாரணந்தொலைத்த காரண' னென்று சேர்த்துப்படித்தால் '[illegible]' என்றபடியே மனம் நைந்து 'ஆதிமூலமே, மூலமே' என்று கதறிய ஸ்ரீகஜேந்திராழ்வான் கதையும் ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது. அப்போது தொலைத்த என்பதற்கு 'யானையின் துக்கத்தைப்போக்கிய' என்று பொருளாகவேண்டும். இந்த யோசனையில் அர்த்த ஸ்வாரஸ்யம் காண்கின்றது. திருநாமத்தால் தெரியவரும் உபய விபூதிகளுக்கும் நாதனான பரம்பொருள் யாரெனில், அவன்தான் முதலை வாயிலகப்பட்டுச் சிதைவுண்ட மிருகமான கஜேந்த்ரனும் 'படைத்தவனே, நீதான் என்னைக் காப்பாற்றவேண்டும்' என்று கூவியதை ஸ்ரீவைகுண்டத்தில் செவிசுடக் கேட்டுப் பரபரப்புடன் தத்க்ஷணத்தில் மடுவின்கண் வந்து முதலையைத்துணித்து அக்'கைம்மாவுக்கருள் செய்த கார்முகில்போல் வண்ணனாய கண்ணன்' என்று சொல்லி முதற்பாட்டிற் காட்டிய அவனுடைய பரத்வ ஸௌலப்ய குணங்களிரண்டையும் இப்பாட்டு வற்புறுத்திற்று. பக்தி ப்ரகாரங்கள் நமக்கு போக்யமாயிருக்கும்படியைச் சொல்லவேண்டிய இடமன்றோ இது? கஜேந்த்ரன் விஷயத்தில் பகவான் காட்டிய வாத்ஸல்யத்தையும், காருண்யத்தையும், ரக்ஷணத்தில் உத்வேகத்தையும் அநுஸந்தித்து ஆநந்தத்திலாழ்ந்து, மற்றதை மறந்து ஸ்ரீபராசரபட்டர் 'ஸம்ப்ரமவதஸ்ராயை நம:' (பகவானுடைய பரபரப்புக்கு நமஸ்காரம்) என்றல்லவோ அநுபவித்தார்!

ஸ்ரீவைஷ்ணவர்களும் மற்றவர்களும் விடியற்காலத்தில் எழுந்தவுடன் 'க்ராஹக்ரஸ்தே கஜேந்த்ரே' இத்யாதி கஜேந்திர மோக்ஷ வ்ருத்தாந்த ச்லோகங்களை அநுஸந்திக்கிறார்களன்றோ? அதனர்த்தம் தமோகுணமே உருவெடுத்தாப்போலிருந்த முதலையினால் பிடிக்கப்பட்ட தன் ஆச்ரிதனை கஜேந்த்ரனை மீட்ட அந்த ஸ்ரீஹரியே தூக்கமாகிற, தன்னைத்தவிரப் பிறரால் போக்கமுடியாத, தமஸ் (இருள், அஜ்ஞானம்) என்னும் முதலையினிடமகப்பட்ட ஜீவ வர்க்கங்களை மீட்கவல்லவன் அவன், என்று அநுஸந்தித்துப் பகவானைச் சரணமடைவது—என்று ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷையில் ஸ்ரீதேசிகன் அருளிச்செய்தார்.

பாரணங்காளன் என்பதினால் நித்யவிபூதியும் எம்மான் என்றதினால் ப்ரக்ருதி மண்டலமாகிய லீலாவிபூதியும் சொல்லப்பட்டதென்பது வ்யாக்யா



னங்களில் அறியப்படும். அணங்கு என்று பிராட்டியைச் சொல்லும் பதமிருப்பதால், ஜகத்காரணனும் ஸர்வரக்ஷகனுமிருப்பவன்தான், 'தேவீ காருண்ய ரூபா' (கருணையே வடிவுகொண்ட தேவியால்) என்னப்பட்டபடியே ஜீவன் எந்த நிலைமையிலும் பகவானைப் பயமில்லாமற் கிட்டும்படி செய்யும் சலுகையுள்ள புருஷகார பூதையான ஸ்ரீமஹாலக்ஷ்மியை விட்டுத் தினைப்பொழுதும் பிரியாதவன்; என்ற அர்த்தம் நாராயண சப்தத்துக்குக் கிடைக்கிறது. பூதேவியும் ஸ்ரீலக்ஷ்மியின் ரூபபேதமென்னப்பட்டதிறே. இது இப்பாசுரத்துக்கு முதற்பாட்டிலும் அதிகமாகக் கிடைக்கும் பொருள். அதாவது, முதலில் ஜீவேச்வரர்களின் பரஸ்பர ஸம்பந்தத்தினாலும் பகவத் குணத்தாலும் நமது ரக்ஷணவிஷயத்தில் நாம் அடையும் தேற்றம் சொல்லப்பட்டது; இதில் அன்னையின் புருஷகார பலத்தால் உண்டாகும் தேற்றம் வெளியாகிறது என்னலாம்.

ஜகத்காரணனாகிய நாராயணன் ஸ்ருஷ்டி முதலிய கார்யங்களைத்தன் லீலையின் பொருட்டுச் செய்பவனாதலின் நம்மை ரக்ஷிப்பதையும் தனது பேறாகச்செய்து களிக்கிறான் என்னும் அர்த்தத்தைக்காட்டி அவன் பெருமையை பல்விதம் திருநாம ஸங்கீர்த்தநத்தால் அநுபவித்து உஜ்ஜீவிக்கச் செய்கிறது மூன்றாவது பாசுரம்.

3. **தானேயுலகெல்லாம், தானேபடைத்திடந்து**
**தானேயுண்டுமிழ்ந்து, தானேயாள்வானே.**

உலகங்களெல்லாம் தானேயானான்- ஸ்ருஷ்டிக்கு முன்னும் சேதநாசேதநங்களடங்கிய ப்ரபஞ்சமெல்லாம் அவனுக்குச் சரீரமாக ஸூக்ஷ்மமான நிலையிலிருந்தன. - அதாவது - ஜீவர்கள் மெழுகில் ஒட்டிய தங்கத்தூள்போல் தமஸ் என்னப்பட்ட ஒருவித ரூபமும் பெறாத ஸூக்ஷ்ம ப்ரக்ருதியோடு ஒன்றுபோல் ஒட்டி ஜ்ஞாந ஒளி மறைபட்டுக்கிடந்தன. ப்ரக்ருதிக்கும் நீர் காற்று முதலிய பெயர் உருவம் முதலியவையும் அப்போதுகிடையாது. இவையிரண்டும் ஈசனால் தாங்கப்பெற்று அவனுக்கு உடல்போல் கிடந்தன. இப்படி மஹாப்ரளயத்தில் ஜடத்தோடு ஜடமாயிருந்த ஜீவர்களை நோக்கி மனமிரங்கிப் பரமகாருணிகனான ஈச்வரன் மறுபடியும் உலகத்தையுண்டாக்கி ஜீவர்கள் நல்வழிநடந்து கடைத்தேறும் வண்ணம் அவர்களுக்குச் சரீரத்தைக் கொடுத்து, அவற்றுள் தான் நின்று ரக்ஷண வ்யாபாரத்தைச் செய்கிறான். எனவே ஸ்ருஷ்டிக்குப் பிறகும் அவை அவனுக்கு உடலின் நிலையில் நிற்கின்றன. இப்படி அவன் செய்வதற்கு அவனுடைய ஸ்வபாவ ஸித்த கருணை தவிர வேறுகாரணமும் லீலையாகிற ஸ்வப்ரயோஜநம் தவிர வேறுப்ரயோஜநமும் கிடையா. இதுமட்டுமா! தானேபிடந்தான்! ஒருபிரளயத்தில் முழுகிக் கிடந்த பூமியை வராஹரூபமாக அவதரித்துக் கரையேற்றினானன்றோ? அதற்கு அப்பூமியே

யாயிற்றும் வேண்டிற்றே! தானேபடைத்ததைத் தானேயிடந்ததுவும் கேவலம் கருணையின்காரியம்; அதிலும் பேறுதனதே! இவ்வண்ணமேதான் ப்ரளயாபத்தில் ஜகத்தை வயிற்றில் வைத்துக் காப்பாற்றியதும் பின்னர்படைத்ததும். இதெல்லாம் நாராயணன் என்னும் திருநாம ஜடஸங்கீர்த்தநாதிகளினால் அறியப்படவேண்டிய அர்த்தாநுபவங்கள். இதைத்தான் உபநிஷத்தும் 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம, தஜ்ஜலாநிதி சாந்த உபாஸீத', (இது ப்ரபஞ்சம் - எல்லாம் ப்ரும்மம்; அவனே இப்படியாகி அவனாலேயே ரக்ஷிக்கப்பட்டு அவனிடமே லயமடைகின்றன, என்று அறிந்து வேறு விஷயங்களிலிருந்து மனதைத் திருப்பி அவனிடமே செலுத்தி இத்தகைய பெருமையுடைய அவனையே உபாஸித்துக் கடைத்தேறக்கடவன்) என்றது.

இப்படிப்பட்டவனன்றோ 'வாரணந்துலைத்தருளின' மஹாநுபாவன்! அவன்தானே ஆய்ப்பாடியில் கண்ணனாயவதரித்து இடைச்சியர் முதலான எவரும் அணுகும்படி நின்றான்! என்று அறிந்து தேற அமையும்.

இத்திருநாமஞ்சொல்லி அவனைப்பேணும் வகையொன்று நான்காவது பாட்டில் பேசப்படுகிறது.

4. ஆள்வானாழிநீர்க் கோள்வாயரவணையான்
தாள்வாய்மலரிட்டு நாள்வாய்நாடீரே.

தான்உண்டாக்கின ஜகத்தை ரக்ஷிக்கத்திருவுள்ளம்பற்றித் திருப்பாற்கடலில் (ஆழிநீரிலே) ப்ரகாசமான மணிகளைத் தன்படத்திலுடைய ஆதிசேஷனாகிய அணையில் கண்வளர்ந்தருளுகிறவன் அந்நாரணனே. நாரங்களென்னால் ஜலங்கள். பஞ்சபூதங்களுக்குள் முதலில் ஜலத்தைப் படைத்தான் என்னப்பட்டது எனவே இது படைக்கப்பட்ட பொருள்களுக்கெல்லாம் உபலக்ஷணம் (உதாஹரணம்). ஆழிநீரில் பள்ளிகொண்டது ஸகல வஸ்துக்களிலும் அவன் இருப்பதைக்காட்டும். இதனால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பொருள்களிலெல்லாம் இருப்பவன் என்னும் நாராயண சப்தார்த்தம் காட்டப்பட்டது.

அத்தகையவன் தாள்வாய் (திருவடிகளில்) நாள்வாய் (தினந்தோறும்) புஷ்பங்களை ஸமர்ப்பித்து அவனிடத்தில் பக்தி செய்யுங்கோள். பரமப்ராப்யமான அவன் நித்ய கைங்கர்யம் கிடைப்பது திண்ணம், என்றருளிச்செய்யப்பட்டது. 'பத்ரம் புஷ்பம் பலம் தோயம்......' என்று ஸ்ரீ கீதாசார்யன், பக்தியுடன் த்யாநம்செய்து அதனால் ப்ரீதிமிகுந்து பகவானுக்குப் புஷ்பம் ஸமர்ப்பித்தல் முதலிய (பாஹ்ய) வெளிப்படையாகச் செய்யவேண்டிய ஆராதநக்ரமங்கள், இதனால் அருளிச்செய்யப்பட்டனவாயின.

ஐந்தாம் பாட்டில் இதனால் பக்திபெருகும் பிரகாரம் த்ருடமாக்கப்படுகிறது.

5. 'நாடீர் நாடோறும், வாடாமலர்கொண்டு
பாடீரவர் நாமம், வீடே பெறலாமே.



வாடாத மனோஹரங்களான புஷ்பங்களை யவன் திருவடிகளில் ஸமர்ப்பித்துத் தினந்தோறும அவனைப்பற்றி யவன் திருநாமங்களைச்சொன்னால் மோக்ஷபர்யந்தமான புருஷார்த்தங்களையும் பெறலாம். இது நிச்சயம் என்று அர்த்தம். கடைசி ஏகாரத்தினால் இவ்வுறுதி கூறலாயிற்று. வீடே என்பதின் ஏகாரத்தினால் ஐச்வர்யம், கைவல்யம் என்னப்பட்ட தாழ்ந்த புருஷார்த்தங்கள் பகவதர்ச்சனையினால் கிடைக்குமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? என்றதாயிற்று. மலர்கொண்டு என்று சரீரத்திலும், பாடீர் என்று வாக்காலும், நாடீர் என்று மனத்தினாலும் ப்ரீதி பூர்வகமாக மூன்று கரணங்களினாலும் செய்யவேண்டிய பக்தி ப்ரகாரங்கள் சொல்லப்பட்டன. இவை மூன்றில் ஒன்றைச்சொன்னால் மூன்றும் உண்டாகின்றனவாகிலும் மூன்றும் நிறைந்திருந்தால் தான் பக்தி பூர்ணமாகிறது என்பதும் அறியத்தக்கது.

6. மேயான் வேங்கடங், காயாமலர்வண்ணன்
பேயார் முலையுண்ட, வாயான் மாதவனே.

திருவடிகளில் வாடாமலரிட்டுப் பூஜிப்பது அவன் நமக்குக் கிட்டினாலன்றோ? அவனை எங்கே காணுவது? அவனைக் காயாம்பூவைப் போன்ற திருமேனியையுடையவன் (காயாமலர் வண்ணன்) என்றும், மின்னற்கொடியுள் சேர்ந்த கார்மேகம்போல் ஜோதிமயமான ஸ்ரீலக்ஷ்மியை எப்போதும் திருமார்பில் தரித்திருக்கும் ஆச்ரித ஸந்தாபஹாரமான நீலமேகன் (மாதவன்) 'நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா' என்றும் வேதங்கள் சொல்லின. (பேயார் முலையுண்டவாயான்) பூமியில் அஸுரர்பீடை மிகுந்த ஓரவஸரத்தில் அவதரித்து, ஆய்ப்பாடியில் பலபல வேஷங்கொண்டு ஸாதுக்களை நலிந்த அவ்வரக்கர்களை முடித்தான். அதில் விஷத்தை முலைப்பாலாகக்கொண்ட பூதனையென்னும் பேயரக்கியை அப்பாலையே சுவைத்து அவளுயிரையும் உறிந்துவிட்டானம்மாயாவி! அவனைப்பற்றினால் விஷம்போன்ற விஷய சுகங்களாகிற பாலைப்புகட்டி நமது ஸ்வரூப ஜ்ஞானத்தையும் பகவத்பக்தியையும் கொல்லும் ப்ரக்ருதியாகிற பேயினின்றும் நம்மையவன் விடுவிப்பான் என்பது நிச்சயமே.

ஆனால் அவ்வவதாரத்துக்கும் நாம்பிற்பாடரல்லவோ? அவனையெங்ஙனே பூஜிபபது? - என்றால் (மேயான் வேங்கடவன்) அவனேதான் திருமலையில் திருவேங்கடநாதனாக அர்ச்சாரூபியாக எழுந்தருளியிருப்பவன். அவனைக் கீழ்ச்சொல்லியபடி ஆராதித்து உஜ்ஜீவிக்கவமையும். 'வாக்குக்கும் மனதுக்கும் எட்டாதவன்' என்று வேதத்தினால் பேசப்பட்டவனே எல்லாரும் காணும்படியும் தன்னுடைய திவ்யஸௌந்தர்ய திவ்யகுணாதிகளில் ஒன்றும் குறைவுபடாமல் ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்திற்போல் இவ்வர்ச்சாவதாரத்திலும் எழுந்தருளியிருக்கிறான். ஆகையால், நிரதிசயபக்தியுடன் அவன் திருவடிகளில் அடிமைசெய்யக்குறைவில்லை யென்று அருளிச்செய்கிறார்.

திருநாமத்தின் அர்த்தத்தை அநுஸந்தித்து அதனால் ப்ரதிபாதிக்கப் படும் ஸ்ரீமந்நாராயணனை த்யாநம்செய்து, அவ்விதத்த்யாநத்தின் அநுபவம் கரைபுரண்டு, அதன் ப்ரவாஹமாகிற பகவத்பூஜைகளில் இறங்கச் செய்யும் பக்தியோகத்துக்குச் சக்தியற்றவர்களும் அதிகாரமில்லாதவர்களும் என்னசெய்வது, என்றால் அதற்கு உத்தரம் அடுத்தபாட்டில் சொல்லப்படுகிறது.

7. மாதவனென்றென் றோதவல்லீரேல்
தீதொன்றுமடையா ஏதஞ்சாராவே.

மாதவன் மாதவன் என்று பிராட்டி ஸம்பந்தத்தை நினைத்துப் பக்திமான்கள் சிலர் சொல்லும்வார்த்தைகளைக்கேட்டு அதனால் ருசி மிகுந்து அவ்வார்த்தையைத்தாமும் (ஓதவல்லீரேல்) இடைவிடாமற் சொல்லுவார்களாகில் அவர்களுக்கும் பக்தி பெருகும்; (தீதொன்றுமடையா) அதற்கிடையூறுகளான பாபங்களும் ரஜஸ், தமஸ், என்னும் குணங்களாகிற பீடைகளெல்லாம் நசிக்கும். அதாவது - பரிபூர்ணபக்தி உண்டாவதற்குத் தடங்கலாயிருந்த ப்ராரப்தம், என்னும்படியான பாபங்கள் பலங்கொடாது ஒழியும். (ஏதஞ்சாராவே) காலாந்தரத்தில பலம் கொடுக்கக்கூடிய பாபங்களும் அவரிடத்தில் ஒட்டா. அன்றியும் மேற்கொண்டு புத்திபூர்வகமாக அபராதம் செய்யும் வாஸனையையும் தொலைத்துவிடும். இதனால் த்வயத்தில் சொல்லுகிறபடியே பகவான் லக்ஷ்மீ ஸமேதனாய்க்கொண்டு உபாயமும் உபேயமும் ஆனால்போலே அவன் திருநாமத்தை ஓதும்பொழுதும் பிராட்டி திருநாமத்தையும்சேர்த்து ஓதுதலே வினைதீர்ப்பதற்கு அருமருந்து என்றுமாயிற்று. இவ்வர்த்தத்தை ஆண்டாள் 'போயபிழையும் புகுதருவான் நின்றனவும், தீயினிற்றூசாகும்' என்று வேதப்பொருளாக அருளிச்செய்தார்.

இப்படித் திருநாம பஜநம் பண்ணுகிறவர்கள் ஸ்ரீவைகுண்டத்தில் பரவாஸுதேவனை இடைவிடாது ஸேவித்து ஆநந்தப்பெருக்காய் ஸாம காநம்பண்ணிக்கொண்டிருக்கும் நித்யஸூரிகளுக்கு ஒப்பாவார்கள் என்று மேல்பாசுரம்.

8. சாராவேதங்கள் நீரார்முகில்வண்ணன்
பேராரோதுவார் ஆரார்அமரரே.

திருநாமஸங்கீர்த்தநத்துக்கு இன்னார்தான் அதிகாரி என்றும் நியமமில்லை. அவன் (நீரார்முகில்வண்ணன்) தண்ணீர்நிறைய அருந்தினமேகம், ஜலம ஸ்தலம் மலை தாழ்வரை தனிகளர் என்றும் வித்யாஸங்களைப்பாராமல் எங்கும் பொழியுமாப்போலே நீலமேகனும் தனது கருணை வெள்ளத்தை உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்றும் தரம் பாராதே எல்லாரிடத்திலும் வர்ஷிக்கும் தன்மையையுடையவன். எனவே (ஆர் ஆர் அவன்பேர் ஓதுவார்) யாவர் அவன் திருநாமங்களைச் சொல்லுவார்களோ. (அவர்கள் ஆரார்) எத்தனை அபக்ருஷ்டஜாதியிற் பிறந்தவர்களாகிலும், எத்தனை துராசாரங்களை உடையவர்களானாலும் (ஏதங்கள் சாரா) எவ்விதப் பொல்லாங்குகளும் அவர்களைக்கிட்டா. 'அபி சேத் ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக் । ஸாதுரேவ ஸ மந்தவ்ய:' (எவ்வளவு துராசாரனாயிருந்தாலும் என்னை அநந்ய சரணமாக அடைவானாகில் அவனை ஸாதுவென்றே கொள்ளவேண்டும்) என்று சரண்



யன்தானே உகக்கும்படி ஆவார்கள். 'யேऽபி ஸ்யு: பாபயோநய:... தேऽபி யாந்தி பராம் கதிம்' (என் பக்தர்கள் பாபயோநிகளிற் பிறந்தவர்களாகிலும் உத்தம கதியை அடைகிறார்கள்) என்றருளிச்செய்ததும் நினைக்கற்பாலது. அவர்களுக்கு ப்ரதிபந்தகங்களெல்லாம் தீர்ந்து ஸ்வரூப ப்ராப்த பகவத் கைங்கர்யங்கள் அபர்வறும் அமரர்களுக்குப்போல் கிடைத்துவிடும். (அமரரே) இது திண்ணம்.

இதனால் 'ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ:', (எவரும் தன்னுடைய ஜாதி குலம் ஆச்ரமம் முதலியவைகளுக்கு உரிய ஸத்கர்மங்களைக் கொண்டே ஸர்வேச்வரனை ஆராதித்துப் பரமபுருஷார்த்தத்தைப் பெறுகிறான்) என்று ஸ்ரீகீதாசார்யன் அருளிச்செய்தது ப்ரஸ்தாவிக்கப்பட்டது. பூர்வ ஜன்மங்களிற் செய்த கர்மங்களுக்குத் தக்கபடி இப்போதுண்டாயிருக்கும் பிறவி ஜாதி பக்திக்கு இடையூறல்ல; அதற்கேற்ற தர்மங்களையும் நியமங்களையும் அதிக்ரமித்தலும் கூடாது என்றதும் காட்டப்பட்டது.

9. அமரர்க்கரியானைத் தமர்கட்கெளியானை
அமரத்தொழுவார்கட் கமராவினைகளே.

இப்படி அவனை ஆச்ரயித்தலே பாபங்களையெல்லாம் போக்குமென்றால், ஜ்ஞாநம் மிகுந்த ப்ரும்மதேவன் முதலானவர்களும் கடுக மோக்ஷம் பெறாமல் இருப்பது ஏனென்றால் அவர்கள் அண்டாதிபத்யம் முதலிய சில்வான ப்ரயோஜநங்களை ஆசைப்பட்டவர்கள் ஆதலால் அவ்வமரர்க்கு அரியனானான் ஸர்வேச்வரன். அநந்யப்ரயோஜநமாய்த்தன் திருவடிகளையே பரமப்ரயோஜநமாகப்பற்றின (தமர்களுக்கு) அதாவது தன்னுடையவர் என்பார்களுக்கு அவன் எளியனானான். 'லோகநாத: புரா பூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி' (ஸர்வலோகத்துக்கும் நாதனாய் ரக்ஷகனாயிருந்த ஸர்வேச்வரன் தன்னைச் சரணமடைந்த ஸுக்ரீவனைத்தனக்கு நாதனாக அபேக்ஷிக்கிறான்) என்னப்பட்டதிறே. ஆகையால் அவனை (அமரத்தொழுவார்கட்கு) ப்ரயோஜநாந்தரங்களை அபேக்ஷியாமல் அவனிடத்திலேயே பக்தியுடன் வணங்கி வழிபடுவார்கட்கு அவர்கள் வேடுவச்சி, வேடன் குரங்கு ரிஷி என்றவாறு எத்திறத்தவர்களாகிலும், (அமராவினைகளே) உபாயத்துக்கும் மோக்ஷத்துக்கும் பகவதநுபவத்துக்கும் தடங்கல்செய்யும் கருமங்கள் விரோதியாகவில்லா. அவை வெகு சீக்கிரத்தில் நசித்துவிடும், பகவத் ப்ராப்தி தவிர்ந்த மற்ற புருஷார்த்தங்களில் ருசியை விளைவிக்கும் வினைகளும் கழிந்துபோம்.

10. வினைவல் லிருளென்னும் முனைகள் வெருவிப்போம்
சுனைநன் மலரிட்டு, நினைமின் நெடியானே.

இப்பாட்டில் கீழ்ச்சொல்லிய ப்ரகாரங்களில் திருநாம ஸங்கீர்த்தநம், புஷ்பார்ச்சனை ப்ரணாமம் முதலிய பஜந ப்ரகாரங்கள் பக்தியோகத்தைப் பூர்த்தியாக்கும் ப்ரகாரமாய்ச் சொல்லப்படுகிறது. இவை த்யாநரூபமான பக்தியோகத்திலேயா, அதைச்சேர்க்கலம் புகுவதான ப்ரபத்தியிலேயோ, மோக்ஷம் பெற அபேக்ஷிக்கும் அதிகாரிகள் இருவர்க்கும் ஸமம். (நெடியானே) ஸர்வ

ப்ரகாரத்தாலும் பரிபூர்ணமான ப்ரபுவுக்கு நாம் செய்யும் புஷ்பார்ச்சனை முதலியவை ஒரு ஸத்காரம் ஆகக்கூடுமோ? அவற்றைக்கொண்டுமட்டில் நமக்கு அவன் இரங்க விரகில்லை. ஆனால் அவன் நெடுமோல் ஆகையால், அதாவது தன் ப்ராணிகளிடத்தில் என்றும் மாளாத அன்மைவைத்த, தீர்க்க பந்துவாகையால் என்றபடி; அவன் திருவடிகளில் (சுனைநன்மலரிட்டு) பரிசுத்த ஜலங்களில் உண்டான தாமரைப்பூ முதலியவைகளை ஸமர்ப்பித்து (நினைமின்) பக்தியோடு நினையுங்கள்; ப்ரீதியுடன் த்யானம் செய்யுங்கள் என்றபடி. அதனால் அவன் உங்களை நிரந்தரமாக நினைத்து ஒருபடியாலும் உங்களைக் கைவிடான். (வினைவல்லிருளென்னும் முனைகள் வெருவிப்போம்) புண்யபாபரூபங்களான இருவினை விலங்குகளும் இவற்றின் மூலமான அஜ்ஞாநம், ருசி, முதலிய ப்ரதிபந்தகக் கூட்டங்களும் 'சும்மெனாதே கைவிட்டோடிப்போம்' அவைகளின் கூர்கள் மழுங்கி செயலற்றுப்போம், என்னவுமாம். இது உபநிஷத்தில் 'ஸர்வேக்ரந்தீநாம் விப்ரமோக்ஷ:' என்றதை விளக்கிறது.

பின்னர் மனது பகவானிடத்திலேயே நின்று அவனநுபவத்தைப் பூர்ணமாகப் பெறும்.

11. நெடியானருள்சூடும், படியான் சடகோபன்
நொடியாயிரத்திப்பத், தடியார்க்கருள்பேறே.

ஸர்வேச்வரனுடைய திருக்கல்யாண குணங்களிலீடுபட்டு அவனையே 'உண்ணும் சோறும் பருகு நீரும் தின்னும் வெற்றிலையு'மாக அநுபவித்து, அவனுடைய க்ருபைக்குப் பூர்ணபாத்திரமாயிருந்த ஆழ்வார், தன்னைப்போலவே நாட்டாரும் பெறவேண்டுமென்னும் இரக்கத்தால் தான் நேரகக்கண்டதை ஸாக்ஷிபோல், 'ப்ரதிஜா[illegible]ந வி[illegible]யாவஹே' (சபதம் பண்ணுகிறேன்; நீ என் அருமைத் தோழனன்றோ) என்று கீதாசார்யன் மொழிந்த மாதிரி, சொன்ன சொற்கள் இவையாயிரமாகையினால் (நெடியான்......... ...நொடியாயிரம். நொடி - சொல்); அவற்றிலும்வைத்து, பக்தப்ரபந்நர் என்னும்படியான அடியார்கள் ஸுலபமாய் அப்யஸித்து வேண்டும் பெரும்பயனைப் பெறும் உபாயமாகிற பக்திப்ரகாரங்களைச் 'சுடர்மிகுசுருதி'யிலிருந்து கடைந்துகொடுக்கும் இந்தப்பத்துப் பாட்டுகளையும், தெளிவாய்த் தெரிந்து அவற்றின்வழியே நடப்பவர் எவர்க்கும் ஆழ்வாருக்குக் கிடைத்தமாதிரியே (அருள்பேறே) பரமபுருஷனுடைய க்ருபையாகிற பரமலாபமும் தன்மூலமான நிரந்தரபக்தியும் கிடைக்கும். இது நிச்சயம். மேல் மோக்ஷப்ராப்தியும் ஸித்தம்.

இப்படியாழ்வார் திருவாய்மொழி தொடக்கத்திலாரம்பித்த பக்தியோக உபதேசத்தை இப்பதிகத்தில் ஸர்வலோக உஜ்ஜீவநார்த்தமாக அவசியமாய் அறியவேண்டிய சாஸ்த்ரார்த்தங்களை ப்ரகாசமாயும் சுருக்கமாயும் உரைத்து நியமித்தருளினது இத்திருவாய்மொழியின் தன்னேற்றமாயிற்று.

ஸ்ரீ:

# பிரம்மமீமாம்ஸா ப்ரமேய ஸங்கிரகம்.

[ஸ்ரீ. உ. வேதாந்த ஶிரோமணி தோட்டாலம் வேணுகோபாலாசாரியர்.]

(தொடர்ச்சி)

## கர்த்ரு பேதத்திற்குப் பரிஹாரம்.

ஆனாலும் இந்த சாஸ்த்ரம் வெவ்வேறு மனிதர்களால் ப்ரவர்த்திதமானதால் சாஸ்த்ரமும் பரஸ்பரம் பிந்நபிந்நமெனவே கொள்ளவேண்டுமெனச் சொல்வதும் பொருந்தாது. ஒரே சாஸ்த்ரமென எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டும், ஒரே மூலத்திற்கு வ்யாக்யாநமாகவும் ஏற்பட்ட காசிகாவ்ருத்தி என்கிற வ்யாகரண க்ரந்தம் (பாணிநீ ஸூத்ர வ்யாக்யாநம்) வாமநன் ஜயாதித்யன் என்ற இருவர்களால் செய்யப்பெற்றிருப்பதாகக் காண்கிறோம். இதை இரண்டு சாஸ்த்ரங்களாக யாரும் சொல்லக் காண்கிலோம். அப்படியே ஆபஸ்தம்ப ஸூத்ர வ்யாக்யாநம் ஒரு பாகம் தூர்த்தஸ்வாமியாலும் மற்றொரு பாகம் கபர்த்தி என்பவராலும் செய்யப்பட்டிருக்கிறது. லௌகிகமான காவ்யங்களிலும் இவ்வழக்கத்தைக் காண்கிறோம். இவைகள் வெவ்வேறு சாஸ்த்ரங்களாக யாரும் சொல்லக்காணவில்லை. உலகத்திலும் ஒரு பெரிய காரியத்தில் ஒரு பாகத்தை ஒருவர் செய்திருந்தால் அதையப்படியே எடுத்துக்கொண்டு மற்றொருவர் மிகுதியைப் பூர்த்திசெய்யக்கண்டிருக்கிறோம். ஆகையால் கர்த்ருபேதம் சாஸ்த்ரபேதத்திற்குக் காரணமாகமாட்டாது.

## அர்த்தபேதத்திற்குப் பரிஹாரம்.

பரஸ்பரம் இவ்விருவர்களுக்கும் அர்த்தத்தில் (அபிப்ராயத்தில்) பேதமிருப்பதால் சாஸ்தரபேதம் கொள்ளவேண்டுமென்பதும் சரியல்ல. ஜைமிநி பாதராயணர்கள் இருவரும் ஶிஷ்யாசார்யர்கள். இருவரும் வேதார்த்தத்தை உபநிஷத் உள்பட செவ்வைபாய்த் தெரிவிக்கக் கருதி யிறங்கியவர்கள். இவ்விருவர்களின் க்ரந்தங்களில் விரோதமிருப்பதாகக்கூறுவது பின்னிட்டு வந்த வ்யாக்யாதாக்களின் தோஷத்தாலாகும். அவர்களின் உட்கருத்தை யறியாமல் ஆபாதமாய்ப் பார்க்குமளவில் தோன்றும் பேதத்தையும் விரோதத்தையும்கண்டு, அவைகளை உண்மையெனக் கருதி வெளியிட்டுவிட்டார்கள். உட்புகுந்து பார்த்தாலோ அவற்றில் யாதொரு விரோதமுமில்லை. தேவதைகளின் விஷயத்தில் எடுத்துக்காட்டிய விரோதமும் விரோ

தமாகாது. கர்மங்களால் ப்ரீதியடையும் தேவதைகள் ப்ரளயகாலத்தில் நாசமடைகின்றார்களாகையால், கர்மங்களிலிருந்து பலம் கிடைப்பது ஸந்தேகமெனச் சிலருக்கு அவைகளில் அச்ரத்தை பிறக்க, அவர்களுக்கு எப்படியாவது அக்கர்மங்களில் ச்ரத்தையுண்டாகச் செய்யக்கருதி அக்நீந்த்ராதிசப்தமே தேவதையானபடியால் கர்மங்களால் பலமுண்டாகத் தட்டில்லை யென்று ஸமாதாநம்சொல்லி எவ்விதத்திலாவது அவர்களை வேதோக்தமான மார்க்கத்திலிழியும்படி செய்தால் பிறகு அவர்களைத்தம் வழிக்குத் திருப்பிக்கொள்ளலாமென்ற எண்ணத்துடன் இச்சமாதாநமே தத்காலத்திற்குப்போதுமெனக்கருதி, ஜைமிநீ, தேவதாவிக்ரஹம் முதலியவற்றை நிராகரித்து கர்மங்களின் ப்ராசஸ்த்யத்தை நிலைநிறுத்தினார். ஆனால் இதை ஸ்ரீபாதராயணர்தம் தேவதாதிகரணத்தில் கண்டிக்கக்காரணமென்னெனில்- சில மந்தப்ரஜ்ஞர்கள் ஜைமிநியின் உட்கருத்தையறியாமல் இவ்வளவு மாத்திரமே தத்வம் (உண்மை) என்று நினைக்கக்கூடும் எனக்கருதி அதைக் கண்டித்துத் தேவதாவிக்ரஹம் முதலியவற்றை ஸ்தாபித்துக் கர்மங்களால் ப்ரீதியடையும் ஸர்வேச்வரன்தான் பலப்ரதாநம் செய்யுமவன் என்பதை நிஷ்கர்ஷித்தருளினார்.

## தேவதையைவிட த்ரவ்யமே ப்ரபலமெனக் காரணம்—

த்ரவ்ய தேவதைகளின் சேர்க்கையில் த்ரவ்யமே ப்ரபலமென்று ஜைமினி கூறியதுதேவதையை அபலபிக்கவுமன்று; அதன் பிராதாந்யத்தைக் குறைப்பதற்குமன்று. எந்தக்கருமங்களுக்கு அங்கங்களை விதித்து அதை இன்னவாறு செய்ய வேண்டுமென்று விதிக்கவில்லையோ அக்கர்மங்களை, அவற்றின் தேவதையோ அல்லது த்ரவ்யமோ எக்கர்மத்துடன் ஒத்து இருக்கிறதோ அதைப்போல் கவனித்துச்செய்ய வேண்டுமென முதலில் நிஷ்கர்ஷித்து அவ்வாறு தீர்மானிக்குங்கால், சிலவற்றில் தேவதையைக் கவனித்தால் ஒருவிதமாயும் த்ரவ்யத்தைக் கவனித்தால் மற்றொருவிதமாயும் பரஸ்பரவிரோதமாய்த் தோன்றினபொழுது, தேவதையைவிட த்ரவ்யம் ப்ரபலமாதலால் த்ரவ்யத்தைக்கொண்டே (அதாவது நெய், புரோடாசம், ஸோமம் இவைகளில் ஒன்றைக் கொண்டு கவனித்தால் எக்கர்மத்துடன் ஒற்றுமை தோன்றுகின்றதோ அதன்படி) நிர்த்தாரணம் செய்யவேண்டுமென்று ஜைமிநி கூறியிருக்கிறார். அதாவது— தேவதை பரோக்ஷமானது (கண்ணுக்கெட்டாதது); த்ரவ்யமோ கண்ணுக்குப் புலப்படக்கூடியது; ஆகையால், தேவதையைக்காட்டிலும் மனிதனுக்கு முதலில் புத்திக்குப் புலப்படக்கூடியது த்ரவ்யமே. ஆகையால், அதைக்கொண்டே தீர்மாநம் ஏற்படுமாகில் பரோக்ஷமான தேவதை வரை நாம் கவனம் செலுத்தவேண்டிய அவசியமில்லை என ஜைமிநியின் கருத்து. அல்லாது அவர் தேவதையை அபலபிக்க வந்தவரல்



லர். ப்ரஹ்ம ஸூத்ரத்திலும் வெகு இடங்களில் ஸ்ரீவ்யாஸர் ஸ்வபக்ஷ ஸாதகமாகப் பலவிடங்களில் ஜைமிநியை உதாஹரிக்கின்றார். அப்படியே தம் ஸூத்ரங்களில் ஜைமிநியும் ஸ்ரீபாதராயணரை உதாஹரிக்கின்றதையும் காணலாம். இப்படி இருவரும் ஒருவர்க்கொருவர் ஸம்மதியை நாடும் பொழுது அவர்களுக்கு அபிப்ராயபேதமிருப்பதாகக் கூறுவது நன்கு ஆலோசித்துக் கூறினதாகாது.

## பூர்வோத்தரமீமாம்ஸைகளின்பௌர்வாபர்யத்தில் ப்ரமாணம்.

இப்படி பூர்வகாண்ட விசாரம் உத்தரகாண்ட விசாரத்திற்கு அபேக்ஷிதமானபடியால் ஒரே சாஸ்த்ரமெனக் கருதப்பட்டாலும் பூர்வமீமாம்ஸா விசாரம் தொடங்கவேண்டுமென்கிற 'பௌர்வாபர்ய (முன்பின் கிரம)த்திற்கு காரணமென்னெனில்— இதை முன்னமேயே ஸூசிப்பித்தோம், கொஞ்சம் விஸ்தாரமாகவும் சொல்லக்கடவோம். ஜைமிநியால் க்ரமாத்யாயம் என்ற ஐந்தாவது அத்யாயத்தில் கர்மங்களில் முன்பின் செய்யவேண்டிய க்ரமத்திற்கு "ச்ருதி அர்த்த பாட ஸ்தாந முக்ய ப்ரவ்ருத்தி" என்று ஆறு ப்ரமாணங்கள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஆறு ப்ரமாணங்களாலும் பூர்வமீமாம்ஸை முன்செய்யவேண்டியதென்றும் உத்தர மீமாம்ஸை பின்னடியென்றும் தெளிவாகின்றது.

ச்ருதி:—எப்படியெனில் 'பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாத்' (கர்மங்களால் கிடைக்கின்ற லோகங்கள் நச்வரமென்று பரீக்ஷைசெய்துதெளிந்து வெறுப்புக்கொண்டு) என்று கர்மவிசாரம் செய்தபிறகே ப்ரஹ்மவிசாரம் செய்யவேண்டுமென்பதால் க்ரமத்தைவெளியிடக்கூடிய ச்ருதி (ச்ருதிசொல்) என்ற ப்ரமாணம் வேதத்தாலேயே காட்டப்பட்டது.

அர்த்த:—அப்படியே உலகத்தில் மனிதனுக்கு முதலில் தர்மம் அர்த்தம் காமம் என்கிற மூன்று புருஷார்த்தங்களில் ருசிபிறந்து அதில்தோஷங்களைக் கண்டறிந்தபிறகே மோக்ஷத்தில் ஆசை பிறக்குமாதலால் ஔசித்யத்தை யொட்டி முதலில் அம்மூன்று புருஷார்த்தங்களுக்கு ஸாதநமான கர்மங்களை விசாரம் செய்வதே உசிதமென்பது அர்த்த க்ரமமாகும். மேலும் 'யஜ்ஞேந தாநேந தபஸாநாசகேந' என்றபடி உபாஸநத்திற்குக் கர்மங்கள் ஸாதநமானபடியாலும் கர்மங்களை முன் விசாரித்துப் பிறகு உபாஸநத்தைப் பற்றி விசாரிப்பது உசிதமாகும். இது அர்த்த க்ரமம்.

பாட:— வேதம் எந்த க்ரமத்தில் அத்யயநம் செய்யப்பட்டதோ அதன் அர்த்தத்தை அந்த க்ரமத்திலேயே விசாரிப்பது உசிதம். ஒரு கர்

மத்திற்கு அங்கங்களாக விதிக்கப்பட்ட பதார்த்தங்கள் எந்த க்ரமத்தில் படிக்கப் பட்டிருக்கின்றனவோ அவைகளை அந்த க்ரமத்தில் செய்வது பாட க்ரமத்தாலாகுமெனக் கூறுவார்கள். அப்படியே இவ்விஷயத்திலும் பாட க்ரமம் காணலாம்.

ஸ்தாநம்— வேதாத்யயநாநந்தரகாலம் கர்மவிசாரத்திற்கு காலமாத லால் அதன் ஸ்தாநத்தில் அதைச் செய்தே பிறகு மற்றொன்றைச் செய்ய வேண்டுமென்பது ஸ்தாந க்ரமத்தாலாகும்.

முக்யம்— தர்ம நிர்ணயத்திக்குச் சாதநம் வேதம். அதற்கு அங்கம் மீமாம்ஸா விசாரம். அங்கி எந்த க்ரமத்தில் செல்லுகின்றதோ அதே க்ரமத்தில் அங்கமான விசாரம் செல்லவேண்டுமென்பது முக்ய க்ரமம்.

ப்ரவ்ருத்தி— தர்ம நிர்ணயத்திற்குச் சாதநமாந வேத பாகங்களை உத்தேசித்துச் செய்யவேண்டிய அங்கங்கள் (காரியங்கள்) அத்யயநம் அக்ஷர க்ரஹணம் (வேதவாக்யங்களை வசப்படுத்தல்) அர்த்த விசாரம் இவைகள். இவற்றில் முதல் கார்யம் எந்த க்ரமத்தில் ஆரம்பிக்கப்பட்டதோ அதே க்ரமத்தில் இரண்டாவதையும் அப்படியே மூன்றாவதையும் செய்யவேண்டு மென்பது ப்ரவ்ருத்தி க்ரமம். ஆனதுபற்றி கர்மபாகத்தில் அத்யயநமும் அக்ஷர க்ரஹணமும் முடிந்ததும் மூன்றாவது அங்கமான அர்த்தவிசாரத்தை மட்டும் அக்கர்ம பாகத்திற் செய்யாமல் உபநிஷத் பாகத்தில் அநுஷ்டிப் பதாகக் கூறுவது முற்றிலும் பொருந்தாதது. ஆகையால், பூர்வமீமாம்ஸா விசாரம் செய்தே உத்தரமீமாம்ஸா விசாரம் செய்யவேண்டும். இவ்வர்த் தம் ஸ்ரீபாஷ்யத்தில் செவ்வையாய் நிரூபிக்கப்பட்டு அதற்கிணங்க 'அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' என்கிற ஸூத்ரத்தில் 'அத' என்ற பதத்திற்குக் கர்ம மீமாம்ஸா விசாரம் முடிந்ததும் என்றே பொருள் கூறப்பட்டிருக்கிறது.

ஸாதந சதுஷ்டயந்தான் பூர்வ வ்ருத்தம் என்பார் சிலர்.

இவ்விஷயம் இவவளவு தெளிவாக இருந்தும் சங்கர மதத்தைச்சேர்ந் தவர் (அத்வைதிகள்) சொல்வதாவது:— ப்ரஹ்மவிசார சாஸ்த்ரம் எதைக் கட்டாயம் அபேக்ஷிக்கின்றதோ அதையே அதற்குப் பூர்வபாவியெனச்சொல் வது பொருந்தும். அதன் ஆநந்தர்யத்தையே 'அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' என்கிற ஸூத்ரத்திலிருக்கும் 'அத' என்கிற பதம் கூறும். அது எதென் னில்— 'நித்யாநித்யவஸ்து விவேக:' 'சமதமாதி ஸாதந ஸம்பத்' 'இஹாமுத்ரார்த்த பலபோக விராக:', 'முமுக்ஷுத்வம்' என்றஇவ்நான்கே,



இவைகளையே 'ஸாதந சதுஷ்டயம்' என்று சொல்வது. இதன் தாத்பர்யமா வது:—நித்ய முக்தமாயும் ஸ்வயம் ப்ரகாசமுமாயிருக்கும் ப்ரஹ்மமே அவி த்யாரூபமான தோஷத்தால் மறைக்கப்பட்டுத் தன்னைத் தேவன் மனுஷ்யன் என்று இவ்வாறு நாநாவிதமாகநினைத்து, அதன்மூலமாயுண்டான ஜந்மம் ஜநந மரணம் என்கிற பலவிதமான ஸம்ஸார துக்கத்தை அநுபவிக்கின்றது. அதற் குக் காரணம் அவித்யையால் உண்டாகிய நாநாவித பேதஜ்ஞாநம். இப்பேத ஜ்ஞாநம் ப்ரமமாகையால் தந்மூலமான ஸம்ஸாரபந்தமும் ப்ரமமேயாகும் ஆனதுபற்றி ஸம்ஸாரபந்தம், தன் காரணமான அவித்யையுடன், தத்வஜ்ஞா நம் பிறந்துவிட்டால் நிவ்ருத்தமாய் விடுகின்றது. உலகத்திலும் ஒரு வஸ்து வைக்கண்டு மற்றொன்றாக ப்ரமிப்பவனுக்கு அந்தப்ரமம் நீங்க அவ்வஸ்துவின் ஜ்ஞாநமேயல்லவா அபேக்ஷிதம். அப்படியே ப்ரமத்தாலுண்டான பாத த்தை நீக்க உண்மையான ஸ்வரூபஜ்ஞாநமே அபேக்ஷிதம். அந்த ஜ்ஞாநம் 'தத்வமஸி' முதலிய வாக்யங்களால் பிறக்கிறது. அதாவது, உலகம் யாவும் பொய்; ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம் என்பதாகும். எந்த அவித்யையால் ஸம் ஸாரபந்தம் உண்டாயிற்றோ அவ்வவித்யா நிவ்ருத்திதான் மோக்ஷம். இவ் வித ஸகலபேத தர்சந நிவ்ருத்தி ரூபமான மோக்ஷத்திற்கு, வர்ணாச்ரம தர்மங்கள் முதலிய நாநாவித பேதங்களையுட்கொண்டிருக்கும் கர்மங்கள் எப் படி ஸாதநமாகும்? அன்றிக்கே பாதகமாயும் முடியும். அநித்ய பலத்திற்கு ஸாதநமான கர்மங்கள் நித்யமான மோக்ஷத்திற்கு ஸாதநமாக வழி யில்லை. '[illegible]' '[illegible]' இது முத லிய வாக்யங்களும் கர்மங்கள் அநித்ய பலத்திற்கு ஸாதநமென்றும் ஜ்ஞாந மொன்றே மோக்ஷ ஸாதநமென்றும் சொல்லுகின்றன. ஆனால் 'தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந தாநேந' என்கிற வாக்யத்தால் யஜ்ஞங்களும் ப்ரஹ்மஜ்ஞாந ஸாதநமாகச் சொல்லப்படவில்லை யோ வெனில், 'விவிதிஷந்தி' (அறியவிரும்புகிறார்கள்) என்றிருப்பதால் கர் மங்கள் ப்ரஹ்மஜ்ஞாநத்தை ஸம்பாதிக்க வேண்டுமென்கிற விருப்பத்திற்கு ஸாதநமேயல்லாது ப்ரஹ்மஜ்ஞாநத்திற்கு ஸாதநமாகா. அதாவது-பாபத்தின் மூலமாயுண்டாகும் ரஜோகுண தமோகுணங்களை மனத்தில் ஒட்டாமலொழி த்து, ஸத்வகுணத்தைத் தலையெடுக்கச்செய்து அந்த:கரணத்தை (மனத்தை) நிர்மலமாக்கி, அவ்விருப்பத்தை (விவிதிஷையை) த்ருடமாக்குவதாகும். ஆகையால் கர்மங்களுக்குப் பரம்பரையாய் உபயோகமேயொழிய ஸாக்ஷாத் ஜ்ஞாநத்தில் உபயோகமில்லை. ஸாதந சதுஷ்டயமோ வென்றால் ப்ரஹ்ம ஜ்ஞாநத்திற்கு எல்லா வகையிலும் பொருத்தமான ஸாதநமா யிருப்பதால் ப்ரஹ்ம விசாரத்திற்கு அதே பூர்வபாவியாகக் கடவது என்பது தான்.

## இதற்கு சமாதானம்.

இது முற்றிலும் பொருந்தாது. ப்ரஹ்மவிசாரம் கட்டாயமாகப் பூர்வமீமாம்ஸா விசாரத்தையே தனக்குப் பூர்வ பாவியாக அபேக்ஷிக்கின்றதேயல்லாது ஸாதந சதுஷ்டயத்தை அபேக்ஷிக்க இடமே யில்லை. அவித்யா நிவ்ருத்திதான் மோக்ஷமென்றும் அது ப்ரஹ்மஜ்ஞானத்தாலேயே ஸித்திக்குமென்பதிலும் விவாதமில்லை. ஆனால் அவ்வவித்யை நிவர்த்திக்க வேதாந்த சாஸ்த்ரங்களால் விதிக்கப்படும் ஜ்ஞாநமானது அத்வைதிகள் சொல்லும் கணக்கில் கேவலம் மஹாவாக்யங்கள் மூலமாயுண்டாகும் வாக்யார்த்த ஜ்ஞாநமாகாதென்பதையும், 'வேதந, த்யாந, உபாஸந' முதலிய சப்தங்களால் சொல்லப்பட்ட பக்திரூபமான ஜ்ஞாநமே என்பதையும், அப்பக்தியின் ஸ்வரூபத்தின் உத்பத்தியிலே கர்மங்கள் அபேக்ஷிதங்கள் என்பதையும் மற்றொரு சமயம் விஸ்தரிக்கக்கடவோம். இங்கு இவ்வம்சத்தை ஸித்தமென பாவித்து ஸாதந சதுஷ்டயம் பூர்வவ்ருத்தமாகாதென மாத்ரம் நிரூபிக்கின்றோம். மோக்ஷஸாதநமாகிய இப்பக்தி ரூப ஜ்ஞாநமானது ப்ரதிதிநம் அநுஷ்டிக்கப்படுகின்ற பரமபுருஷாராதந ரூபமான கர்மங்களால் ப்ரஸந்நனான பகவானுடைய அநுக்ரஹத்தின் மூலமாய் உண்டாகவேண்டி யிருப்பதால், தனக்கு ஸாதநமான கர்மங்களையே முதலில் இது அபேக்ஷிக்கக் கூடுமாதலால் அவைகளை விசதமாக்கும் சாஸ்த்ரமே (பூர்வமீமாம்ஸை) இதற்குப் பூர்வ வ்ருத்தமெனப் பொருந்தும்.

## ஸாதநசதுஷ்டயத்தின் தூஷணம்.

மேலும் ஸாதந சதுஷ்டயத்தின் ஸ்வரூபத்தைக் கவனித்தாலும் அதைப் பூர்வவ்ருத்தமெனச் சொல்வதுபொருத்தமற்றதெனத் தெளிவாகும். எப்படியெனில், 'நித்யாநித்யவஸ்து விவேக' மாவது - கர்மங்களின் பலம் அநித்யம் உபாஸநத்தின் பலம் நித்யம், ஆகாசாதிகள் அநித்யம் ஆத்மா நித்யம் என்றிவை முதலியவற்றின் நிச்சயரூபமான விவேகமாகும். இந்நிச்சயமோ இரண்டுவிதமான மீமாம்ஸா விசாரமும் முடிந்தபிறகே ஸித்திக்கக்கூடியது. ஆகாசம் அநித்யம் ஆத்மா நித்யன் என்ற அம்சம் ப்ரஹ்ம ஸூத்ரத்திலல்லவோ தீர்மானிக்கப்படுகின்றது. அத்யயநமாத்ரத்தாலுண்டான ஜ்ஞாநமோ ஆபாதப்ரதீதியாகும் (ஸம்சயமும் விபரீதஜ்ஞாநமும் கலந்தது). ஆகையால் நிச்சயஜ்ஞாநம் பின்னிட்டு உண்டாகவேண்டியது எப்படி பூர்வ பாவியாகக்கூடும்? 'இஹாமுத்ர பலபோக விராக' மாவது-(இஹ) இவ்வுலகத்திய பலத்தின் அநுபவத்திலும், (அமுத்ர) ஸ்வர்க்கம்முதலிய பலாநுபவத்திலும் வைராக்யம். இது, இருவிதமான பலங்களிலும் இது நித்யம், இது நச்வரம், இது துக்கம் கலவாதது இது துக்கம் கலந்தது



என்ற நிச்சயரூப ஜ்ஞாந ஸாத்யமாதலால் மீமாம்ஸை இரண்டுபாகமும் விசாரித்தபின்பே உண்டாகத்தகுந்தது. ஆகையால் அதை எப்படி பூர்வ பாவியாக்குவது? 'முமுக்ஷுத்வ'மும் (மோக்ஷத்தில் விருப்பம்) மோக்ஷஸ்வரூபத்தைச் செவ்வனே அறிந்த பிறகு உண்டாகவேண்டியது. அதுவோ ப்ரஹ்மஸூத்ரம் நான்காவது அத்யாயத்தின் காரியம். அப்படியே, 'சமதமாதி ஸாதந ஸம்பத்' தும் ப்ரஹ்ம ஸூத்ரத்தின் மூன்றாவது அத்யாயத்தில் உபாஸநத்திற்கு அங்கமாக விதிக்கப்பட்டு அவ்வுபாஸநத்தை க்ரமமாகச் செய்யும் காலத்தில் அநுஷ்டிக்கப்படவேண்டியதெனக் கூறப்பட்டிருக்கிறது. அதை எப்படி விசாரத்திற்குப் பூர்வபாவியாக ஸம்பாதிக்க முடியும்? ஆனால் ப்ரஹ்மவிசாரத்திற்கும் ஒருவிதமான சாந்தியபேக்ஷிதமென 'சாந்தோ தாந்த உபரதஸ்திதிக்ஷு:' என்று வேதமே கூறுகிறதெனில் அச்சாந்தி, விஷயத்தைத் தெரிந்துகொள்வதற்குத்தகுந்ததேயொழிய உபாஸநத்திற்கு அபேக்ஷிதமான ஸம்பூர்ண விஷயவைராக்யமாகாது. மேலும்சாந்தி விஷயவிசாரத்திற்கு அபேக்ஷிதமென்பது எல்லாவிஷய விசாரத்திற்கும் பொதுவானதாகும். இங்கு பூர்வபாவியாகச்சொல்வது ப்ரஹ்ம விசாரத்திற்கு அஸாதாரணமாகயிருக்க வேண்டுமேயல்லாது பொதுவான ஒரு கார்யத்தை 'அத' சப்தம் சொல்லமாட்டாது. அப்படியாகில் போஜநத்திற்குப்பிறகு என்றுகூட அர்த்தம் செய்யலாம். ஆகையால் ஸாதந சதுஷ்டயம் எவ்விதத்திலும் பூர்வவ்ருத்தமாக இடமேயில்லை.

---

ஸ்ரீ:

ஆழ்வார்களெல்லாரும் க்ருஷ்ணாவதாரம் என்றவாறே போர மண்டியிருப்பார்கள். அதுக்கடி, அல்லாத அவதாரங்கள் போலன்றிக்கே, ஸமகாலமாகையாலே "ஒரு செவ்வாய்க் கிழமை முற்படப் பெற்றிலோம்! பாவியேன்! பல்லிலே பட்டுத் தெறிப்பதே!". என்னும் இழவாலும், பரிவர் தேட்டமான அவதாரமாகையாலே அதை அநுஸந்திக்கையில் வந்த வயிற்றெரிச்சலாலும். ராமாவதாரத்தில் தகப்பனார் ஏகவீரனாயிருப்பானொருவன், பிள்ளைகள் தாங்களும் ஆண்புலிகள்; ஆகையால் எதிரிகள் என்கிற சப்தமில்லை, இங்கு அங்ஙனன்றிக்கே, தகப்பன் ஒரு ஸாது வ்ருத்தன், பிறந்ததும் கம்ஸன் சிறைக்கூடத்தில், வளர்ந்த விடத்திலோ எழும் பூண்டுகளகப்பட அஸுரமயமாயிருக்கும் இப்படியானால் வயிறெரியாதிரார்களே இவர்கள்.

ஸ்ரீ:.

# புஸ்தக விமர்சம்.

## வ்யாஸ ஸித்தாந்த மார்த்தாண்டம்.

ஸ்ரீ வேதவ்யாஸ பகவானால் உபநிஷத்துக்களின் ஸாரதமார்த்தங்களை ஸங்க்ரஹித்து அருளிச்செய்யப்பட்ட ப்ரஹ்ம ஸூத்ரங்களின் ஸாராம்சத்தை, ஸாதாரண ஜ்ஞான முள்ள ஸாதுக்களும் ஸுகமாக அறிந்து உஜ்ஜீவிப்பதை உத்தேசித்து, மஹா மஹோ பாத்யாயர் ஸ்ரீ. உ. வே. தேசிகாசார்ய ஸ்வாமி வ்யாஸ ஸித்தாந்த மார்த்தாண்ட மென்னும் க்ரந்தத்தை அருளிச்செய்திருக்கிறார். அதை அடியேன் பார்க்க நேர்ந்தது.

ஸ்ரீ தேசிகாசார்ய ஸ்வாமி, மோக்ஷார்த்திகளால் அவச்யஜ்ஞாதவ்யமான உபாயோபேய ரூபமான அர்த்த த்வயத்தையே உத்தரமீமாம்ஸா சாஸ்த்ரம் ப்ரதான மாக ப்ரதிபாதநம் பண்ணுவதாகத் திருவுள்ளம்பற்றித் தமது க்ரந்தாரம்பத்தில், ச்ரிய: பதியான நாராயணனே பரப்ரஹ்மமென்றும், ஸ்ரீ வைகுண்டமென்கிற தேச விசேஷ மடைந்தவனுக்குத் தத்ஸாயுஜ்ய ப்ராப்தியே மோக்ஷமென்றும், ஸ்ரீ வேதவ்யாஸ பகவான் சாரீரகஸூத்ரங்களில் ஸித்தாந்தம் செய்திருப்பதாக ப்ரதிஜ்ஞை செய்து மேல் இவ்விஷயங்களை விஸ்தாரமாக நிரூபணம் பண்ணத் தொடங்கி, உபநிஷத் வாக்யங்களினுடைய ஸ்வாரஸ்யங்களும் பூர்வோத்தர ப்ரகரணாநுகுண்யமும் ஷெ விஷயங்களுக்கே நன்றாக இருக்கும் அம்சத்தை விசதமாக நிரூபித்து, பிறகு அவ்வுபநிஷத்துக்களின் அர்த்த விசேஷங்களை ஸமீசீந ஹேதுக்களைக் கொண்டு நிர்த்தாரணம் பண்ணும் ஸூத்ரங்களினுடைய தாத்பர்யங்களையும் அதிக விஸ்தாரமில்லாமலும் அதிக ஸங்கோசமில்லாமலும் அதிஸரளமான ஸம்ஸ்க்ருத பாஷையில் ஆஸ்திகாள அனைவரும் அறிந்துகொள்ளும்படி உபபாதநம் செய்திருக்கிறார்.

'அதாதோ ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா' என்று ப்ரஹ்மத்தை விசாரிக்கத் தொடங்கின ஸூத்ரகாரர், ஜந்மாதிகரணத்தில், எது ஜகத்காரணமோ அதுவே ப்ரஹ்மம் என்று சொல்லி, அந்த ஜகத்காரணமான வஸ்துதான் இன்னதென்று விசாரிக்கத் தொடங்கி, உபநிஷத்துக்களில் சில காரண வாக்யங்களில் காணப்படும் ஸதஸதாதி சப்தங்கள் வாக்யாந்தரங்களுடைய அபேக்ஷையில்லாது இன்ன தேவதை தான் ஜகத்காரணமென்று குறிப்பிட்டுச் சொல்ல யோக்யமில்லாததினாலும், ஆகாச ப்ராணாதி சிலவ்யக்தி விசேஷங்களைக் காரணமாகக் குறிப்பிட்டுச் சொல்லும் சில உபநிஷத்வாக்யங்கள் அயோக்யார்த்தங்களாகையினாலும், மற்றும் சில உபநிஷத்துக்கள் காரணத்வோபயுக்த ஸர்வாகாரங்களோடு கூடின நாராயணனையே ஜகத்காரண மென்று நிராகாங்க்ஷமாகக் குறிப்பிட்டுச் சொல்வதால் ஸத்வித்யாதிகளில் காணப்படும் ஸதஸதாதி ஸாமாந்ய சப்தங்களை நாராயணனாகிய வ்யக்தி விசேஷத்தில் விச்ரமிப்பித்து, ஜகத்காரணம் நாராயணனென்றே அநுஸந்திப்பது ந்யாய ஸித்தமென்கிற அர்த்தத்தை ஈக்ஷத்யதிகரணம் முதலாக பல அதிகரணங்களில் நாராயணஸாதாரண லிங்கங்களைக் கொண்டு நிச்சயித்திருப்பதாகச் சொல்லி, மேல் அவ்விஷயங்களையும் விஸ்தாரமாக உபபாதித்திருக்கிறார்.



மோக்ஷார்த்திகளான சேதநர்கள் ஸம்சயமில்லாமல் மோக்ஷோபாயத்தில் ப்ரவ்ருத்திக்க வேண்டியதை உத்தேசித்து உத்தரமீமாம்ஸா சாஸ்த்ரத்தைச் செய்தருளின ஸூத்ரகாரர், வேதாந்தங்களில் ப்ராக்ருத்யாதிகள் ஜகத்காரணமாகச் சொல்லப்பட வில்லை யென்று நிச்சயித்திருப்பதுடன் வேதாந்தங்கள் இன்ன தேவதையைத்தான் ஜகத்காரணமாகச் சொல்லி யிருக்கின்றன என்கிற விஷயத்தையும், தீர்மானித்துக் காட்டாதவரையில் ஷெ சாஸ்த்ரத்துக்கு ந்யூநதாரூப தோஷம் வருமாகையினால், 'ஈக்ஷதேர் நாசப்தம்' மென்பது முதலான ஸூத்ரங்களினாலும் ஏதாவது ஒரு வஸ்துவை ஜகத்காரணமென்று குறிப்பிட்டுச் சொல்லி யிருக்கவேண்டியது அவச்யம். ஸத்தே ஜகத்காரணமென்றும் ஸத்தை உபாஸித்தவனுக்கே மோக்ஷப்ராப்தியையும் சொல்லுகிற ஸத்வித்யாவாக்யமானது, புருஷ ஸூக்தத்தில் 'ஸர்வாணி ரூபாணி விசித்ய தீர:' என்கிற வாக்யங்களினால் சொல்லப்படும் நாராயணனுடைய ஜகத்காரணத்வத்துக்கு', 'நாமாநி க்ருத்வா' என்பதால் ஸித்தமான அவனுடைய மோக்ஷப்ரதாநத்துக்கும் ப்ரத்யபிஜ்ஞையை உண்டுபண்ணுவதால் ஸத்வித்யையிலும் நாராயணனே ஜகத்காரணமென்று சொல்லப்படுவதாகத் திருவுள்ளம்பற்றின ஸூத்ரகாரர், ஷெ இரண்டு அர்த்தங்களையும் 'ஈக்ஷதேர் நாசப்தம்' 'தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத்' என்கிற இரண்டு ஸூத்ரங்களினால் தீர்மானித்திருப்பதாக ஸ்ரீ தேசிகாசாரிய ஸ்வாமி ஸாதித்திருக்கிறார். ஈக்ஷதே: நா சப்தம் மென்று பதத்தைப் பிரித்து நாமவ்யாகரணபர்யந்தம் ஈக்ஷணம் ச்ருதமாக இருப்பதால் 'ஸ ச நா புருஷ:' அதாவது "நாராயணன்" என்று ஸூத்ரத்திற்கு மற்றுமொரு அபூர்வார்த்த வர்ணநம் செய்திருக்கிறார். அப்படியே ஆநந்தமயாதிகரண விஷய வாக்யத்தில் 'ஸ யச்சாயம் புருஷே' என்று ஆநந்தமயனை நாராயணவாசியான 'புருஷ' சப்தத்தினால் சொல்வதாலும் ஸூத்ரகாரரும் 'புருஷவிதேந ஈயதே' என்று மற்றோரிடத்தில் புருஷ சப்தவாச்யனைப் பரப்ரஹ்மமாகஸ்தாபிக்கையினாலும் அந்தரதிகரணத்திலும், புண்டரீகாக்ஷனை உபாஸ்யனாகச் சொல்வதாலும் இந்த இரண்டு அதிகரணங்களிலும் நாராயணனுக்கே ஜகத்காரணத்வத்தை ஸ்தாபித்திருப்பதும், ஷெ சப்தங்கள் நாராயணனுக்கே அஸாதாரணங்கள் என்கிற விஷயத்தை ஸப்ரமாணமாக நிரூபித்திருப்பதும் ச்லாகிக்கக்கூடியது.

மேலும், இதுபோலவே, ஒவ்வொரு அதிகரணத்திலும் ச்ருதி ஸ்வாரஸ்யத்துடன் கூடின ஸூத்ரஸ்வாரஸ்யத்தினால் நாராயணனுக்கே காரணத்வத்தை நிரூபணம் பண்ணியிருப்பதுடன், 'ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமிநி:' என்கிற ஸூத்ரத்திலிருக்கும் ஜைமிநி சப்தத்திற்கு அதர்வசிகையில் பகவதந்தராத்மத்வ அநுஸந்தாந மூலமான ருத்ரவாக்யங்களை உபந்யஸித்துக் காட்டி ருத்ரபரமாக அபூர்வமாக மற்றொரு வ்யாக்யாநம் செய்திருப்பதும் ஸ்ரீ தேசிகாசாரிய ஸ்வாமியினுடைய ப்ரதிபாவிசேஷத்தை ப்ரஸித்தப்படுத்துகிறது.

இது நிற்க 'ஸூத்ராக்ஷராணி வ்யாக்யாஸ்யந்தே' என்று அருளிச்செய்த ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீஸூக்தியின்படியே ஸூத்ராக்ஷரங்களின் ஸ்வாரஸ்யத்தை



186767

ஸம்யக் பரிசீலனம் செய்யும் பண்டிதர்கள் 'सर्व[illegible]' "विवक्षितगुणोपपत्तेश्च' 'कर्मकर्तृव्यपदेशाच्च' 'शब्द[illegible]व्यपदेशाच्च' '[illegible]' 'सर्व[illegible]उपपत्तेश्च' என்னும் இத்யாதி ஸூத்ரங்களினால் ப்ரஹ்மம் ஸகுணத்தையுடையதென்றும் ஸகுணமென்றும் நிர்விசேஷமன்று ஸவிசேஷமென்றும் வ்யக்தமாக ஸ்ரீதேசிகாசார்ய ஸ்வாமி சொல்லுவதுபோல 'भेदव्यपदेशाच्च' - 'भेदव्यपदेशाच्चान्यः' 'भेदनिर्देशात्' என்பவை முதலான அநேக ஸூத்ரங்களினுடைய அக்ஷரஸ்வாரஸ்யத்தினால் ஜீவேச்வரர்களுக்கு அத்யந்தபேதமே ஸூத்ரகாரருடைய திருவுள்ளமென்று ஏற்படுமாகையினாலும், இங்கு ஸூத்ரகாரர் கல்பிதபேதத்தையோ அல்லது மித்யையாகவோ ஒருபேதத்தைச் சொல்லவில்லை யென்று சொல்வது, லோகோஜ்ஜீவனார்த்தம் சாஸ்த்ரநிர்மாணம் செய்ததற்குப் பொருந்தா தாகையினாலும், எல்லாஸூத்ரார்த்தங்களும் அத்வைத மதத்திற்கு நன்றாகப் பொருந்தாவென்கிற விஷயத்தைத்தெளிவாக நிரூபித்து இருப்பதும் ரொம்பவும் முக்யமானவிஷயம். இதன்மேல் ஸ்ரீமந்நாராயணனேடு தேசவிசேஷத்தில் நல்யபோகாநுபவமாகிற இரண்டாவது விஷயத்தை இரண்டாவதுபாகத்தில் நிரூபிக்க ஆரம்பித்து ஜீவனுடைய உத்க்ராந்திதொடங்கி ஜகத் வ்யாபாரவர்ஜபாவத்தோடு பரப்ரஹ்மத்துடன் போகமாத்ரத்தினால் ஸாம்யத்தையும் அநாவ்ருத்தி பர்யந்தமாகக் கண்டாவெண சொல்லுகிற ஸூத்ராக்ஷரங்களையும் உபநிஷதர்த்தங்களையும் விஸ்தாரமாக விசாரித்து ஸித்தாந்தம் செய்திருக்கும் க்ரந்தங்களின் சிலபாகமே கிடைத்திருப்பதால், பாக்கி க்ரந்தங்களும் கிடைத்தபிறகு அதையும்பார்த்து ஸந்தோஷிக்க ஆஸ்தையுள்ளவர்களாக இருக்கிறோம்.

ஸ்ரீதேசிகாசார்யஸ்வாமி நம்பூர்வாசாரியர்கள் போனமார்க்கத்தையே அநுஸரித்து ஸ்ரீச்ருதப்ரகாசிகாமுதலான பெரிய ரத்நங்களில் அஸர்வஜ்ஞ துர்ஜ்ஞேயங்களை ஸ்தல விசேஷங்களில் ப்ரகாசிக்கும் இவ்வுத்க்ருஷ்ட விஷயங்களாகிற மஹாரத்நங்களை ஆராய்ந்தெடுத்து, அதன்மேல் படிந்திருக்கும் அந்யமதஸ்தர்களுடைய தூஷணாபாஸங்களாகிற பங்கவிசேஷங்களை அதிஸ்வச்சமான தமது ப்ரதிபா ப்ரபாவத்தினால் சுத்திசெய்து, ஸம்ப்ரதிபந்ந ப்ரமாணங்களாகிற ஸூத்ரங்களுடன்சேர்த்து ஸஹ்ருதய ஹ்ருதயங்கமமாய் யாவரும் அநுபவிக்கும்படி ஸுலபமாகத் தொடுத்திருப்பதை உத்தேசித்து விசேஷத: ஸந்துஷ்டனாகிறேன்.

இக்காலத்தில் தர்க்கவ்யாகரணாதி ஸாமாந்ய சாஸ்த்ரங்களில் விசேஷபரிசயத்தோடு ஸ்ரீபாஷ்ய ச்ருதப்ரகாசிகாதி ப்ரௌடக்ரந்தங்களில் விசேஷ பரிசயத்தினால் நம்விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாய ஜ்ஞாநமாகிற மகாநிதியை ஸம்ரக்ஷித்து வரும் ஸ்ரீதேசிகாசார்யஸ்வாமிபோன்ற ஸ்ரீவைஷ்ணவபண்டிதர்கள் ம்ருதஸஞ்ஜீவநீ ப்ராயராகி விட்டதை நன்றாக உணர்ந்திருக்கும் நம்வைஷ்ணவசிகாமணிகள் அப்பண்டிதர்களின் அபிவ்ருத்தியின் உபாயத்தை சிந்தித்து, அநுஷ்டிப்பது அவச்யமாகும்.

ஓர் ஸ்ரீவைஷ்ணவ தாஸன்.

ஸ்ரீ:.

# கடிதங்கள்.

## (1)

## நரகம்.

ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபருக்கு:—

நரகம் என்பது ஒன்று உண்டென்று, தேஹத்தைக் காட்டிலும் ஆத்மா வேறு என்று ஒப்புக்கொள்ளும் ஒவ்வொரு மதஸ்தர்களும் ஸர்வகாலத்திலும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அது ஒன்றா பலவா என்பதைப்பற்றியும், அது எவ்விடத்தில் உளது என்பதைப்பற்றியும், அதன் ஸ்வரூபமென்ன என்பதைப்பற்றியும், நரகங்கள் அநேகம் என்றால் எவ்விதமான நரகத்திற்கு எந்தக் கர்மத்தைச் செய்தவன் போகிறானென்பதைப்பற்றியும், அதை எவ்வளவு காலம் பாபிகள் அநுபவிக்கிறார்களென்பதைப்பற்றியும் அபிப்ராய பேதங்களிருக்கலாமே தவிர நரகமென்று ஒரு ஸ்தாநமிருக்கிறதென்பதைப்பற்றி விவாதமே கிடையாது.

மேலும் வைதிகர்களாகிய நாம் நரகம் ஒன்று இருக்கிறதா இல்லையா என்று ஸந்தேஹப்படவேண்டியதே கிடையாது. வேதங்களிலும் ஸ்ம்ருதிகளிலும் இதிஹாஸ புராணங்களிலும் நரகத்தின் ஸத்தை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ரிக்வேதம் நாலாவது மண்டலம் முதல் அநுவாகத்தில்

'अभ्रातरो न योषणो व्यन्तः पतिरिपो न जनयो दुरेवाः ।
पापासः सन्तो अनृता असत्या इदं पदमजनता गभीरम् ॥"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் "கபீரம் பதம்" என்பதனால் ஸ்தாநம் தான் குறிப்பிடப்படுகிறதென்று ஸாயணாசார்யர் சொல்லுகிறார். கடோபநிஷத்திலும் யமஸதநம் ஒன்று உண்டு என்று ஏற்படுகிறது. அதுவும் தவிர்த்து, ப்ரஹ்ம ஸூத்ரம் 3-வது அத்யாயம் 1-ம் பாதம் 23-வது ஸூத்ரத்திலும் அதன் பாஷ்யத்திலும் நரகம் இருக்கிறதென்றும் அங்கு பாபிகள் செல்லுகிறார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் ஸ்ரீபாஷ்யம்.

'दृश्यन्ते हि पापकर्माणो यमवश्याः । [illegible] [illegible] [illegible]' [illegible] 'उत्तराधिष्ठाः' என்று.

ஸ்ம்ருதிகளில் முக்யங்களான மநுயாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதிகளிலும் நரகம் என்பது இருக்கிறதென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத்பாகவதம் 5-வது ஸ்கந்தத்திலும், ஸ்ரீமத்ராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் 41-வது ஸர்க்கத்திலும் உத்தரகாண்டம் 1-வது ஸர்க்கத்திலும் மஹாபாரதம் ஆநுசாஸநிகபர்வம் 208-வது அத்யாயத்திலும்

ஸ்வர்க்காரோஹணபர்வம் 2-வது அத்யாயத்திலும், விஷ்ணுபுராணத்திலும், கௌதம தர்மஸூத்ரம் 3-வது ப்ரச்நம் 2-வது அத்யாயத்திலும் நரகம் உண்டென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இக்காரணங்களால் நரகமென்று ஒரு ஸ்தாநம் இருக்கிறதென்றும், அதற்குச் செல்லுகிறவர்கள் பாபிகளென்றும் ஒப்புக்கொள்ளவேண்டி இருக்கிறதே தவிர இதெல்லாம் பிசுநென்றாவது அர்த்தவாதமென்றாவது சொல்லக் கொஞ்சமேனும் இடமில்லை.

அப்படி இருக்க, நரகங்கள் எவ்விடமிருக்கின்றன என்பதும், அவைகளின் எண்ணிக்கையும், எந்தப் பாப விசேஷத்தைச் செய்தவன் எந்தவிதமான நரகத்தை அடைகிறான் என்பதும், அவ்விடத்தில் எவ்விதமான யாதனையை எவ்வளவுகாலம் அநுபவிக்கிறார்களென்பதும், ஸ்ம்ருதிகள் இதிஹாஸங்கள் புராணங்கள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு விதமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன.

முதலில் நரகம் இருப்பது எவ்விடமென்பதைப்பற்றி விசாரித்தால், ஸ்ரீமத்பாகவதம் 5-வது ஸ்கந்தத்தில்,

“அந்தரால ஏவ த்ரிஜகத்யாஸ்து திஶி தக்ஷிணஸ்யாம் அதஸ்தாத் பூ
மே: உபரிஷ்டாச்ச ஜலாஶயஸ்ய”

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத்ராமாயணம் கிஷ்கிந்தாகாண்டத்தில் ஸுக்ரீவ மஹாராஜன் தென்திசையைநோக்கி ஸீதா பிராட்டியைத்தேடிச் செல்லப்போகும் வாநரவீரர்களுக்கு அவர்கள் சொல்லவேண்டிய மார்க்கத்தைச்சொல்லி, பிறகு,

தத: பரம் ந வ: ஸேவ்ய: பித்ருலோகஸ் ஸுதாருண: ।
ராஜதாநீ யமஸ்யைஷா கஷ்டேந தமஸாவ்ருதா ॥

என்று சொல்லுகிறார். அதே க்ரந்தத்தில் உத்தரகாண்டத்தில் ராவணனுடைய திக்விஜயங்களைச் சொல்லிவரும்பொழுது அவன் யமனுடன் சென்று யுத்தம் செய்ததாயும் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விடத்திலும், யமபுரம் பூமிக்கு அடியில் இருப்பதாய்ச் சொல்லப்படவில்லை.

விஷ்ணுபுராணத்தில் 2-வது அம்சம் 6-வது அத்யாயத்தில்,

‘ததஶ்ச நரகா விப்ர புவோ(அ)த: ஸலிலஸ்ய ச ।
பாபிநோ யேஷு பாத்யந்தே தாந் ஶ்ருணுஷ்வ மஹாமுநே ॥’

என்று பூமிக்கும் ஸலிலத்திற்கும் அடியில் நரகங்கள் இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது.

மஹாபாரதம் அநுசாஸநபர்வம் 208-வது அத்யாயத்தில் உமாமஹேச்வர ஸம்வாதத்தில்,

‘ஶ்ருணு பாமிநி தத்வேந வக்ஷ்யே நரகஸம்ஸ்திதா: ।
பூமேரதஸ்தாத் விஹிதா: கோரா துஷ்க்ருதகர்மணாம் ॥’

என்று நரகங்கள் பூமிக்கு அடியிலிருப்பனவாகவும், பிறகு ஸ்வர்க்காரோஹண பர்வம் 2வது அத்யாயத்தில் தர்மராஜன் தேவர்களுடன் கர்ணனையும் தன் ஸோதரர்களையும் பார்க்கவேண்டுமென்றும் அவர்களிருப்பிடத்திற்குத் தன்னையும் அழைத்துச்செல்லும்படி சொன்னபொழுது அவர்களால் ஆஜ்ஞாபிக்கப்பட்ட தூதன் கோரமான மார்க்கத்தின் வழியாய்த் தர்மராஜனை நரகத்திற்கு அழைத்துச்சென்றதாய்ச் சொல்லுகிறதே தவிர, தர்மராஜனைப் பூமிக்கு அடியில் அழைத்துச்சென்றதாய்ச் சொல்லப்படவில்லை. உமாமஹேச்வர ஸம்வாதத்தில் ஸ்வர்க்கத்தைப்பற்றிச் சொல்லியிருப்பதையும் ஸ்வர்க்காரோஹண பர்வாவில் தர்மராஜன் நரகத்திற்குச் சென்றதாய்ச் சொல்லியிருப்பதையும் ஒத்திட்டுப்பார்த்தால் நரகம் பூமிக்கு அடியிலிருப்பதாய் ஏற்படவில்லை.



முன்சொன்ன க்ரந்தங்கள் எல்லாவற்றையும் கவனித்தால் அடியிற்கண்ட வ்யத்யாஸங்கள் தோன்றுகின்றன.

(1) ஸ்ரீமத் ராமாயணம் மஹாபாரதத்தில் ஸ்வர்க்காரோஹணபர்வம் இவைகளின் ப்ரகாரம் தெற்குதிக்கில் இருப்பதாய் ஏற்படுகிறதே தவிர பூமிக்கு அடியிலிருப்பதாய் ஏற்படவில்லை.

(2) ஸ்ரீமத் பாகவதம் 5-வது ஸ்கந்தத்தின்படி நரகங்கள் பூமிக்கு அடியிலும் அண்டஜலாசயத்திற்கு மேலும் இருப்பதாய் ஏற்படுகிறது.

(3) மஹாபாரதம் உமாமஹேச்வர ஸம்வாதத்தில் அவை பூமிக்கு அடியிலிருப்பதாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றனவே தவிர, அண்டஜலாசயத்திற்கு மேலிருக்கின்றனவா அதற்குக் கீழிருக்கின்றனவா என்று சொல்லப்படவில்லை.

(4) விஷ்ணுபுராணத்தில் அவை பூமிக்கும் ஜலத்திற்கும் அடியில் இருப்பனவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படி நரகஸ்தாநத்தின் ஸந்நிவேசத்தில் வ்யத்யாஸமிருப்பதுடன் அவ்விடத்தில் இருப்பவர்கள் யாவர் என்பதைப்பற்றியும் க்ரந்தங்கள் ஒருவாறாக இல்லை. ஸ்ரீமத் ராமாயணம் உத்தரகாண்டம் தவிர இதர க்ரந்தங்களில் நரகங்களில் புண்ய க்ருத்யங்களைச்செய்தவர்களிருப்பதாய்ச் சொல்லப்படவில்லை. ஆனால், உத்தரகாண்டத்தில்,

‘காம்ஶ்சித் ப்ரேதான் மஹாபாகான் கீதவாதித்ரநிஸ்வனை: ।
ப்ரமோதமாநானத்ராக்ஷீத் ராவண: ஸுக்ருதை: ஸ்வகை: ॥
கோரஸம் கோப்ரதாநேந அந்நம் சைவாந்நதாயின: ।
க்ருஹாம்ஶ்ச க்ருஹதாதார: ஸ்வகர்மபலமஶ்நத: ॥
ஸுவர்ணமணிமுக்தாபி: ப்ரமதாபிரலங்க்ருதான் ।
தார்மிகானபரான் தத்ர தீப்யமானான் ஸ்வதேஜஸா ॥
ததர்ஶ ஸ மஹாபாஹு ராவணோ ராக்ஷஸாதிப: ।

என்று யமனுடைய ராஜ்யத்தில் தாங்கள் செய்த ஸுக்ருதத்தின் பலத்தை அநுபவிப்பவர்களுமிருப்பதாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

சேட்லூர் ஸ்ரீநிவாஸராகவன்.

(2)

ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபருக்கு,—

காளயுக்தி ஹூ புரட்டாசிமீ ஸஞ்சிகையில் "தீபிகாபிமாநிகளுக்கு ஓர் விஜ்ஞாபநம்" என்று மகுடமிட்டு மாஜி பத்ராதிபர் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸராகவ ஐயங்கார் எழுதியிருந்த ஸ்ரீமுகத்தை ஸேவித்தேன்........................................................................................அதைப்பார்த்த அடியேனுடைய ஹ்ருதயம் மிகவும் சோகித்தது. ஏனெனில், பொதுக்கார்யங்களை நடத்த முன்வரத் தகுந்த மனிதர்கள் அகப்படுவதே இக்காலத்தில் அருமை; அதிலும் ஸர்வ விதத்திலும் குற்றமில்லாத நபர்கள் அகப்படுவது பின்னும் துர்லபம். ஒருகால் ஸுலபமானாலும், அவர்கள் பொதுக்கார்யத்தை வஹிக்கத் தொடங்கும்பொழுதே ஜநங்கள் அன்னோர்மீது ஆயிரக்கணக்கான குற்றத்தைச் சுமத்துவார்கள். இது உலக வழக்கம். இந்தச் சம்பந்தத்தில்,

‘ [illegible] ’

இத்யாதியான ஆசார்ய ஸ்ரீஸூக்தியானது அடியேன் ஞாபகத்திற்கு வருகிறது.

ஐப்பசிமாஸத்திய ஸஞ்சிகையில் "ஒரு விஜ்ஞாபநம்" என்று ஆரம்பித்து, ப்ரஸ்துத விஷயத்தைப்பற்றி இப்பொழுது இருக்கும் கார்யதர்சியால் ஒருவாறு ஸமாதாநம் எழுதப்பட்டிருக்கிறது. அதுடன் அந்த விஷய சர்ச்சையை நிறுத்தி இருக்கலாம். அஃதன்றி, ஷை ஸஞ்சிகையிலேயே 35-வது பக்கத்தில், திருவல்லிக்கேணி ஸ்ரீ. உப. சே. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர் என்னும் ஒரு ஸ்வாமி, மாஜி கார்யதர்சியைக் குறைகூறி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அவ்விஷயங்களை அடியேன் நன்கு பராமர்சித்தேன்...........................அந்தக்கடிதத்தில் ஒவ்வொரு அக்ஷரத்தையும் நான் கண்டிக்கக்கூடும். ஆயினும், அது நம் நிலைக்கு ஒவ்வாது என்று நிறுத்தினேன். இதே ஸ்வாமி, மாஜி கார்யதர்சி ஸ்தாநத்தில் இருந்திருந்தால், இந்த ஸ்வாமியின் பேரிலும் அநேக கண்டநதீர்மானங்கள் இதரர்களால் கொண்டுவரமுடியும். இந்த ஸ்வாமிக்கு,

‘ ந கஶ்சிந்நாபராத்யதி ’

என்னும் வாக்யத்தை ஞாபகம் மூட்டுகிறேன்..........................................................

இம்மாதிரி எழுதும் அடியேனது அபிப்ராயம்— ஒரு ஸ்வாமியை ஸ்துதிக்கவும் ஒரு ஸ்வாமியிடம் அபசாரப்படவும் அன்று. ஆனால், நம் ஸித்தாந்தமே லோபித்து வரும் இக்காலத்தில், இந்தத் தீபிகையும் இந்த ஸபையும் தான் நம்போலியர்களுக்குச் சிறிது ஆச்வாஸம் கொடுத்து வருகிறது. ‘இதற்கும் லோபம் வந்து விடுமோ’ என்னும் அஸ்தாந பய சங்கையினால் அடியேன் இம்மாதிரி எழுதத்துணிந்தேன்.

சொரையூர் }
25-11-26 }

பெ. வ. ஸ்ரீநிவாஸ தாஸன்.

[இந்தக் கடிதத்தில் சில அம்சங்கள் அநாவச்யங்களாயும் ப்ரஸ்துத விஷயத்திற்கு ஸாக்ஷாத் ஸம்பந்தமற்றவைகளாயும் இருந்தபடியால் அவை ப்ரசுரம் செய்யப்படவில்லை. இனி இந்த விஷயத்தைப்பற்றிய சர்ச்சையை நிறுத்திவிடவேண்டுமென்று தீபிகாபிமாநிகளை ப்ரார்த்திக்கிறோம். ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபர்.]

ஸ்ரீ:

## தீபிகாபிமானிகளுக்கு ஓர் விஜ்ஞாபநம்.

இந்த வேதாந்ததீபிகை என்னும் மாஸாந்தரப் பத்ரிகையானது ஸுமார் 17-வருஷங்களுக்குமுன் இச்சென்னைமாநகரில் ஸ்ரீவைஷ்ணவ ப்ரமுகர்களில் சிலரால் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது இந்தப் பத்ரிகையானது ஸ்ரீஅஹோபிலமட சிஷ்யஸபையாரால் வெளியிடப்பட்டு வந்தது. இந்தப் பத்ரிகையின் முதல் ஸஞ்சிகை ஸாதாரண வருஷம் மாசி மாதம் வெளிவந்தது.

திருவெவ்வுளூரில் வீரராகவன் திருவடி வாரத்தில் நடந்த ஐந்தாவது வார்ஷிக மஹாஸங்கத்தில் இந்த ஸபைக்கு ‘ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை’ என்று நாமகரணம் செய்யப்பட்டது. அது முதல் இந்தப் பத்ரிகை அகில ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் பொதுவாக நடத்தப்பட்டுவருகின்றது. தமிழ் ஜில்லாக்கள் எவ்வளவோயிருந்தும், தமிழ்பேசும் ஸ்ரீவைஷ்ணவ சிரோமணிகள் ஆயிரக்கணக்காகயிருந்தும், நம்முடைய தீபிகாபிமாநிகள் ஒரு ஆயிரம் கூட இல்லையென்பதைக்கேட்க ஸ்ரீவைஷ்ணவர்களின் மனம் நோவுமென்றே அடியேனுக்குத் தோன்றுகிறது.

இந்த வருஷம் ஆரம்பம்முதல் இதற்கு ஸ்ரீ. உ. வே. வங்கீபுரம் கோம்பூர் வாஸுதேவாசார்யர் பத்ராதிபராயும், மயிலாப்பூரிலிருக்கும் ஸ்ரீ. உ. வே. எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார் கார்யதர்சியாயுமிருந்து இந்தக் கைங்கர்யத்தை நடத்திவருகிறார்கள். ஏற்கெனவே ஸபாத்யக்ஷராயிருந்த ஸ்ரீ. உ. வே. கனம் ஹைகோர்ட்டு ஜட்ஜ் வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி ஸபாத்யக்ஷராயிருந்து வருகிறார். 17-வது வாலியூம் இரண்டாவது ஸஞ்சிகைமுதல் ஸ்ரீபாஷ்யகாரரால் அநுக்ரஹிக்கப்பட்ட ஸ்ரீவேதாந்த ஸங்க்ரஹமும் (தாத்பர்யதீபிகையை அநுஸரித்த ஒரு தமிழ் உரையுடன்), ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளையால் அநுக்ரஹிக்கப்பட்ட வ்யாக்யாநத்துடன் ஸ்ரீஆளவந்தாரின் ஸ்தோத்ர ரத்நமும் மாஸம் எவ்வெட்டுப்பக்கம் வீதம் அச்சிடப்பட்டு வருகின்றன. மேலும், இதுவரையில் ஸஞ்சிகை 1-க்கு 40 பக்கம் வீதம் அச்சிடப்பட்ட தீபிகை இப்பொழுது 48 பக்கம் வீதம் வெளிவருகின்றதை அபிமாநிகள் கவனித்திருக்கலாம். இந்தக் கைங்கர்யங்கள் நிர்விக்நமாய் முடியவேண்டியதற்கு முக்ய ஸாதநம் பணம். சந்தாதாரர்கள் அதிகமாய்ச் சேர்ந்தால் இன்னும் சில புதிய நூல்களையும் தகுந்த வ்யாக்யாநங்களையும் வெளிப்படுத்தலாம். ஏற்கெனவே மெம்பர்களாயிருக்கும் ஒவ்வொரு ஸ்வாமியும் குறைந்தது இன்னும் ஒரு ஸ்வாமியையாவது ப்ரார்த்தித்து நம்முடைய தீபிகையை அபிமாநிக்கும்படி செய்யவேண்டுமாய் ப்ரார்த்திக்கிறோம். அப்படிச் செய்தால் தீபிகை கூடிய சீக்கிரம் மிகவும் உயர்ந்த ஸ்திதிக்கு வரும்.

17-வது வாலியூம் ஆரம்பித்து மூன்று சஞ்சிகைகள் இத்துடன் வெளியாய்விட்டன. அநேக ஸ்வாமிகள் இரண்டுவருஷகாலமாய் தீபிகைக்கு சந்தாத் தொகையை அனுப்பவில்லை என்று ஆபீஸிலுள்ள கணக்குகளிலிருந்து ஏற்படுகின்றது. தீபிகையைச் சந்தாத்தொகையைக்கொண்டே நடத்தவேண்டியிருப்பதால் தீபிகாபிமானிகள் எல்

லாரும் பாக்கித்தொகை முழுவதையும் 1927-ம் வருஷம் ஜனவரிமாதம் 25-தேதிக்குள் வந்து சேரும்படி ஸ்ரீ. உ. வே. எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார் பி.ஏ. பி. எல். ஹைகோர்ட்டு வக்கீல், ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்சி, 5-நெ வடக்குமாட வீதி, மயிலாப்பூர், மதிராஸ் என்னும் விலாஸத்திற்கு அனுப்பவேணுமாய் ஸவிநயம் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி தற்காலம் சில அஸௌகர்யங்களால் பணம் அனுப்பாத விஷயத்தில் அஸிஸ்டெண்டு ஸிக்ரடரிக்கு 1927-ம் வருஷம் ஜனவரிமாதம் 25-தேதிக்குள், எப்பொழுது சந்தாத்தொகையை அனுப்பமுடியுமென்பதை தெரிவித்துக்கொள்ளவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

இப்படி இரண்டும் செய்யாதவர்களுக்கு பிப்ரவரிமீ ஸஞ்சிகை வி. பி. யில் அனுப்பும்படி நிர்பந்தம் நேரும். வி. பி. யில் ஸஞ்சிகை அனுப்புவதால் ஆபீஸுக்கு ஏற்படும் ச்ரமம் மிகவும் அதிகம். அத்துடன்கூட, தீபிகையின் சந்தாதாரர்களுக்கும் ரு. 3-4-0 அல்லது ரு. 5-4-0 செலவும் (அதாவது மணியார்டர் அனுப்புவதைக்காட்டிலும் இரண்டு அணு அதிகமாகவே) ஏற்படுகின்றது.

வி. பி. யில் அனுப்பும் ஸஞ்சிகையை மறுதளித்துத் திருப்பிவிடாதபடி பணத்தைக் கொடுத்துப் பெற்றுக்கொள்ளவேணுமாய் தீபிகாச் சந்தாதார்கள் ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.

வங்கீபுரம். கே. டி. சுந்தரராஜாசார்யன்,
அஸிஸ்டெண்டு ஸிக்ரடரி

---

ஸ்ரீ:.

## பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

### அக்ஷய (ஸ்ரீ).

| | | | | |
|---|---|---|---|---|
| 1927 | ஜனவரிமீ | 14உ | தைமீ | 1உ. வெ. ஏகாதசி வ்ரதம். மகர ஸங்க்ரமணம், சுக்ல த்வாதசி திதி. |
| ,, | ,, | 23உ | ,, | 10உ ஞா. க்ருஷ்ண ஷஷ்டி. |
| ,, | ,, | 24உ | ,, | 11உ தி. அஷ்டமி. |
| ,, | ,, | 29உ | ,, | 16உ ச. ஏகாதசி. |
| ,, | பிப்ரவரிமீ | 2உ | ,, | 20உ பு. அமாவாஸ்யை, திதித்வயம். |

[இந்தத் தை மாஸத்தில் சுக்ல ஏகாதசி திதி இல்லையாதலால், அந்தத் திதியில் நடத்தவேண்டிய ச்ராத்தத்தை மார்கழிமீ 29உ வியாழக்கிழமை தினம் செய்யவேண்டும்.]

---

ஸ்ரீ:

[illegible]

[illegible]

[illegible]

[illegible] ॥

# பத்ராதிபரின் குறிப்புகள்.

**மந்த்ரிகளின் நியமனம்.**

சென்ற ஸஞ்சிகையில் ராஜாங்க ஸம்பந்தமான சில விஷயங்களைப்பற்றி ப்ரஸ்தாவித்தோம். அதில், மந்த்ரிகளை நியமிப்பதற்காக ராஜாங்கத்தார் எவ்விதம் மஹாஜனங்களின் அபிப்ராயத்தைத் தெரிந்துகொள்ளுகிறார்களென்றும், அந்த மார்க்கம் நிர்துஷ்டமாய் இல்லாததால் ஸாமான்யஜனங்களுக்குள் பரஸ்பரம் த்வேஷத்தையும் ஸ்பர்த்தையையும் அது ஜநிப்பிக்கக் காரணமாகிவிட்டதென்றும் எழுதி இருந்தோம். இப்பொழுது அந்த ஸம்பந்தமான கோலாஹலங்களெல்லாம் ஒருவிதமாக சாந்தமாகிவிட்டன. மஹாஜனங்களால் அநுமதிகொடுக்கப்பட்டவர்களுக்குள் பஹுஜன ஸம்மதி பெற்றவர்களான காங்க்ரெஸ் கக்ஷிக்காரர்கள், தமது வ்ரதத்தை அநுஸரித்து ராஜாங்கஸம்பந்தம்பெற்ற அதிகாரங்களைத் தாம் ஏற்றுக்கொள்ளப் போகிறதில்லையென்று ராஜப்ரதிநிதியான கவர்னருக்குத் தெரிவித்ததின்பேரில், கவர்னர் ஒரு கக்ஷியிலும் சேராமல் மத்யஸ்தர்களாயுள்ள ஸப்யர்களிடமிருந்து மூன்று பெயர்களைத்தேர்ந்து எடுத்து, அவர்களை மந்த்ரிகளாக நியமித்துவிட்டார். கவர்னர் இம்மாதிரி செய்தது எல்லா ஜனங்களுக்கும் ஸந்தோஷகரம். மந்த்ரி பதவிக்கு நியமிக்கப்பட்டவர்கள் நிஷ்பக்ஷபாதிகளென்றும் ந்யாயத்தைவிட்டு விலகாமல் ராஜ்ய பரிபாலநம் செய்துவரக்கூடிய சீலமுள்ளவர்களென்றும் ப்ரஸித்தி பெற்றிருக்கிறபடியால், அது விஷயத்திலும் மஹாஜனங்களுக்கு த்ருப்தியே. நாமும் அம்மாதிரியான எண்ணத்துடன் அவர்களை ஸபாஜநம் செய்கிறோம். “[illegible]” என்று ப்ரதிதிநம் ஸ்ரீசரண்யனை ப்ரார்த்தித்துவரும் நமக்கு, அந்தச் சரண்யன் ராஜாதிகாரிகளுடைய மநஸ்ஸில் ப்ரவேசித்து அவர்களை ந்யாய்யமான மார்க்கத்திலேயே ப்ரேரிப்பிப்பன் என்னும் நம்பிக்கை உண்டு. ஆகையால், அதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை.

நமது கவலைமுழுவதும் ஜனங்களுக்குள் ஸௌஹார்த்தக்குறைவு மேன்மேலும் அதிகரித்துக்கொண்டு வருகிறதே என்பதுதான். ஏற்கெனவே காமக்ரோதாதிகளால் பரஸ்பரம் ஸ்பர்த்தை செய்துகொண்டுவந்த ஜனங்களுக்கு, ஸப்யர்களின் அர்ஹதையைக்குறித்து அபிப்ராயம்கொடுக்கும் அதிகாரத்தை ராஜாங்கத்தார் ஏற்படுத்தவே, கக்ஷி ப்ரதிகக்ஷி தீவ்ரமாகி, த்வேஷம் அதிகரித்து, ஒருவரை மற்றொருவர் நிர்லஜ்ஜமாகவும் பஹிரங்கமாகவும் அதிக்ஷேபித்துக் கொள்ளுகிறதென்றும் அவஸரம் அநுகூலமாக இருந்தால் அடித்துக்கொள்ளுகிறதென்றும் ஸம்பவித்துவிட்டது. ஆனால், இவ்விதம் ப்ரவ்ருத்திப்பவர்களெல்லாரும் ஸாமாந்யஜனங்களே. அப்படிப்பட்ட ஸாமாந்ய ஜனங்களுக்கு அந்த அர்ஹதா நிவேதநரூபமான அதிகாரத்தைக் கொடுக்காமலிருந்தால், இந்த லஜ்ஜாகரமான அதிக்ஷேபாதிகள் குறைவுபடுமோ என்னும் ஒரு எண்ணம் நமக்கு உண்டு, அப்படி அது குறைவுபட்டால், தேசத்திற்கு ஏற்படும் நன்மையுடன், க்ரோத பரவசர்களான அந்த ஜனங்களுக்கும் விஷயாபாவத்தால் அந்த க்ரோதோத்வேகம் கொஞ்சம் சாந்தமாகி ஒருவித நற்குணமும் ஏற்படலாம். 'படித்து சிக்ஷிதமதிகளாக இருக்குமவர்கள் மாத்திரம் இம்மாதிரியான அர்ஹதா நிவேதநத்திற்கு யோக்யர்கள்' என்று ஒரு வ்யவஸ்தை ஏன் ஏற்படுத்தக்கூடாது? இதைப்பற்றிய குணதோஷ விசாரத்தைத் தேசாபிமானிகளெல்லாரும் ஆலோசிக்கவேண்டும்.

*                *                *                *                *

**ச்ரத்தாநந்த ஸ்வாமி.**

உத்தரதேசத்தில் ஆர்ய ஸாமாஜிகர்களென்று நமது ஹிந்துமதத்தைச் சேர்ந்த ஒரு வகுப்பினர் உண்டு. இந்தத் தக்ஷிணதேசத்திலும் அந்த வகுப்பைச்சேர்ந்த சிலர் இங்குமங்கும் காணப்படுகிறார்கள். ஆஸ்திக்யத்தாலும் குணத்தாலும் அவர்களுட் சிறந்தவரான ஸ்ரீ ச்ரத்தாநந்த ஸ்வாமி என்னும் ஒரு மஹாந், நமது ஹிந்துமத அபிவ்ருத்தியையும் நமது தேசாபிவ்ருத்தியையும் குறித்து தீர்க்க காலமாக விசேஷித்த ச்ரத்தையுடன் பரிச்ரமப்பட்டுவந்தார். அவருடைய ருஜுவான அநுஷ்டாநமும் சுத்தமான மநோபாவமும், அவரிடம் ஸகலஜநங்களும் அபிமாநிக்கும்படி செய்தன. அந்தத்தேசத்திலுள்ள மதாந்தரஸ்தர்கள் கூட அவருடைய தைவபக்தியையும் ஆர்ஜவத்தையும் உத்தேசித்து அவரிடம் மஹத்தான கௌரவத்துடன் விச்வஸித்திருந்தார்கள். இந்மார்கழிமீ 8உ (அதாவது டிசம்பர் 23உ) வியாழக்கிழமை தினம், அவர், தேஹம் அஸ்வஸ்தமாக டில்லிநகரத்திலுள்ள தனது க்ருஹத்தில் படுத்து இருந்தபொழுது,



துருஷ்கமதத்தைச் சேர்ந்த ஒருவன், மதவிஷயமாக சிலவார்த்தைகளை ஸ்வாமியிடம் ப்ரஸ்தாபிக்க வேண்டுமென்று சொல்லி, அவர் படுத்திருந்த இடம்போய், மற்றொருவரும் இல்லாத அவஸரம் பார்த்து, அவரைக் கைத்துப்பாக்கிகொண்டு சுட்டுவிட்டதாக ஸமாசாரம் வந்திருக்கிறது. இது மிகவும் சோகிக்கத்தகுந்ததே. அவர் வ்ருத்தர், எவ்வித அபராதத்தையும் அறியாதவர், லோகஹிதத்திற்காகவே தனது ஆயுள்நாள் முழுவதையும் ஸமர்ப்பித்தவர், சிறந்த தைவ பக்தர்; இப்படிப்பட்ட மஹான், தேஹ அஸ்வாஸ்த்யத்துடன் ச்ரமப்பட்டுக் கொண்டிருக்கையில் வதம் செய்யப்பட்டார் என்பதைக்கேட்க எவர்தான் வருத்தமடையமாட்டார்கள்? உத்தரதேசத்தில் ஹிந்துக்களுக்கும் துருஷ்கர்களுக்கும் பரஸ்பரம் ஸ்பர்த்தை இருந்து கொண்டிருக்கின்றது என்பதும், சிற்சில ஸமயங்களில் இம்மாதிரியாக அது பர்யவஸிக்கின்றதென்பதும் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆனால், இரு கக்ஷியிலும் நிருபகரான விவேகிகள் இதுபோன்ற கொடிய கார்யத்தில் ஒருகாலும் ப்ரவேசிக்கார் என்பது நமது நம்பிக்கை. யாரோ ஒருவிவேக ப்ரஷ்டன் மௌட்யத்தால் இதில் ப்ரவ்ருத்தித்து விட்டான் என்றும், ஆகையால் துருஷ்க ஜாதியார் மீது ஹிந்துக்கள் இது ஸம்பந்தமாக உத்வேகம் அடைய எவ்வித காரணமும் இல்லையென்றும் நாம் நினைக்கிறோம். துருஷ்கர்களுட் பெரியோர்களாக இருக்குமவர்களெல்லாரும் இதைப்பற்றி மிக்க சோகிப்பதுடன், இம்மாதிரியாகக் கொலைசெய்வது பெரியதொரு பாபமென்று தங்கள் மதத்திற் சொல்லப்படுகின்றது என்றும் இதை ஹார்த்தமாக வெறுக்கிறார்கள். மௌட்யத்தால் க்ரோதபரவசர்களாகும் ஜனங்களை எவ்விடத்திலும் எல்லாமதத்திலும் காணலாம். அவர்கள் செய்யும் கொடிய கார்யங்களுடன் அவர்கள் மதத்தினர் எல்லாரையும் ஸம்பந்தப்படுத்துவது ந்யாயவிருத்தம். ஆகையால், ப்ரஸ்துத கொலை அதிமாத்ரம் உத்வேக கரமாக இருந்தபோதிலும், மூடனான ஒரு வ்யக்தியாற் செய்யப்பட்ட கார்யம் என்பதை உணர்ந்து, ஹிந்துக்கள் எல்லாரும், ஜாதி ஸாமாந்யத்தின்மீது த்வேஷம் கொள்ளாமல் சாந்தர்களாக இருப்பார்களென்று நம்புகிறோம்.

*                *                *                *                *

**ஸ்ரீமான் எம். ஓ. பார்த்தஸாரதி ஐயங்கார்.**

சென்ற ஞாயிற்றுக்கிழமை மத்யாஹ்நம், ஸ்ரீபார்த்தஸாரதி திருவடிவாரத்தில் பஹுகாலமாக வஸித்து வந்த ஸ்ரீமான் திவான்பஹதூர் எம். ஓ. பார்த்தஸாரதி ஐயங்கார் ஸ்வாமி பரமபதம் அடைந்தார் என்பதைக் கேட்க நாம் மிகவும் சோகிக்கிறோம். அவருடைய லௌகிக ப்ராபவம் பெரியதாக இருக்கையிலும், அப்படிப்பட்ட ப்ராபவத்தை வஹித்து வந்த நமது ஜாதியர் ஒருவர் போய்விட்டாரே

என்பதைப்பற்றி நாம் அவ்வளவு சோகிக்கவில்லை. உத்தமமான சில நல்ல குணங்களுக்கு ஸ்தாநமாக இருந்த ஒரு மஹாந் அந்தர்த்தாநத்தை அடைந்து விட்டாரே என்பது தான் நம்மை மிக்க வருத்துகின்றது. லோகத்தின் ஸ்திதியை ஸ்ரீ சரண்யன் இம்மாதிரியான குணசாலிகளை நிமித்தமாகக் கொண்டே நடத்தி வருகிறான். ஆகையால், அவர்கள் ஸாக்ஷாத்தாக ஒன்றும் செய்யாவிட்டாலும், அவர்களுடைய இருப்பே ஜகத்தின் ச்ரேயஸ்ஸின்பொருட்டு ஆகின்றது. இம்மஹாந் மிக்க தர்ம சிந்தைஉள்ளவர், தான் ஸம்பாதித்த த்ரவ்யத்தில் பெரும் பாகத்தைத் தர்மத்திற்குக் கொடுத்துவிட்டார் என்பது ப்ராயேண எல்லாருக்கும் தெரியும் தன்னுடைய சொந்தச் செலவுக்காக வைத்துக்கொண்ட த்ரவ்யத்தைக் கொண்டும் ரிக்தர்களான அநேக ஜநங்களுக்கு உதவி புரிந்து கொண்டு வந்தார். ஸ்ரீ வைஷ்ணவ விச்வாஸம் இவருக்கு அதிகமாக உண்டு. அவருடைய ஸௌலப்யத்தையும் ஸௌசீல்யத்தையும் அவருடன் பழகினவர்கள் நன்றாக அறிவார்கள். ஸம்ஸ்க்ருத பாஷா ஜ்ஞாநத்துடன் ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்த விஷயகமான ஜ்ஞாநமும் அவரிடம் பூர்ணமாக இருந்தது. நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையில் அவருக்கு விச்வாஸம் உண்டு. நமது வார்ஷிக ஸங்கங்களுட் சிலவற்றில் அவர் அந்வயித்திருக்கிறார். இப்படி நமக்கு விசேஷ ப்ரீதிபாத்ரமாயும் இவ்வளவு குணம்பொருந்தியுமுள்ள வ்யக்தி அரிதானதால், அவருடைய நிர்யாணத்தைப்பற்றி நாம் மிகவும் சோகிக்கிறோம். நமது சோகத்தை அந்த ஸ்வாமியின் தேஹ ஸம்பந்தம் பெற்றவர்களுக்கு இந்தப் பத்ரிகாமுகமாக நிவேதநமும் செய்கிறோம்.

*   *   *   *   *

**வார்ஷிக ஸங்கம்.**

ப்ரதி ஸம்வத்ஸரமும் இந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் வார்ஷிக மஹாஸங்கம் மார்கழி மாஸத்தில் நடைபெறுவது வழக்கம். இவ்வர்ஷத்தில் இரண்டு மாஸங்களுக்கு முன் ஸபையின் கைங்கர்யபரர்களில் சில மாறுதல்கள் ஸம்பவித்தபடியால் அது கொஞ்சம் விக்நிதமாக இருக்கின்றது. ப்ராயேண வருகிற பங்குனிமாஸத்தில் அதை ஸ்ரீ சரண்யன் நிர்விக்நமாக நடத்திக்கொள்வன் என்று நம்புகிறோம். அதைப்பற்றிய மற்றை அம்சங்கள் யதாகாலம் தீபிகையில் ப்ரசுரம் செய்யப்படும்.



ஸ்வரூபாவிர்பாவ பூர்வகாநவதிகாதிசயாநந்த ப்ரஹ்மாநுபவஜ்ஞாபநே ப்ரவ்ருத்தம் ஹி வேதாந்தவாக்யஜாதம்,

“தத்த்வமஸி” (சாந்தோக்யே. 6-8-7.)

“அயமாத்மா ப்ரஹ்ம” (ப்ருஹதாரண்யகே, 6-4-5)

“ய ஆத்மநி திஷ்டந் ஆத்மநோऽந்தரோ யமாத்மா ந வேத யஸ்யாத்மா சரீரம் ய ஆத்மாநமந்தரோ யமயதி ஸ த ஆத்மாऽந்தர்யாம்யம்ருத:” (ப்ரு. 5-7-22.)

---

**ஆத்மஸ்வரூபாவிர்பாவ பூர்வக** - ஆத்மாவின் ஸ்வரூபம் ஆவிர்பவிப்பதை முன்னிட்டுக் கொண்டிருக்கும். உபாஸநத்தால் ஆத்மாவின் ஸ்வரூபம் வெளிப்படுகின்றது என்பது கருத்து. சுத்த ஆத்மா நிர்த்துஷ்டமான வஸ்து; ஸர்வஜ்ஞத்வம் முதலிய குணங்கள் அதற்கு உண்டு. ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் ஜ்ஞாந ஸங்கோசம் ஏற்பட்டு, அவை ப்ரகாசிக்காமலிருக்கின்றன. கர்மபந்தம் விடவே முதலில் அவை ஆவிர்பவிக்கின்றன; பிறகு ப்ரஹ்மாநந்தம், என்பது க்ரமம்.

**அநவதிகாதிசயாநந்த ப்ரஹ்மாநுபவஜ்ஞாபநே** - அளவற்ற அதிசயத்துடன் கூடிய ஆநந்தத்தைக் குணமாக உடைய ப்ரஹ்மத்தை அநுபவிப்பதை அநுசாஸிப்பதில். இங்கு ‘ஜ்ஞாபந’ என்னும் பதமும் இவ்விடத்தில் ‘ஜ்ஞாபந’ என்னும் பதமும் ஒரே அர்த்தமுள்ளது.

**வேதாந்தவாக்யஜாதம் ப்ரவ்ருத்தம் ஹி** - ஸகல வேதாந்த வாக்யங்களும் ப்ரவ்ருத்திக்கின்றனவன்றோ? கேவலம் ஒரு வாக்யத்தை அவலம்பித்துச் சொல்லவில்லை, எல்லா வாக்யங்களும் இம்மாதிரி சொல்லுகின்றன என்பது தாத்பர்யம்.

அந்த வாக்யங்களாவன:—

**தத்த்வமஸி** - நீ அதுதான். அதாவது - நீ பரமாத்மாவை ஆத்மாவாக உடைத்தாயிருக்கிறாய். ‘நீ’ என்று ஒரு ஜீவனைக் குறித்துச் சொல்லப்பட்டது.

**அயமாத்மா ப்ரஹ்ம** - ஆத்மாவென்று சொல்லப்படும் வஸ்து ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உடையது. இது ஜீவ ஸாமாந்யத்தைப்பற்றியது.

**ய ஆத்மநி... அம்ருத:** - எந்தப் பகவான் ஜீவாத்மாவினிடத்தில் இருந்து கொண்டு அந்த ஆத்மாவுக்குள் இருக்கிறானோ; எவனை அந்த ஆத்மா அறியவில்லையோ; எவனுக்கு அந்த ஆத்மா சரீரமோ; எவன் அந்த ஆத்மாவை நியமிக்கிறானோ, அந்த விகார

"ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:" (ஸு. 7.)

"தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந தாநேந தபஸா அநாசகேந" (ப்ரு. 6-4-22)

"ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" (தை.)

"தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி நாந்ய: பந்தா அயநாய வித்யதே" (பு. ஸு.)

இத்யாதிகா:.

---

மற்றிருக்கும் அந்தர்யாமி உனக்கு ஆத்மா. இம்மாதிரியான வாக்யங்கள் பேத ச்ருதிகளையும் அபேத ச்ருதிகளையும் ஸமந்வயம் செய்கிறபடியால் கடக ச்ருதிகள் என்று சொல்லப்படுகின்றன.

**ஏஷ... நாராயண:** - எல்லா பூதங்களுக்கும் அந்தராத்மாவாக இருக்கும் இவன், கர்மஸம்பந்தம் அற்று திவ்யனாக ப்ரகாசிக்கும் ஒருவனான நாராயணனே. இந்தச்ருதி, அந்தப் பரமாத்மா நாராயணனே என்று சொல்லுகின்றது.

**தமேதம்...அநாசகேந** - அப்படிப்பட்ட இந்தப் பரமாத்மாவை வேதவாக்யங்களைக்கொண்டு ப்ராஹ்மணர்கள் அங்கப்ரயோஜனமாகச் செய்யப்படும் வர்ணாச்ரம தர்மாநுஷ்டானமாகிற யஜ்ஞத்தாலும் தானத்தாலும், தபஸ்ஸினாலும் அறிய இச்சிக்கிறார்கள். இது, வர்ணாச்ரம தர்மாநுஷ்டான ரூபமான கர்மம் உபாஸனத்திற்கு அங்கம் என்பதைச்சொல்லுகின்றது.

**ப்ரஹ்மவிதாப்நோதி பரம்** - பரமபுருஷனை உபாஸிக்கிறவன் அவனையே அடைகிறான். இது உபாஸநமே உபாயமென்பதைச் சொல்லுகின்றது.

**தமேவம்...வித்யதே** - இவ்விதம் உபாஸிக்கிறவனே முக்தனாகிறான்; இதைத் தவிர்த்து வேறு வழி இல்லை. பரமாத்ம ப்ராப்திக்கு வேறு உபாயமில்லை என்பதை இது தெரிவிக்கிறது.

**இத்யாதிகா:** - இது முதலானவை அந்த வாக்யங்கள். முதலான என்று சொன்னதால், பேத ச்ருதிகளும் உபாஸந சப்தத்துடன் கூடிய ச்ருதிகளும் க்ரஹிக்கப்படுகின்றன.



ஜீவாத்மந: ஸ்வரூபம் தேவமநுஷ்யாதி ப்ரக்ருதி பரிணாம விசேஷரூப நாநாவித பேதரஹிதம் ஜ்ஞாநாநந்தைக குணம்

---

"**ஜீவாத்மந:** - இதுவரையில் உதாஹரிக்கப்பட்டுள்ள ச்ருதி வாக்யங்களில் ஜீவனுடைய ஸ்வரூபமாவது பரமாத்மாவின் ஸ்வரூபமாவது விவரிக்கப்படவில்லையே என்று சங்கித்து, வேதத்திற்கு உபப்ருஹ்மணங்களாகிற ஸ்ம்ருதி புராணம் முதலியவைகளில் அவை உபபாதிக்கப்பட்டிருக்கின்றனவென்றும், ஆகையால் அவை ச்ருதி ப்ரதிபந்நங்களென்றும் நினைத்து அந்த உபபாதனப்படி அந்த ஸ்வரூபங்களை விவரிக்கிறார்.

வாக்யத்தின் அர்த்தம்,— ஜீவாத்மாவின் ஸ்வரூபமானது, தேவதேஹம் மநுஷ்ய தேஹம் முதலிய யாதொரு ப்ரக்ருதி பரிணாம விசேஷம் உண்டோ, அப்படிப்பட்ட எவ்வித பேதமும் இல்லாதது; ஜ்ஞாநத்வம் ஆநந்தத்வம் முதலிய குணங்களுடன் மாத்திரம் கூடினது. கர்மங்களினால் ஏற்பட்டுள்ள தேவமநுஷ்யபேதம் நாசம் அடைந்த பிறகு, அந்த ஜீவாத்மாக்களுக்குப் பரஸ்பரம் ஸ்வரூபத்திலுள்ள பேதம் வார்த்தைகளால் சொல்லமுடியாது; தன்தன்னாலேயே அறிந்து கொள்ளத்தக்கது. ஆகையால், அந்த ஸ்வரூபமானது ஜ்ஞாநஸ்வரூபமென்று மாத்திரம் சொல்லத்தகுந்தது. அது எல்லா ஜீவாத்மாக்களுக்கும் ஸமாநம்.

**தேவமநுஷ்யாதி ......... ரஹிதம்** - 'ஒருவன் தேவன் மற்றொருவன் மநுஷ்யன், என்று வ்யவஹரிக்கப்படும் பேதங்களெல்லாம் தேஹத்தைப் பற்றியவைகளே தவிர ஆத்மாவைப்பற்றியவையல்ல என்று சொல்லப்படுகிறது.

"ததாத்மா ப்ரக்ருதே: ஸங்காதஹம்மாநாதி தூஷித: ।
பஜதே ப்ராக்ருதாந் தர்மாநந்யஸ்தேப்யோ ஹி ஸோऽவ்யய:"

(ப்ரக்ருதியின் விகாரமாகிற தேஹத்தின் ஸம்பந்தத்தால் ஆத்மாவுக்குத் தேஹாத்ம ப்ரமமும் ஸ்வதந்த்ராத்ம ப்ரமமும் இன்னும் இவ்வாறான ப்ராக்ருத தர்மங்கள் ஸம்பவிக்கின்றன; அந்த ஆத்மா இவைகளைக்காட்டிலும் வேறு) என்றும்,

"புமாந் ந தேவோ ந நரோ ந பசுர் ந ச பாதப: ।
சரீராக்ருதிபேதாஸ்து பூபைதே கர்மயோநய:"

(தேவாதி பேதங்களெல்லாம் ஆத்மாவுக்கு இல்லை, சரீரத்திற்கே; இம்மாதிரியான சரீர பேதத்திற்குக் காரணம் கர்மமே) என்றும் உபப்ருஹ்மணங்களில் காணப்படுகின்றன.

**நாநாவிதபேத** - பலவித பேதங்கள். தேவன் மநுஷ்யன் திர்யக் ஸ்தாவரம் என்னும் பேதங்களுடன், 'ஒருவன் ஸுகி, மற்றொருவன் து:கி, இத்யாதியான பேதங்களும் விவக்ஷிதங்கள்.

**ஜ்ஞாநாநந்தைககுணம்** - 'ஜ்ஞாநத்தன்மை ஆநந்தத்தன்மை இவைகளையே குணங்களாக உடையது' என்பது அர்த்தம். சரீரத்தில் [illegible] பேதங்

ணம் | தத் ஏவம்பூதஸ்ய கர்மக்ருத தேவாதிபேதே அபகதே ஸ்வரூப பேதோ வாசாமகோசர: ஸ்வஸம்வேத்ய: | ஜ்ஞானஸ்வரூபம் இத்யேதாவதேவ நிர்தேஶ்யம் | தச்ச ஸர்வேஷாம் ஆத்மனாம் ஸமானம் |

ஸர்வஸ்ய சிதசிதாத்மகப்ரபஞ்சஸ்ய உத்பவ ஸ்திதி ப்ரளய

---

கள் நசித்துவிட்டால், பிறகு ஆத்மாக்களுக்கு எவ்வித பேதமும் சொல்லமுடியாது; எல்லா ஆத்மாக்களுக்கும் ஜ்ஞானானந்த குணகத்வம் ஸமானமாக இருக்கிறபடியால்.

வாசாமகோசர:, ஸ்வஸம்வேத்ய: - ஒரு ஆத்மாவைவிட மற்றொரு ஆத்மா வேறு என்பதைத் தான்தானே அறிந்துகொள்ளும்படி இருக்கும். அதாவது, கர்மக்ருதமான சரீரபேதத்தைக்கொண்டு ஆத்மபேதத்தைச் சொல்லமுடியாதே தவிர, ஸ்வாபாவிகமாக பேதமுண்டு என்பது கருத்து. "ஜ்ஞானஸ்வரூபம் இத்யேதாவதேவ நிர்தேஶ்யம்" - ஆத்ம வஸ்து ஜ்ஞான ஸ்வரூபமென்று மாத்ரம் சொல்லத்தகுந்தது. 'நிர்தேஶ்யம்' என்பதை அந்வயிக்க 'ஆத்மவஸ்து' என்பதை அத்யாஹாரம் செய்துகொள்ளவேண்டும்.

தச்ச ஸர்வேஷாம் ஆத்மனாம் ஸமானம் - அந்த ஜ்ஞானஸ்வரூபம் எல்லா ஆத்மாக்களுக்கும் துல்யம். "நிர்தோஷம் ஹி ஸமம் ப்ரஹ்ம" (சுத்தாத்மாக்களெல்லாம் ஸமமே) என்று ஸ்ரீகீதாசார்யன்.

"ஸர்வஸ்ய" இதி - இதனால் அந்தர்யாமி ஸ்வரூபம் சொல்லப்படுகிறது. இதன் அர்த்தம்:—அந்தர்யாமி ஸ்வரூபமோவென்றால், இப்படிப்பட்ட சேதன அசேதன வஸ்துக்கள் அடங்கிய ப்ரபஞ்சம் முழுவதின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் மோக்ஷம் இவைகளுக்கு ஒரே காரணமாயும், ஸகல ஹேயகுணங்களுமற்று அநந்தமான ஆநந்தத்திற்கு இருப்பிடமாயிருப்பதால் தன்னைத்தவிர்த்த மற்றை எல்லா வஸ்துக்களைக்காட்டிலும் விலக்ஷணமான ஸ்வரூபத்தை உடையதாயும், அளவற்றமேன்மையுடன் பொருந்திய எண்ணமுடியாத கல்யாணகுணக்கூட்டங்களை உடையதாயும், 'ஸர்வாத்மா' 'பரப்ரஹ்மம்' 'பரஞ்ஜ்யோதிஸ்' 'பரதத்வம்' 'பரமாத்மா' 'ஸத்' இவைமுதலிய சப்தபேதங்களால் எல்லா வேதாந்தங்களிலும் ப்ரதிபாதிக்கப்படுவதாயும், ஷாட்குண்ய பரிபூர்ணமாயும், உபய விபூதியையும் உடையதாயுமுள்ள நாராயணனென்றும் புருஷோத்தமனென்றும் சொல்லப்படும் ஸ்வரூபமே. இந்த அந்தர்யாமியினுடைய வைபவத்தை ப்ரதிபாதிக்கும் ஸகல ச்ருதிகளும், அந்த அந்தர்யாமி தன்னைத் தவிர்த்த ஸமஸ்த சேதநாசேதந வஸ்துக்களெல்லாவற்றிற்கும் அந்தராத்மாவாக இருந்துகொண்டு ஸகல வஸ்துக்களையும் நியமித்துக்கொண்டு வருகிறான் என்பதை, 'மற்றை வஸ்துக்களெல்லாம் அவனுடைய சக்தி' 'அவனுடைய அம்சம்' 'அவனுடைய விபூதி' 'அவனுடைய ரூபம்' 'அவனுடைய சரீரம்' 'அவனுடைய தநு' இத்யாதியான சப்தங்களாலும், 'இவையெல்லாம் அவனே' என்னும் ஸாமாநாதிகரண்யத்தைச் சொல்லியும் ப்ரதிபாதிக்கின்றன.



ஸம்ஸாரநிவர்த்தனைகஹேதுபூத:, ஸமஸ்தஹேய ப்ரத்யநீகானந்த கல்யாணைகதானதயா ச ஸ்வேதர ஸமஸ்த வஸ்து விலக்ஷண ஸ்வரூபோ(அ)னவதிகாதிஶயாஸங்க்யேய கல்யாண குணகண: ஸர்வாத்மா பரப்ரஹ்ம பரஞ்ஜ்யோதி: பரதத்வ பர

---

உத்பவ: - ஸ்ருஷ்டி. ஸ்திதி - ஸத்தையின் அநுவ்ருத்தி, அதாவது ஸம்ரக்ஷணம். ப்ரளய - நாசம், அல்லது ஸம்ஹாரம். ஸம்ஸார நிவர்த்தன - மோக்ஷம். ஆக இந்த நாலுக்கும் அவன் ஒருவனே காரணம். 'ஜகஜ்ஜன்மஸ்தித்வம்ஸமஹானந்தைகஹேதவே' என்னும் ஆகமப்ராமாண்ய ச்லோகமும், 'ஜகதுத்பவ ஸ்திதி ப்ரணாஶ ஸம்ஸார விமோசனாதய:' என்னும் ஸ்ரீ ஸ்தோத்ர ரத்ந ச்லோகமும், 'நிகிலஜகதுதய விபவ லய லீலைக காரணம்' என்னும் ஸ்ரீபாஷ்ய வாக்யமும் ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் மோக்ஷம் ஆகிற நாலையும் ப்ரஸ்தாவிக்கின்றன. ஆகையால் அவை இவ்விடத்தில் அநுஸந்தேயங்கள். ப்ருகு வல்லியாகிற உபநிஷத்திலும், 'யதோ வா இமானி பூதானி ஜாயந்தே' என்று ஸ்ருஷ்டியும், 'யேன ஜாதானி ஜீவந்தி' என்று ஸ்திதியும், 'யத்ப்ரயந்தி' என்று மோக்ஷமும், '(யத்) அபிஸம்விஶந்தி' என்று ப்ரளயமும், ஆக நாலுக்கும் காரணம் ப்ரஹ்மமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

ஸமஸ்த......விலக்ஷண ஸ்வரூப: - 'பகவானுடைய ஸ்வரூபம் மற்ற வஸ்துக்களின் ஸ்வரூபம் போலன்று' என்று சொன்னால் போதாதோ? 'ஹேயகுணங்கள் இல்லையாகையாலும் கல்யாணகுணங்கள் நிரம்பியிருக்கையாலும் மற்றை வஸ்துக்களைக்காட்டிலும் விலக்ஷணம்' என்று காரணத்தைச் சொல்லுவானேன்? என்றால், லோகத்தில் ஒவ்வொரு வஸ்துவும் மற்றொரு வஸ்துவைக்காட்டிலும் விலக்ஷணமாயிருக்கிறபடியாலும் கேவலம் வைலக்ஷண்யம் ஏற்றத்துக்குக் காரணமாகாதாகையாலும் இவ்விடத்தில் காரணத்தைக் குறிப்பிட்டு வைலக்ஷண்யம் சொல்லப்பட்டிருக்கிறது. 'கல்யாண' என்பது ஆநந்தத்தைக் குறிக்கின்றது.

அனவதிக......குணகண: - அளவற்ற மேன்மையுடன் கூடிய கல்யாண குணங்களை உடையது அந்த ப்ரஹ்மம் என்று சொன்னதால், அது எல்லாராலும் உபாஸிக்கத்தகுந்த வஸ்து, அடையத்தகுந்ததும் அதுவே என்று விவரிக்கப்படுகிறது.

ஸர்வாத்மா......வேத்ய: - பரமாத்மா, பரப்ரஹ்மம், பரஞ்ஜ்யோதிஸ், பரதத்வம், ஸத் இம்மாதிரியான பதங்களால் பகவான் நாராயணனே ச்ருதிகளிற் சொல்லப்படுகிறான், என்பது கருத்து. இந்த அர்த்தத்தை ஸ்ரீகூரேசன்,

ஸாக்ஷாத் ஸர்வாதி ஸர்வ ஹேதௌ நிர்விகல்ப வேதாந்தவேத்யோ மஹான் நாராயண: ஸர்வவிசேஷாத்த: ஜகத்ஸ்ருஷ்ட்யாதி லீலாப்ரவ்ருத்த: । அஸ்யைவ வைபவ ப்ரதிபாதந பரா: ச்ருதய: ஸகல ஸத்த்வ விசித்ர ஜகத்ஸ்ருஷ்ட்யா நிர்வாஹ நியமநம் தச்சக்தி தத்அம்ச தத்வி

---

'ஜ்யோதி: பரம் பரம் தத்த்வம் பரோ த்யாதா பரம் த்யாநம் ஸ்ருஷ்டி யதா வஸ்யதே - நாராயணஸ்ம்ருதி'

என்று விவரித்திருக்கிறார்.

நாராயண: - இதனால் அவன் இரண்டு விபூதிகளையும் உடையவன் என்றும், ஸர்வவிசேஷாத்த: என்பதனால் தனது விபூதிக்குள்ளடங்கிய மற்றை வஸ்துக்களைக் காட்டிலும் விலக்ஷணன் என்றும் சொல்லப்பட்டது.

அஸ்யைவ......ப்ரதிபாதயந்தி - கீழ்ச்சொல்லப்பட்டதெல்லாம், 'பரமாத்மா வேறு ஜீவாத்மா வேறு' என்று சொல்லும் ச்ருதிகளுக்கு ஒத்திருக்கலாம். 'இரண்டும் ஒன்று' என்று சொல்லும் ச்ருதிகளுக்கு இது விருத்தமன்றோ? என்றால் அதற்கு ஸமாதானம் சொல்லப்படுகின்றது:—'விருத்தமன்று; ஏனென்றால், அம்மாதிரியான அபேத ச்ருதிகளும் பேத ச்ருதிகளால் ப்ரதிபாதிக்கப்படும் நாராயணனுடைய வைபவத்தையே சொல்லுகின்றன. ஸகல வஸ்துக்களுக்கும் அந்தர்யாமியாக இருந்துகொண்டு ஸகலத்தையும் நாராயணனே நியமித்துக்கொண்டு வருகிறான் என்று சொன்னால், அது அவனுடைய பெருமையைக் காண்பிக்கிறதன்றோ? அபேத ச்ருதியின் அர்த்தமும் அம்மாதிரியான நியமநமே.'

தச்சக்தி - 'பரஸ்ய ப்ரஹ்மண: சக்திஸ்ததேதத் அகிலம் ஜகத்' (ஜகத் முழுவதும் அவனுடைய சக்தி); ஜகத் அவனுக்கு சரீரம், ஆகையால் கார்யோபயோகி விசேஷமாகின்றது, ஆகையால் சக்தி. தத்அம்ச - 'விஷ்ணோரம்சோ ஜகத்' (ஜகத் விஷ்ணுவின் அம்சம்); நாராயணன் விசேஷ்யம், ஜகத் அவனுக்கு விசேஷணம், ஆகையால் ஜகத் விசிஷ்டத்தின் அம்சம். தத்விபூதி - 'விஷ்ணோரேதா விபூதய:' (எல்லாம் விஷ்ணுவின் விபூதிகள்); விஷ்ணு நியமிக்கிறவன், ஜகத் நியமிக்கப்படும் வஸ்து, ஆகையால் அது அவனுடைய விபூதி. தத்ரூப தச்சரீர தத்தநு - 'பரஸ்ய ப்ரஹ்மணோ ரூபம்', 'ஜகத் ஸர்வம் சரீரம் தே' 'தாநி ஸர்வாணி தத்வபு:' (எல்லாம் அவனுடைய ரூபம், சரீரம், தநு; விஷ்ணு வ்யாபகன், ஜகத் அவனால் வ்யாபிக்கப்பட்டிருக்கிறது, அவனால் நியமிக்கப்பட்டும் வருகிறது, ஆகையால் அது அவனுடைய



பூதி தத்ரூப தச்சரீர தத்தநு ப்ரப்ருதிபி: சப்தை: தத்ஸாமாநாதிகரண்யேந ச ப்ரதிபாதயந்தி ।

---

சரீரம். ஸம்ஸ்க்ருத பாஷையில் தநு என்றால் சரீரம் என்றே அர்த்தம். இவ்விடத்தில் 'தநு' 'சரீரம்' என்று வேறுவேறாகச்சொன்னது, 'எப்படி இவை இரண்டும் ஒரே அர்த்தத்தைக் குறிக்கின்றனவோ அப்படியே மற்ற 'சக்தி' முதலிய சப்தங்களும் அந்த ஒரு அர்த்தத்தையே குறிக்கின்றன' என்பதை ஸூசிப்பிக்கும்பொருட்டே. 'அவன் அந்தர்யாமியாக இருந்துகொண்டு எல்லாவற்றையும் நியமித்து வருகிறான்' என்பதைத்தான் இந்த சப்தங்களெல்லாம் சொல்லுகின்றன. 'நிர்வாஹ நியமநம் ப்ரதிபாதயந்தி' என்பது அந்வயம். ஸாமாநாதிகரண்யேந ச - கீழ்ச் சொல்லப்பட்டுள்ள சப்தங்கள் அவனுடைய நியமநத்தைச் சொல்வதுபோல, ஸாமாநாதிகரண்யத்தைச் சொல்லும் அபேத ச்ருதிகளும் அவனுடைய நியமநத்தையே காட்டுகின்றன. ஆகையால் எல்லா ச்ருதி வாக்யங்களும் அவனுடைய வைபவத்தையே ப்ரதிபாதிக்கின்றன என்பதில் ஸந்தேஹமே இல்லை.

'ஸாமாநாதிகரண்யம்'—ஸமாநமான அதிகரணத்தை உடைத்தாயிருக்கும் தன்மை. அதாவது - வெவ்வேறு அர்த்தமுள்ள இரண்டு சப்தங்கள் ஒரே பொருளை ஆச்ரயித்து நின்றால் அவைகளை ஸமாநமான அதிகரணத்தை உடையவை (ஸமாநாதிகரணங்கள்) என்றும், வெவ்வேறு பொருள்களை ஆச்ரயித்து நின்றால் வெவ்வேறு அதிகரணங்களை உடையவை (வ்யதிகரணங்கள்) என்றும் வ்யவஹரிப்பார்கள். 'ஜகத் ப்ரஹ்மமே' என்று சொல்லும் இடத்தில் ஜகத் என்னும் சப்தமும் ப்ரஹ்மம் என்னும் சப்தமும் ஒரே பொருளை ஆச்ரயித்திருக்கிறபடியால், அவை ஸமாநாதிகரணங்கள். 'ஜகத் என்பது ஒன்று ப்ரஹ்மம் என்பது மற்றொன்று' என்று சொல்லும் இடத்தில் இரண்டும் வெவ்வேறுபொருளை ஆச்ரயித்திருக்கிறபடியால், அவை வ்யதிகரணங்கள். நமது ஸித்தாந்தத்தில் ப்ரபஞ்சமும் ப்ரஹ்மமும் வெவ்வேறு ஆனதால், அவைகளுக்கு ஸாமாநாதிகரண்யம் இல்லை. இருந்தபோதிலும், ப்ரபஞ்சத்தினுள் ப்ரஹ்மம் அந்தராத்மாவாக இருந்துகொண்டு அதை நியமித்துக்கொண்டு வருகிறபடியால், சரீரத்தைச் சொல்லும் சப்தங்கள் சரீரி பர்யந்தம் போகும் என்னும் ந்யாயப்படி அவைகளுக்கு ஸாமாநாதிகரண்யம் சொல்லக்கூடும். ஆகையால் ஸாமாநாதிகரண்யம் சொல்லும் பொழுதெல்லாம் ப்ரஹ்மத்தின் நியமநம் (எல்லாவஸ்துக்களையும் ப்ரஹ்மம் நியமிக்கிறது என்பது) சொல்லப்படுகிறபடியால், அதன் வைபவம் சொன்னதாகவே ஆகிறது.

இதுவரையில் ஸ்வபக்ஷ ஸங்க்ஷேபம். அதாவது:— சித் என்று சொல்லப்படும் ஜீவன் ஜ்ஞாநாநந்தத்தையே குணமாக உடையவன்; ஜ்ஞாந ஸ்வரூபன்; கர்மமடியாக வேறு வேறு தேஹங்களை அடைகிறான்; அந்தக் கர்மம் நிவ்ருத்தியானால், ஸ்வரூபத்தில் பேதம் இருக்கையிலும், வேறு வேறு தேஹங்களால் பரஸ்பரம் உண்டாகும் பேதம் போய்விடுகிறது; அது போய்விட்டால் ஸகல ஜீவன்களும் ஸமமே; அவர்கள் அவிகாரி. அசித் என்று சொல்லப்படும் ப்ரக்ருதி, ஒருவித பரிணாமத்தை அடைந்து அந்த ஜீவன்களு

த்குக் கர்மமடியாக ஏற்படும் தேஹங்களாக மாறுகின்றது; அது விகாரி. சித் அசித் இவை இரண்டும் சேர்ந்து உத்பந்நமாகி இருக்கும் ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டிப்பவன் பரமாத்மா நாராயணன்; அதை ரக்ஷித்து ஸம்ஹரித்து சேதநவஸ்துவுக்கு அந்தந்தக் காலங்களில் மோக்ஷத்தைக்கொடுத்து வருகிறவனும் அவனே; அவன் ஹேயகுணங்களற்றவன்; ஆநந்தநிதி; மற்றை வஸ்துக்களின் ஸ்வரூபத்தைவிட வேறு விலக்ஷணமான ஸ்வரூபத்தை உடையவன்; அவனைத் தவிர்த்த மற்றை வஸ்துக்களெல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாக இருந்துகொண்டு அவைகளெல்லாவற்றையும் நியமித்து வருகிறான்; அது காரணமாக அவன் சரீரியாகவும் மற்றை வஸ்துக்கள் அவனுடைய சரீரமாகவும் ச்ருதிகளில் சொல்லப்படுகின்றன; அந்தக்காரணத்தினாலேயே அவனே ப்ரபஞ்சம் என்றும் அந்த ச்ருதிகள் சிலவிடங்களில் சொல்லுகின்றன; மற்றும் சில விடங்களில் ப்ரபஞ்சத்தை அவனுடைய அம்சமென்றும் சக்தியென்றும் விபூதியென்றும் பேசுகின்றன; அந்த ச்ருதிகள் அந்த நாராயணனையே ஆத்மாவென்றும் ஜ்யோதிஸ் என்றும் தத்வமென்றும் ஸத் என்றும் வ்யவஹரிக்கின்றன.

இம்மாதிரியான உண்மையான ஜ்ஞாநத்துடன், அந்த நாராயணனால் சொல்லப்பட்டுள்ள வர்ணாச்ரம தர்மத்தை லோபமின்றிக்கு ச்ரத்தையுடன் அவனது ஆராதநமாகச் செய்துகொண்டு, அவனுடைய திருவடிகளில் த்யாந அர்ச்சந ப்ரணாம நாமஸங்கீர்த்தநம் முதலிய உபாஸநத்தை அத்யர்த்தமான ப்ரீதியுடன் செய்துவந்தால், தமது கர்மம் நிவ்ருத்தமாகி, வேறு வாக்யார்த்த ஜ்ஞாநம் முதலியவற்றால் மாத்திரம் போக்கடிக்கக்கூடாத ஸம்ஸார பயத்தினின்றும் கரையேறினவர்களாய், தமது ஸ்வரூபாவிர்ப்பாவத்தைப் பெற்று அளவற்ற ஆநந்தத்தைக் கொடுக்கும் ப்ரஹ்மாநுபவத்தை ஸகல ஜீவன்களும் அடைகிறார்கள். ச்ருதிகள் சொல்வது இதுதான்.

இதுவரையில் ஸ்வபக்ஷ ஸங்க்ஷேபம் சொல்லப்பட்டது. இப்பொழுது 'ஸத்யம்' என்று ஆரம்பித்து 'நிர்குணம்' என்னும்வரையில் சங்கர மதத்தையும், 'அபரே' என்று ஆரம்பித்து 'வ்யவஸ்திதா:' என்னும்வரையில் பாஸ்கரமதத்தையும், 'அந்யே' என்று ஆரம்பித்து 'ப்ரதிஷ்டிதே' என்னும்வரையில் யாதவமதத்தையும் ஸங்க்ரஹிக்கிறார். இம்மூன்று மத ப்ரவர்த்தகர்களும், 'ப்ரஹ்மமே ஜகத்' என்னும் அர்த்தமுள்ள அபேத ச்ருதிவாக்யங்களையே பலிஷ்டங்களாகநினைத்து, 'இரண்டும் ஒன்றே' என்று அங்கீகரியாவிட்டால் இந்த வாக்யங்களுக்கு விரோதம் வந்துவிடுமோ என்னும் பயத்துடன் தங்கள் தங்கள் மதத்தை ப்ரவ்ருத்திப்பித்திருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும். 'ப்ரஹ்மமும் ஜகத்தும் வேறு' என்னும் அர்த்தமுள்ள பேத ச்ருதி வாக்யங்களை அவர்கள் எக்காரணத்தினாலோ அநாதரித்துவிட்டார்கள். பரஸ்பரம் விருத்தம்போலத் தோன்றும் பேத அபேத ச்ருதி வாக்யங்களை ஸமந்வயம் செய்யும் 'ஜகத் ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உடைத்தானது' என்னும் அர்த்தமுள்ள கடக ச்ருதிவாக்யங்கள் அவர்களுக்கு ஸ்புரிக்கவில்லை போலும்.



பூயோ நமோऽபரிமிதாச்யுத பக்தி தத்வ
ஜ்ஞாநாம்ருதாப்தி பரிவாஹ ஶுபைர் வசோபி: |

(3) த்ருஷார்த்தனுக்குத் தண்ணீர் குடிக்கக் குடிக்கப் பர்யாப்தி பிறவாதாப்போலே, பின்னையும் அவர்க்கடியேன் என்கிறார். ஆச்ரிதரை ஒருகாலும் நழுவவிடாத அச்யுத விஷயத்திலே ஜ்ஞாந பக்த்யாதிகளாகையாலே, தம்மளவில் பர்யவஸியாதே பகவத் விஷயத்துக்கு அபூமியான ஸம்ஸாரமெங்கும் வெள்ளமிடும்படியான இவருடைய ஜ்ஞாந பக்திகளுடைய ப்ரக்ருஷ்டதையைச் சொல்லுகிறார்.

பூயோ நம: - புநஶ்ச நம: - 'நமோ நமஸ்தே' என்கிறபடியே.

அபரிமித - கிடந்தபாயிலே வெள்ளங்கோத்தாப்போலே இருந்தவிடங்களிலே வந்துகிட்டும்படி எல்லையிறந்திருக்கை.

அச்யுத - நியந்த்ருத்வ ஸ்வாமித்வ கல்யாணகுணங்களாலே குறைவற்றிருக்கை என்னுதல்; ஏகரூபமாயிருக்குமென்னுதல்; என்றும் ஆச்ரிதார்த்தமா யிருக்கும் இருப்பை நழுவவிடாதவன் என்னுதல்; 'ஆர்ந்த புக ழச்சுதன்' என்றும், 'நமன்றமர்க் கருநஞ்சினை யச்சுதன்தன்னை' என்கிறபடியே ஆச்ரிதரைத் தந்தாம் கையிலும் பிறர் கையிலும் காட்டிக்கொடாதவனென்னுதல்.

பக்திதத்வஜ்ஞாநாம்ருதாப்தி பரிவாஹ ஶுபைர் வசோபி: - பக்தி தத்வஜ்ஞாநங்களாகிற அம்ருதாப்தியினுடைய பரிவாஹரூபமான சுபமான வசஸ்ஸுக்களாலே. உபாயம் ஈச்வரனுகையாலே, ஜ்ஞாந பக்திகள் போகரூபமாய் அபரிச்சிந்நமாயிருக்குமென்கை. பரிவாஹமாவது—அவ்வவ ரக்ஷணார்த்தமாக அதிக ஜலநிர்க்கமந ஸ்ரோதஸ். வசஸ்ஸுக்களுக்கு சுபத்வமாவது— 'ஶ்ருதி ஸ்ம்ருதி' இத்யாதிகளை உடைத்தாயிருக்கை.

லோகே - பகவத்பக்திக்கு மேட்டுமடையான ஸம்ஸாரத்தில். 'யேஷா ஸா மாதுலீ வாருணீ வித்யா பரமே வ்யோமந் ப்ரதிஷ்டிதா' என்று பரமபதத்தில் பரிமாறக்கடவ பக்தியை, 'நான்முகனார் பெற்ற நாட்டுளே நற்பாலுக் குய்த்தனன்' என்கிறபடியே ஸம்ஸாரத்தில் நடையாடும்படி பண்ணினபடி.

லோகே(அ)வதீர்ண பரமார்த்த ஸமக்ர பக்தி
யோகாய நாதமுநயே யமிநாம் வராய ||
தத்த்வேந யச்சிதசிதீச்வர தத்ஸ்வபாவ
போகாபவர்க ததுபாய கதீருதார: |

---

அவதீர்ண - ஈச்வராவதாரம்போலேயிறே ஸ்வயம் ப்ரயோஜநமான பக்த்யவதாரம்.

பரமார்த்த - பரம ப்ரயோஜந ரூபமாயிருக்கை.

ஸமக்ர - 'அதனில் பெரிய' வென்னும்படி குறைவற்றிருக்கை.

பக்தியோகாய - பக்தியை உடையரான. உக்தமான பக்தி தத்வஜ்ஞாநங்களிரண்டையும் சொல்லிற்று, இரண்டு மொருசீரானபடியாலே.

யமிநாம் வராய - 'முடியானே'யில் சொல்லுகிறபடியே, அவனையல்லதறியாத கரணங்களையுடையரா யிருப்பார்க்குத் தலைவரானவர்க்கு. 'வாயவனையல்லது வாழ்த்தாது' என்றிருக்குமவர்களுக்கு வரணீயராயிருக்குமவர் என்றுமாம்.

அபரிமிதாச்யுத பக்தி தத்த்வஜ்ஞாநாம்ருதாப்தி பரிவாஹ ஶுபைர் வசோபி: லோகே(அ)வதீர்ண பரமார்த்த ஸமக்ர பக்தியோகாய யமிநாம் வராய நாதமுநயே பூயோ நம:.

(4) தத்த்வேநேதி - பெரியமுதலியார் ஜ்ஞாநத்துக்கு, லோகபரிக்ரஹமாத்ரமன்றிக்கே, வேதவிதக்ரேஸர பராசராநுமதியாலே ப்ராமாணிகத்வமுண்டென்று இவ்வர்த்தத்தினுடைய ப்ராமாணிகத்வம் சொல்லுகிறது. கிஞ்ச-இவர்க்கும் ஸ்ரீ பராசர பகவானுக்கும் ஸ்வபாவைக்யமுண்டு. க்ருஷ்ணப்ராவண்யமும், லோகத்துக்குப் பண்ணின ஔதார்யமும் இவர்க்குமுண்டு. அத்தாலும் அவரை நமஸ்கரிக்கிறார்.

தத்த்வேந - ஜ்ஞாதவ்யார்த்தங்களை உள்ளபடியே காட்டுகை.

ய: - "ஸஹோவாச வ்யாஸ: பாராசர்ய:" என்கிற ப்ரமாணப்ரஸித்தியை ப்ரகாசிப்பிக்கிறது.

சித் - ஜ்ஞாதா; அத்ர பராசர: 'ஶுத்த: ஶாந்தோ(அ)க்ஷரோ(அ)ப்ரமேயோ நிர்வாண: ப்ரக்ருதே: பர:' 'ப்ரத்யக்ஸ்வயம்ப்ரகாஶாத்மா ஜ்ஞாநஸ்வரூப வி...



---

...ஷ:' இத்யாதி. இதில் நிர்க்குணத்வமாவது ஸத்வாதி குண ராஹித்யம். 'ஜ்ஞாநஸ்வரூப ஏகோ(அ)யம்' - தேவதிர்யங்மநுஷ்யாக்யாதி ஸர்வப்ரகாரவிஷ... 'ஜ்ஞாநஸ்வரூப' - ஜ்ஞாநைகாகாரதயா ஸர்வஸ்ய ஜ்ஞாபகத்வம். 'நிர்வாணமய ஏவாயம்' 'ஜ்ஞாநமயோ(அ)மல:' இதி ஸமவதேதவோக்தம்.

அசித் - ஸம்ஜ்ஞாவத்தான அசேதநம். 'விகாரஜநநீமஜ்ஞாம்' இத்யாதிவிஷய. அத்ராபி பராசர: 'த்ரிகுணம் தஜ்ஜகத்யோநி அநாதி ப்ரபவாப்யயம் | அசேதநம்' இத்யாதி.

ஈச்வர - உபயோர் நியந்தாவான ஸ்வாமி. அத்ராபி பராசர:- "பரமாத்மா ச ஸர்வேஷாம் ஆதார: பரமேச்வர: | விஷ்ணுநாமா ஸ வேதேஷு வேதாந்தேஷு ச கீயதே | பர: பராணாம் பரம: பரமாத்மாத்ம ஸம்ஸ்தித: | ரூபவர்ணாதிநிர்தேச விசேஷண விவர்ஜித: || அபக்ஷயவிநாசாப்யாம் பரிணாமர்த்திஜந்மபி: | வர்ஜித: ஶக்யதே வக்தும் ய: ஸதாஸ்தீதி கேவலம் ||" இத்யாதி.

தத்ஸ்வபாவ - தேஷாம் ஸ்வபாவ:; அத்ர ச ஸ:- 'ப்ரதாநஞ்ச புமாம்ஶ்சைவ ஸர்வபூதாத்மபூதயா | விஷ்ணுஶக்த்யா மஹாபுத்தே வ்ருதௌ ஸம்ஶ்ரயதர்மிணௌ ||" இத்யாதி.

போக - ப்ரஹ்மாதி பிபீலிகாந்தமான பத்த சேதந வர்க்கத்துக்குக் கர்மாநுகுணமாகத் தாரதம்யேந அநுபாவ்யமான சப்தாதிகள்.

அபவர்க - சப்தாதிகளுடைய அல்பாஸ்திரத்வாதி தோஷதர்சநத்தாலே பீதரான சேதநருக்குத் துக்கநிவ்ருத்திரூபமான ஆத்மப்ராப்தியும், ஸுகைகதாநமான பகவத்ப்ராப்தியும். அத்ராபி ஸ: - 'யோகிநாமம்ருதம் ஸ்தாநம் ஸ்வாத்மஸந்தோஷகாரிணாம் | தஸ்ய ஶ்ரீவிஷ்ணோ: பரமம் பதம்' இத்யாரப்ய, 'நிரஸ்தாதிஶயாஹ்லாத ஸுகபாவைகலக்ஷணா | பேஷஜம் பகவத்ப்ராப்திரேகாந்தாத்யந்திகீ மதா' இத்யாதி.

ததுபாயகதீ: - போகமோக்ஷங்களுடைய ஸாதநபேதங்களை. நித்ய நைமித்திக காம்ய கர்மாநுஷ்டாநம் போகஸ்ய. ஸாங்கராத்ருஷ்டித கர்மயுக்ஜ்ஞாந யோகாதி ஆத்மப்ராப்தே:. ஜ்ஞாநகர்மாநுக்ருஹீதா பக்தி: பகவத்ப்ராப்தே:.

ஸந்தர்ஶயந் நிரமிமீத புராணரத்நம்
தஸ்மை நமோ முநிவராய பராஶராய ॥ 4.

---

உதார꞉ - ஸம்ஸாரிகள் பக்கல் அர்த்தித்வமாதல் ப்ரயோஜநமாதல் நினையாதே இவர்கள் அநர்த்தபரிஹாரமே ப்ரயோஜநமாக உபகரித்தல்லது நிற்கமாட்டாத மேகம்போல உபகரித்தவர்.

ஸந்தர்ஶயந் - ஸம்சய விபர்யய ரஹிதமாக ப்ரத்யக்ஷிபா நின்று கொண்டு.

நிரமிமீத - 'அந்தாதி மேலிட்டறிவித்தே னாழ்பொருளை' என்கிற படியே, துரவகாஹமான வேதார்த்தத்தை அல்ப க்ரந்தத்தாலே பண்ணி னான் என்கை.

புராணரத்நம் - புராணமாவது, 'ஸர்கஶ்ச ப்ரதிஸர்கஶ்ச' உதாஹ்ருத 'புராணம் பஞ்சலக்ஷணம்' என்கிறபடியே, பஞ்சலக்ஷணோபேத மான க்ரந்த ஜாதம். புராணமபி நவம் புராணம் என்றுமாம்; அதாவது, ஸ்வரஸத்தை என்றுமொக்க ஒருவரால் அழிக்கவொண்ணு திருக்கை.

ரத்நம் - அர்த்தப்ரகாசகமா யிருக்கையும், ஸங்க்ரஹமா யிருக்கையும், ஆபத்ரக்ஷகமாயிருக்கையும், இந்தப் புராணதிகாரிக்கு லோகபரிக்ரஹம் ஸித்திக்கையும்.

முநிவராய - தனக்கு வரங் கொடுத்த வஸிஷ்ட புலஸ்த்யர்களுக்கு முத்ரிதாமுத்ரித ப்ரதிமுத்ரிதாய், அத்தாலே அவர்கள்படியை யுடை வன் என்னுதல். 'முநீநாம் வரணீயாய' என்கிறபடியே அவர்களுக்கு ஆதரணீயன் என்னுதல்.

பராஶராய - பராகிருர் பாஹ்ய குத்ருஷ்டிகள். அவரை ப்ரமாண சரங்களாலே ஹிம்ஸித்து, வைதிக மர்யாதையை ஸ்தாபித்தானென்னுதல். இந்த்ரியஜயத்தாலே ரஜஸ் தமஸ்ஸுக்களை ஜயித்தான் என்னுதல்.

ய꞉ உதார꞉ சிதசிதீஶ்வர தத்ஸ்வபாவ போகாபவர்க ததுபாய கதீ꞉, தத்த்வேந ஸந்தர்ஶயந், புராணரத்நம் நிரமிமீத, முநிவராய தஸ்மை பராஶராய நம꞉.



மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி꞉
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் ।

---

(5) மாதேதி - இந்த ஜ்ஞாநம், அதிக்ருதாதிகாரமாய்ப் போகாமே ஸர்வாதிகாரமாம்படி, த்ராவிடமான ப்ரஹ்ம ஸம்ஹிதையை, "மயர்வறமதி நல மருளினன்' என்கிற பக்தியாலே வாஸிதமாக்கி, 'மரங்களு மிரங்கும் வகை' என்கிற தம்முடைய ஆகர்ஷகமான வீரச்சொல்லாலே அருளிச் செய்கையாலும், பெரியமுதலியாருக்கு இந்த ஜ்ஞாநத்துக்கு உத்பாதகம் ஆழ்வார் திருவடிகளாகையாலும், இவர் திருவடிகளிலே விழுகிறார். 'எத்திறம்!' என்றும், 'நெய்யுண்வார்த்தையுள் அன்னைகோல் கொள்ள' என்றும், 'எல்லாம் கண்ணன்' என்றும் பெரியமுதலியாரையும் ஸ்ரீபராசர பக வானையும்போலே க்ருஷ்ண குணவித்தரா யிருக்கும்படியையும் நினைத்து, ஆழ்வார் திருவடிகளிலே சரணம் புகுகிறார்.

மாதா - உத்பத்திக்கு முன்னே வரங்கிடந்து பெறுகைக்கு வருந்திப் பத்துமாஸம் கர்ப்பதாரணம் பண்ணி, ப்ரஸவ வேதனையை அநுபவித்து, அசுத்திகளையும் மதியாதே பால்யதசையில் ஆதரித்து, பக்வனானாலும் இவன் பருஷபாஷணம் பண்ணப் பொறுத்து, அகல இசையாதே, அவன் ப்ரியத்தையே வேண்டியிருக்கும் மாதாவைப்போலவே உபகாரகனாயிருக்கை.

பிதா - அவள் பாத்ரமாத்ரம் என்னும்படி உத்பாதகனாய், என்று மொக்க ஹிதபரனான பிதாவும்.

யுவதய꞉ - இருவரையும் மறந்து விரும்பும் யுவதிகளைப்போலே நெஞ்சுக்கு இனியராயிருக்கை.

தநயா꞉ - அவளுடைய யௌவநத்தை அழியமாறப் பெற்றவனாய், பக்வதசையில் ரக்ஷகனாய், ஆமுஷ்மிகத்தில் நிரய நிஸ்தாரகனான புத்ரனைப் போலே இருக்கை.

விபூதி꞉ - விபவ மில்லாதபோது இவையெல்லாம் அஸத் ஸமமா யிருக்கையாலே இவற்றை நன்றாக்கும் ஐச்வர்யம் போலே உத்தேச்யமாய் இருக்குமவர்.

ஸர்வம் - அநுக்தமான ஸர்வ போகங்களுமாய் இருக்கை.

யதேவ - அவதாரணத்தாலே "சேலேய் கண்ணியர்" என்றிருக்கும் ஆழ்வார் நினைவின்றி இருக்கை.

ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுலாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகலம் ப்ரணமாமி மூர்த்நா ॥ 5.

---

நியமேந - என்றுமொக்க. அவருக்கு ப்ரியமென்று போமதொழிய ப்ராமாதிகமாகவும் புறம் போவதன்றிக்கே இருக்கை.

மதந்வயாநாம் - "வித்யயா ஜந்மநா வா" என்று உபய ஸந்தாந ஜாதருக்கும்.

ஆத்யஸ்ய - வைதிக ஸந்தாநத்துக்கு ப்ரதமாசார்யராய் இருக்கை.

ந: குலபதே: - ஸ்த்ரீக்குப் பர்த்ருகுலம்போலே கோத்ர ரிஷிகளும் அவரே என்கை.

வகுலாபிராமம் - திருமகிழ் மாலையாலே அலங்க்ருதமாயுள்ளத்தை. மகிழலங்காரமான திருவடிகள். இத்தாலே திருவடிகளில் பரிமளத்தாலே வந்த போக்யதையைச் சொல்லுகிறது. 'நல்லடி மேலணி நாறு துழா'யை வ்யாவர்த்திக்கிறது.

ஸ்ரீமத் - ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயோடே நித்யஸம்யுக்தமாய் இருக்கை. "அந்தரிக்ஷகத: ஸ்ரீமாந்" "ஸ து நாகவர: ஸ்ரீமாந்" "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" என்று பகவத் ப்ரத்யாஸத்தியை ஐச்வர்யமாகச் சொல்லக்கடவதிறே. என்னுடைய ஸம்பந்தத்துக் கடியான ஐச்வர்யத்தை யுடையவர் என்றுமாம்.

தத் - அதுவென்னும் இத்தனையொழிய, பேசிமுடிக்க வொண்ணாதென்கை.

அங்க்ரி யுகலம் - சேர்த்தியில் வந்த அழகை உடைத்தாயிருக்கை.

ப்ரணமாமி மூர்த்நா - ஆழ்வாருடைய திருவடிகளை நினைத்தவாறே, நம: என்று நிற்கமாட்டாதே, அவர் திருவடிகளிலே தலை சேர்க்கிறார். ஒருவருக்குச் சேஷிகள் இருவராம்படியிருக்கை எங்ஙனே யென்னில், க்ரது சேஷித்வம் யாகத்துக்கும் புரோடாசத்துக்கும் உண்டானாற்போலே, ஈச்வரன் ப்ரதாநசேஷியாய், ததீயர் த்வாரசேஷிகளாமிடத்தில் விரோதமில்லை. அதவா, நிருபாதிகசேஷி அவன், தத்ஸம்பந்தமடியாக வந்ததாகையாலே பாகவத சேஷத்வம் ஸோபாதிகம் என்றுமாம்.

முதல் மூன்று ச்லோகத்தாலே, பெரியமுதலியாருடைய ஜ்ஞாந பக்த்யாதிக்யம் சொன்னார்; நாலாம் ச்லோகத்தாலே இவ்வர்த்தம் த்ரைவித்ய வ்ருத்தாநுமதம் என்கிறார்; அஞ்சாம் ச்லோகத்தாலே, இவருக்கு இந்த ஜ்ஞாநம் ஆழ்வாராலே வந்தது என்கிறார்.



யந்மூர்த்நி மே ச்ருதிசிரஸ்ஸு ச பாதி யஸ்மிந்
அஸ்மந்மநோரதபத: ஸகல: ஸமேதி।

---

மதந்வயாநாம் ஸர்வம் நியமேந மாதா பிதா யுவதய: தநயா விபூதி: ஸர்வம் யதேவ, ஆத்யஸ்ய ந: குலபதே: வகுலாபிராமம் ஸ்ரீமத் ததங்க்ரியுகலம் மூர்த்நா ப்ரணமாமி.

(6) 'யந்மூர்த்நி' இதி - 'அறியாதன வறிவித்த வத்தா நீசெய்தன' என்று உபகாரத்தில் ப்ரதமனா யிருக்குமிறே. 'வைகுந்தனைப் புகழ்' என்கிற படியே தம்முடைய ஸ்துதி ஈச்வரனுக்கு அபிமதமாகையாலும், இதுதான் ஆசார்யர்களுக்கு ப்ரியமாகையாலும், ஸ்தோத்ரத்தில் மேல் சொல்லப்படுகிற உபாயோபேயங்களை ஸங்க்ரஹித்துக்கொண்டு உபக்ரமித்தபடியே பகவத் ஸ்தோத்ரத்திலே இழிகிறார்.

மே மூர்த்நி - தம்முடைய நிஹீநதாதிசயத்தையும், ஸௌந்தர்யாதிகளிலே தோற்று அத்தாலே வந்த சேஷத்வத்தையும், அந்தகாரத்தில் தீபம் போலே தம்முடைய திருமுடியிலே வந்தபின்பு திருவடிகள் மிகவும் விளங்கினபடியையும் சொல்லுகிறது. இத்தால் அவனுடைய உபாய பாவத்துக்கு ஏகாந்தமான ஸௌலப்யாதிகளையும், இத்தலையில் விஷயீகாரம் தன் பேறாக நினைத்திருக்குமென்றும் சொல்லுகிறது. 'தலைக்கணியாய்' என்று சேஷபூதர் ப்ரார்த்திக்குமத்தைப் பெற்றேனென்கிறார். சேஷியாகையாலே ஸர்வவிஷயங்களிலும் அவனிருக்கும்படி இது, க்ருதஜ்ஞராகையாலே பேசுகிறார்.

ச்ருதிசிரஸ்ஸு ச பாதி - ச்ருதி சிரஸ்ஸுக்களிலும் விளங்காநின்றது. இத்தால் ப்ராப்யத்வமும், ஸர்வாதிகாரத்வமும், ஸர்வமங்களாகாரத்வமும், அதிதுர்லபத்வமும் சொல்லுகிறது. 'ச' காரத்தாலே, வேதாந்தங்களிலும் தம் தலையிலு மொக்க திருவடிகளைத் தரமிடாதே வைத்தபடியாலே, தம்பக்கல் அவனுக்கு உண்டான ஆதராதிசயம் சொல்லுகிறார். 'ச' சப்தம் ஜநகமரணத்திலேயாய், தம்முடைய தலையிலே அந்வயித்த ஸௌலப்யமே திருவடிகளுக்கு ஸ்வரூபமென்றதாகவுமாம். 'திருப்பாற்கடலே என்தலையே' என்னுமாப்போலே.

யஸ்மிந் அஸ்மந்மநோரதபத: ஸகல: ஸமேதி - "பிதா த்வம் மாதா த்வம்" இத்யாதிகளான என்னுடைய ஐஹிகாமுஷ்மிக ஸகல மநோரதங்களும் அழகியதாக யாதொன்றிலே சேருகிறது.

ஸ்தோஷ்யாமி ந: குலதநம் குலதைவதம் தத்
பாதாரவிந்தமரவிந்தவிலோசநஸ்ய ॥
தத்த்வேந யஸ்ய மஹிமார்ணவஶீகராணு:
ஶக்யோ ந மாதுமபி ஶர்வபிதாமஹாத்யை: ।

---

ஸ்தோஷ்யாமி - இப்படி ப்ராப்யமுமாய், விலக்ஷணமுமாய், உபகாரகமுமான திருவடிகளிலே வாசிகமான அடிமை செய்கிறேன்.

ந: குலதநம் - தநமாவது, ஆபத்ரக்ஷகமுமாய், நித்யபோக்யமுமாயிருக்குமது. குலதநம் என்கையாலே அயத்ந ஸித்தமுமாய் ஸ்வத: ப்ராப்தமுமா யிருக்கை.

குலதைவதம் - இத்தநத்தைத் தருமதாய் ஆச்ரயணீயமாய் இருக்குமது. இத்தால், ஸ்தோத்ர ப்ரதிபாத்யமான ப்ராப்ய ப்ராபகங்களைச் சொல்லுகிறது.

தத்பாதாரவிந்தம் - உக்த ஸ்வபாவமான திருவடித் தாமரைகளை.

அரவிந்தவிலோசநஸ்ய - "ஜிதந்தே புண்டரீகாக்ஷ" என்று ருசிஜநகமுமாய், "தன்பால் பணிந்த வென்பால் எம்பிரான் தடங் கண்கள்" என்று வத்ஸலமுமாய், "தாமரைக் கண்ணனை விண்ணோர்பரவும் தலைமகனை", என்று ஸர்வபோக்யமுமான திருக்கண்களையுடையவனுடைய.

யந்மூர்த்நி மே ஶ்ருதிஶிரஸ்ஸு ச பாதி, யஸ்மிந் அஸ்மந்மநோரதபதஸ் ஸகலஸ் ஸமேதி, ந: குலதநம் குலதைவதம் அரவிந்தவிலோசநஸ்ய தத்பாதாரவிந்தம் ஸ்தோஷ்யாமி.

(7) தத்த்வேநேதி - விதிசிவ ஸநகாதிகள் கரைபற்றிலே நின்று அழுந்துகிற விஷயத்தைப் பரிச்சேதித்துப் புகழவிழிந்தேனென்று தம்மை க்ஷேபித்து, யுத்தத்திலே உத்யுக்தனை அர்ஜுநன், 'விஸ்ருஜ்ய ஸஶரம் சாபம்' என்று நிவ்ருத்தனைப்போலே, ஸ்தோத்ரத்தில் நின்றும் நிவ்ருத்தராகிறார்.

தத்த்வேந - ஈச்வரனுடைய ஸ்வரூப ரூபாதிகள் இருந்தபடியே.

யஸ்ய - 'யதோ வாசோ நிவர்த்தந்தே' இத்யாதிகளிலே அநந்தகுணகனாக ப்ரஸித்தனானவனுடைய,

சென்னை-600 005.
186767